# தொடரியங்கள்

( ர ற )




ஆசிரியர்:

வித்துவான் க.சொக்கலிங்கம் எம்.ஏ
(சொக்கன்)

தமிழ் வளர்ச்சிக்கழகம்

1. 20
PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI
D-11

# தொடரியங்கள்

## ['ர', 'ற']

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: 7-74
திகதி:

வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ.
(சொக்கன்)

வெளியீடு

**தமிழ் வளர்ச்சிக் கழகம்,**
**தமிழீழம்.**

வெளியிடும் நாள்:- 1995-03-15

வெளியிடுவோர்:- தமிழ் வளர்ச்சிக்கழகம்,
தமிழீழம்.

அச்சுப் பதிப்பு:- தாசன் அச்சகம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா .....

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: T-74
திகதி:

# அணிந்துரை

எம்மருந் தாய் மொழியாம் தமிழ்மொழியை எழுத்துப் பிழை சொற்பிழை பொருட்பிழையின்றிப் பயன்படுத்த இயலாதவர் தொகை கற்றவர்களிடையேயும் அண்மைக் காலமாக மிகுந்து வருகிறது.

'ர'கர 'ற'கர, 'ழ'கர 'ள'கர 'ல'கர, 'ண'கர, 'ன'கர வேறுபாடுகள்பற்றித் தெரிந்து கொள்ளாததினாலேயே பெரும்பாலான எழுத்துப்பிழைகள் ஏற்படுகின்றன. எழுத்துப்பிழையைப் பொருட்படுத்தாது விட்டால் அது சொற்பிழையாக, பொருட்பிழையாக மட்டுமன்றி, பொருள் மாற்றத்தையே ஏற்படுத்திவிடும்.

'ர'கர 'ற'கர, 'ழ'கர, 'ள'கர 'ல'கர, 'ண' கர 'ன'கர வேறுபாடுகள்பற்றியும், அவற்றாலெழும் பொருள் வேறுபாடுகள் பற்றியும் தெளிவினை ஏற்படுத்துவதனூடாகத் தமிழ்மொழியைக் கற்கின்ற மாணாக்கரிடையே எழுத்துப் பிழைவிடும் தன்மையைக் குறைத்து விடலாம் என்ற எண்ணத்தில் தமிழறிஞர் சொக்கன் அவர்களின் அயரா முயற்சியில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நூலிலே 'ர'கர 'ற'கர வேறுபாடுகளையுடைய சொற்களை அகர வரிசைப்படுத்தி ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்தி எடுத்துக்காட்டாகத் தொடரியங்களையும் அமைத்திருப்பதானது மாணாக்கர்களுக்கு 'ர'கர 'ற'கர வேறுபாடுகளை எளிதில் விளங்க வைப்பதாக அமைந்திருக்கின்றது.

அதனோடு பிறமொழிச் சொற்களை வேறுபடுத்திக் காட்டியிருப்பதும் மொழித்தூய்மை பேண நினைப்பவர்களுக்குப் பெருந்துணையாக அமைகின்றது.

இந்நூலையும் அடுத்து வரவிருக்கின்ற 'ழ'கர 'ள'கர 'ல'கர, 'ண'கர 'ன'கர வேறுபாடுகளை விளக்கும் நூல்களையும் மாணாக்கர் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற அவாவோடு முதற்படியாக இந்நூலை வெளியிடுவதில் தமிழ் வளர்ச்சிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது.

வெ. இளங்குமரன்
பொறுப்பாளர்,
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
தமிழீழம்.

# முகவுரை

இந்நூற்றாண்டின் நடுப்பகுதிவரை, மொழி கற்பித்தலிலே கையாளப்பட்டுவந்த முறை எழுத்து, சொல், தொடரியம் என்ற படிமுறை ஒழுங்கில் அமைந்தது. புதியமுறை இதற்கு நேர் மாறானது. தொடரியம், சொல், எழுத்து என்ற ஒழுங்கு இன்று கையாளப்படுகின்றது. பழைய முறையிலே கற்றோர் எழுத்துப் பிழைகளோ, சொற்பிழைகளோ, தொடரியப்பிழை களோ பெரும்பாலும் விடுவதில்லை. எழுத்துக்களின் ஒலி வேறு பாட்டையும், சொற்களின் அடிநிலைகளையும் (Roots) அறிந்து கொண்டு, அடிப்படை இலக்கண அறிவோடு மொழியைக் கற்றதன் பயனே, இந்தத் தேர்ச்சி எனலாம். புதிய முறையிலே கற்போர் எழுத்தின் வடிவத்தை, ஒலி வேறுபாட்டை, சொல் லமைப்பை, தொடரிய ஒழுங்கை அறியக்கூடிய வாய்ப்புக்கள் பெறாதநிலையிலே, அவர்களின் மொழிக் கையாளுகை பிழைகள் பல மலிந்து காணப்படுவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

''மக்கள் நடைமுறைப்படுத்திவரும் மொழியே உயிருள்ள மொழி. எழுத்துமொழி செயற்கையானது. அது இலக்கணத் தின் தேவையை அவாவி நிற்பது. அதனைக் கைவிட்டுப் பேச்சு மொழியையே எழுத்து மொழியாகவும் கையாளல் வேண்டும். அதுவே இயல்பானது. எழுத்துப்பிழை, சொற்பிழை என்பன பெரிதுபடுத்தப்பட வேண்டியனவல்ல. அவ்வாறு பெரிதுபடுத்துவ தால் மொழியின் வளர்ச்சி குன்றும்'' என்ற குரல், மொழியிய லாளரிடமிருந்து எழுகிறது. அந்தக் குரலே மேலோங்கினால், அதனையே மொழி கற்பித்தலிலே முதன்மையாகக் கையாண் டால், எமது மொழி எதிர்காலத்தில் என்னாகும் என்பதும் தமிழறிந்தோரின் கேள்வியாக முனைத்து நிற்கக் காண் கின்றோம்.

ஆய்வு நிலையிலும் ஆக்க இலக்கிய நிலையிலும் மொழியிய லாளரின் கோட்பாடு ஏற்புடையதாகலாம். ஆனால், தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலை மாணாக்கருக்கு அளிக்கப்படும் மொழிக்கல்வியிலே, அது புகுந்துவிடுமேயானால், பேரிடை யூறுக்கே வழிவகுக்கும் என்பதை நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் கற்பித்த எனது பட்டறிவு கொண்டு அழுத்தந்திருத்த மாகக் கூறவிரும்புகின்றேன்.

எழுத்தின் ஒலிவடிவத்தை மொழியியலார் ஒலியன் (Phoneme) என்பர். எழுத்தொலிபற்றிய அறிவியலை எழுத்தொலியியல் (Phonemics) என்பர். தமிழிலே எழுத்தொலியியலுக்கு இணையாகப் பிறப்பியல் உள்ளது. ஒலியானது, மொழி (சொல்)க்கு முதற்காரணமாய் அமைகையில் அது எழுத்தாகின்றது என்பது தமிழிலக்கணவியலாரின் முடிபு. இந்த ஒலியானது எவ்வுறுப்புக்களை இடமாகக்கொண்டு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைத் தொல்காப்பியமும் நன்னூலும் தத்தமக்குத் தோற்றியவாறு புலப்படுத்துகின்றன. இவற்றில், தொல்காப்பியம் கூறும் எழுத்துப் பிறப்பு முறையை மொழியியலார் பெரும்பாலும் பொருத்தமானது என்று ஏற்றுக்கொள்வர்.

இவ்வாறு பிறக்கின்ற எழுத்துக்களிலே பெருமளவு மயக்கத்தையும், அந்த மயக்கத்தினால் ஏற்படும் சொற்பிழைகளையும் மாணாக்கருக்குத் தருவன 'ர' கர 'ற' கர, 'ழ' கர 'ள' கர 'ல' கர, 'ண' கர 'ன' கர வேறுபாட்டுச் சொற்களே. இவற்றிலே குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட சொற்களை அகர வரிசையில் ஒழுங்கு செய்து, அவற்றின் பொருளையுந் தருவது மொழிப்பாட நூல்களின் வழக்கமாயுள்ளது. எனது பட்டறிவினாலே, இத்தகைய சொற்களின் பொருளை அறிந்துகொள்வது மட்டும் தமிழ் கற்கும் மாணாக்கருக்குப் போதியதன்று என்னும் முடிவே ஏற்பட்டது.

குறித்த ஒலி வேறுபாட்டுச் சொற்களின் பொருளை நன்கு வேறுபடுத்தி விளங்கி, அவற்றின் பொருட்புலப்பாட்டுக்கமைவான தொடரியங்களையும் மாணாக்கர் ஆக்கிக்கொள்வதற்கான பயிற்சிகளும் வழங்கப்படல்வேண்டும் என்றுணர்ந்தேன். இதன் பயனாகவே முதலில் 'ர'கர 'ற'கர வேறுபாட்டுச் சொற்களை அகர வரிசையில் ஒழுங்குபடுத்தி, அவற்றின் பொருளையுந் தந்து, பொருட்புலப்பாட்டுக்கான தொடரியங்களையும அமைத்து இந்நூலினை எழுதியுள்ளேன்.

முதலில் 'ழ'க'ர'ளகர'ல'கர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகஞ் செய்வதே பொருத்தமும் பயன்பாடும் மிக்கது என்று அறிஞர் ஒருவர் அறிவுறுத்தினார். எனக்கு அது பொருத்தமாகத் தோன்றவில்லை. தமிழ் அரிச்சுவடி ஒழுங்கில், 'ர' கரத்தின் பின்னரே 'ழ'கரம் வருவது ஒன்று. 'ண'கரம் 'ர'கரத்தின் முன்னர் அமைந்தாலும், மெய்யெழுத்திலும் உயிர்மெய்யெழுத்திலும் இறுதியில் அமைவது 'ன'கரம். எனவே முதலில், 'ர'கர 'ற'கர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகஞ்செய்து, அடுத்து, 'ழ'கர 'ள'கர, 'ல'கர வேறுபாட்டுச் சொற்களையும்

இறுதியில் 'ண'கர 'ன'கர வேறுபாட்டுச் சொற்களையும் அறிமுகம்செய்யும் வகையிலே அடுத்த இருநூல்களையும் எழுதி வெளியிடுவது எனது நோக்கம்.

எ, ஒ, ற, ன, ழ என்ற ஐந்தெழுத்துக்களும் வடமொழியிலே இல்லாத தமிழுக்கே சிறப்பான எழுத்துக்கள். எனவே ழ,ற,ன என்ற எழுத்துக்கள் அமைந்த சொற்கள் தூய தமிழ்ச்சொற்களாய் விளங்குவதையும், 'ர' அமைந்த சொற்களிலே குறிப்பிடத்தக்க விழுக்காட்டுச் சொற்கள் வடசொற்களாய் உள்ளமையையும் இந்நூலாக்கத்தின்போது அறியும் வாய்ப்புக் கிட்டியது. எனவே இவ்வரிசையில் முதலாவது நூலிலே, 'ர'கர வேறுபாட்டுச் சொற்களிலே பெரும் எண்ணிக்கையில் வடசொற்களும், பொருளும் இயன்ற அளவில் விளக்கமாகவும், மாற்றுத் தமிழ்ச் சொற்களாகவும் தரப்பட்டுள்ளன. (எனினும்' இரமணீயம்' - (வனப்பு, கவர்ச்சி) இரட்சிப்பு - (காத்தல்) இரட்சணியம் - (காப்பு) பிரமுகர் (நன்கு தெரியப்பட்டவர்) முதலாக மேலும் பல சொற்கள் புதியனவாகக் கிளைத்த வண்ணமேயுள்ளன!)

நாளிதழ்கள் (Dailies), தாளிகைகள் (Magazines), புதுமங்கள் (Novels) முதலான புதிய வருகைகளால் எண்ணுக்கணக்கற்ற வடசொற்களும், பிறமொழிச்சொற்களும் தமிழில் வந்து குவிந்தவண்ணமாயிருக்குங் காலம் இக்காலம். இவ்வாறு வருவனவற்றைக் களைந்து இயன்ற அளவு தூய தமிழ்ச்சொற்களை மாணாக்கருக்கு அறிமுகஞ் செய்யவும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தியிருக்கின்றேன்.

வேர்ச்சொற்களாகிய அடிநிலைகளை ஆராய்ந்து ஒரு சொல்லின் பிறப்பினையும் பொருளையும் அறியும் முறையினைச் சொற்பிறப்பியல் (Etymology) என்பர். இது மிகவும் கடினமானதும், பல அமையங்களிலே பயனற்றதும் பொருத்தமற்ற முடிவைத் தருவதுமென மொழியியலார் இதனை உவர்ப்பதுமுண்டு. எனினும் இம்முயற்சியினாலே எழுத்துப் பிழைகள் பெருமளவு ஏற்படாது போக வாய்ப்புண்டு என்பதால், ஆசிரியர்கள் தாமறிந்த அளவிலே சில சொற்களுக்காவது அடிநிலைகளை எடுத்துரைப்பது மாணாக்கருக்குப் பயன்தருவதாகும்.

எடுத்துக்காட்டாகப் பின்வரும் சொற்களை நோக்கலாம்.

I வறட்சி என்ற சொல் வரட்சி எனவே பெரும்பாலாராலும் எழுதப்பட்டு வருகின்றது. ஆனால் 'வற்' என்ற வேரிலிருந்து தோன்றி உகர எழுத்துப்பேறு பெற்று வறட்சி என்ற சொல்

அமைந்தது. வறு, வறுத்தல், வறுமை, வறட்சி, வற்றல் என்பன இவ்வாறே தோன்றின. எனவே வரட்சி என்பது பொருட் பேறில்லாத வறிய சொல்!

II கொள் என்ற வினையடி 'உ'கர எழுத்துப் பேறு பெற்றுக் கொளு ஆயிற்று. கொளுத்துதல், கொளுத்தல், கொளுவுதல் (தீக்கொளுவினான்) என்று அமைந்து வருதலே முறை.

விளக்குக் கொழுத்தினான், நெருப்புக் கொழுத்தினான் என்பன குறித்த பொருளைத் தரமாட்டா. ஒரு பொருளோடு வேறு பொருளை இணைத்தலுக்கும் கொளுவுதல் என்ற சொல்லே ஏற்புடையது.

உடல் பருத்தல், கொழுத்தல், (கொழுத்தவன்) என்ற சொல்லாற் பெறப்படுவதாகும்.

எனவே, இவ்வகையிலும் சொற்களுக்கான பொருளை உறுதிசெய்ய வாய்ப்புண்டு. இதனை ஆசிரியர்களின் உள்ளலுக்கு (சிந்தனைக்கு) விடுகின்றேன்.

ஆக, எனது நோக்கத்தைக் கல்வி மேம்பாட்டுப் பேரவை யினரின் கூட்டம் ஒன்றிலே எடுத்துரைத்து, எவ்வித பொருட் பயனையும் எதிர்பாராது இந்நூல் வரிசையினை ஆக்கித்தருவ தாகவும், அதனை வெளியிட்டுத் தமிழ் மாணாக்கருக்கு உதவு மாறும் வேண்டினேன். எனது வேண்டுகோளை முழுமனத்துடன் அவையினர் ஏற்றுக்கொண்டனர். கல்வி மேம்பாட்டுப் பேரவை யினதும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தினதும் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் எனது வேண்டுகோளுக்குச் செயல்வடி வங் கொடுக்க மகிழ்வுடன் முன்வந்தார். அவரின் விரைவான நடவடிக்கையின் பயனாக இன்று, தொடரியங்கள் வரிசையில் முதல்நூல் வெளியாகின்றது.

இந்நூல் எட்டாம் ஆண்டு தொடக்கம் பதினோராம் ஆண்டு வரையுள்ள வகுப்புக்களிலே தமிழ் கற்கும் மாணாக்கருக்குப் பயன்படுமாறு எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் மாணாக்கர் களும் இதனை உவந்து ஏற்பார்கள் என்று நம்புகின்றேன்.

கல்வி மேம்பாட்டுப் பேரவையினருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினருக்கும் இவற்றின் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் அவர்களுக்கும், தாசன் அச்சகத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

நாயன்மார்கட்டு, க. சொக்கலிங்கம்
யாழ்ப்பாணம். 01-03-1995 (சொக்கன்)

# வழிகாட்டி

● வாக்கியம் என்ற வட சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல் தொடரியம்

● இந்நூலிற் கையாளப்படும் சொற்களஞ்சியத்திற்குக் **கழகத் தமிழ் அகராதி'**- (கழகப் புலவர் குழுவினர் தொகுத்தது; திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை - 1985) பயனாயிற்று.

● சொற்களின் கீழ்ப் பிறைவடிவினுள்ளும் தொடரியங்களின் கீழ்ப் பிறைவடினுள்ளும் தரப்பட்ட எழுத்துக்களின் விரிவு பின் வருமாறு:

அ. 'பெ' பெயர்ச்சொல்

ஆ. 'வி', வி. சொ - வினைச்சொல்

இ. 'தொ. பெ' - தொழிற் பெயர்

ஈ. 'உ. சொ' உரிச்சொல்

உ. 'வ. சொ' - வடசொல்

ஊ. இ. சொ. - இடைச்சொல்

எ. தி. சொ. - திசைச்சொல்

**பிறப்பியல்**

'ர' நாநுனி மேல்நோக்கிச் சென்று மேல்வாயைத் தடவுதலாலே பிறக்கும்

'ற' நாநுனி மேல்நோக்கிச் சென்று மேல் வாயைத் தொடுவதாலே பிறக்கும்

**(தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - பிறப்பியல் நூற்பா - 94- 95)**

## 1· 'ர' கர 'ற' கர வேறுபாட்டுச் சொற்கள், தொடரியங்கள்

அரம்- அராவும் கருவி

(பெ) "அரம் போன்ற கூரிய நுண்ணறிவு கொண்டவராயினும் மக்கட் பண்பில்லாதவர் மரம்போல்வர்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

,, பாதாள உலகம்

(பெ) மண்ணுலகம், விண்ணுலகம், அரவுலகம் என மூன்றுலகங்கள் உள்ளன என்று எம் முன்னோர் நம்பினர்

அறம்-(வ. சொ)தருமம்

(பெ) அறத்தின் வழி நடந்து மறங்கடிதல் எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்

,, - கடமை, ஒழுக்கம்

(பெ)- முதுமைக் காலத்திலே பெற்றோர் அல்லற்படாது அவர்களைப் பேணுதல் மக்களுக்கு அறமாகும்

,, - பாடப்பட்டுவோருக்குத் தீங்கு பயக்கும் பாடல்

(பெ)- முற்காலப் புலவர் சிலர், தமக்குச் சினம் ஊட்டியவர் மீது மறம்பாடி அவர்களை ஒறுத்தனர். (ஒறுத்தல் - தண்டித்தல்)

அரவு- பாம்பு

(பெ) கரவினை உள்ளத்தினுள்ளே மறைத்துப் புறத்தே இனியவர் போல நடிப்பவர் அரவிலும் கொடியவராவர்.

,, - நெட்டெழுத்துக்கு அறிகுறியாகக் குற்றெழுத்தைத் (உயிர்மெய்) தொடர்ந்து இடப்படும் வரி வடிவம்

எழுத்துச் சீர்திருத்தம் செயற்படுத்தப்படுவதன் பயனாக இன்று எல்லா உயிர்மெய் நெட்டெழுத்துக்களுக்கும் அரவுகள் இடப்படுகின்றன. ("றா'னா" முதலியன எடுத்துக்காட்டுகள்)

"அரவு- ஒலி

(பெ) இடியரவு கேட்ட அரவுபோலக் குண்டு வீச்சு வானூர்திகளின் வருகையால் மக்கள் அஞ்சி நடுங்கினார்கள். (அரவம்) - ஒலி; பாம்பு)

அறவு – ஒழிவு, நீக்கம்

(தொ, பெ) எனக்கும் என்னுடைய நெருங்கிய நண்பனுக்குமிடையே நிலவிய நட்பில் அறவு ஏற்பட்டது.

அறவு - அறுபட்ட இடம்

(பெ) நிலக்கண்ணியிற் சிக்கியவரின் வலக்காலில் அறவுண்டாகி அந்த அறவு அவருக்குப் பெருந்துன்பத்தை அளித்தது.
,, - அவா
(பெ) பேரினம் என்பதாற் செருக்குக் கொண்ட அரசு, சிறுபான்மை இனத்தினரை அடக்குவதிலே அறவுடையதாய்க் காட்சி தருகிறது.

அரன்- (வ. சொ, 'ஹர' என்பதன் திரிபு) சிவன்

(பெ) அரன் அருள் வேண்டி அடியார்கள் அவனை வழிபட்டடார்கள்.

அறன்- அறம் என்பதே பொருள். -'ன்' மொழியீற்றுப் போலி.

அரா- பாம்பு

(பெ) நஞ்சுடைய அராக்கள் புற்றில் மறைந்து வாழ்கின்றன.

அறா நீங்கா, அறமாட்டா

(வி) - உரிமை வாழ்வில்லாதவரை எங்கள் தொல்லைகள் அறா.
,, - இந்தக் கயிறுகள் நன்கு திரிக்கப்பட்டுள்ளமையால், எளிதில் அறா.

அரி- (வ.சொ. ஹரி என்பதன் திரிபு) திருமால்

(பெ) அரி காத்தற் கடவுளாகக் கொள்ளப்படுகிறார்.
,, - சிங்கம் (வ சொ.சிம்ஹ என்பதன் திரிபு)
(பெ) - அரி விலங்குகளிலே வலிமையும் துணிவும் மிக்கது.
(துளசி, அரிசி, பாம்பு, தவளை. வண்டு,மலை, கள், குதிரை முதலாக வேறும் பல பொருள்கள் உள்ளன)
,, - அரியென்னேவல் (தன்வினை)
(வி)- ''காய்கறிகளை, விரைவாக அரி" என்று அன்னை எனக்குப் பணித்தார்''

(அரிதல் - தொ. பெ அரிந்தான், அரிந்த, அரிந்து - வி)

,, மேற்குறித்த பொருள் (பிறவினை)

வி ''மாலை அரி'' என்று இல்லத்தலைவி பணியாளுக்குக் கட்டளையிட்டாள்

(அரித்தல் - தொ. பெ. அரித்தாள், அரித்த அரித்து விர்

அறி- அறியென்னேவல்

(பெ) ''நான் கற்பிப்பதை நீ மீட்டல் செய்யாவிட்டால், தேர்வில் தோல்வியே அடைவாய் என்பதை அறி'' என்று ஆசிரியர் மாணாக்கனுக்குக் கூறினார்.

அரிவன்- வேட்டுவன்

(பெ) அரிவன் புறாக்களைப் பிடிக்க வலை விரித்தான்

(நான் உன் கழுத்தை அரிவன், அவன் உன் கழுத்தை அரிவான் என்று முறையே தன்மை. முன்னிலை வினைமுற்றுக்களாகவும் வரும்)

அறிவன் -அறிஞன்

(பெ) அறிவனின் அறிவுக்கு முன்பு மன்னனின் மேலாண்மையும் தாழ்வானதாகவே சொல்லப்படும்.

,, - கம்மாளன்

(பெ) அறிவன் ஆக்கிய கொடுவாய்க்கத்தி மிகவும் கூர்மையானது.

,, இறைவன் (சிவன், திருமால், அருகன், புத்தன்)

(பெ) அறிவனின் அருளால், குமரன் அறிவனாயினான். (புதன், செவ்வாய் ஆகிய கோள்களுக்கும் 'அறிவன்' பொதுப் பெயர். நான் உன்னை அறிவன், அவன் என்னை அறிவன் என்று முறையே தன்மை, முன்னிலை வினைமுற்றுகளாகவும் வரும்.)

அரிவு- அரிதல்

(தொ. பெ) முகிலனின் வயலில் நெல்லை அரிவு இடம்பெறும்
(அரிந்தான் அரிந்த, அரிந்து- வி)

அறிவு- அறிதல்

(பெ) கற்றறிந்தோர் சேர்ந்து பட்டறிவு என்று கூறினார

னுமே சிறந்த அறிவு கிட்டும்.

(அறிந்தான், அறிந்த, அறிந்து- வி)

அரிவை- இருபத்தைந்து அகவை (வயது) கொண்ட பெண்

(பெ) சீதனக் (வ. சொ) கொடுமையால் அரிவையர் பலர் திரு மணமாகாமல் வாழ்கின்றனர்.

((நீ) அரிவை என முன்னிலை வினைமுற்றாகவும் வரும்)

அறிவை- 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமையுருபேற்ற பெயர்.

(பெ) ஏட்டுக்கல்வி ஒன்றே அறிவை அடைவதற்குரிய வழி என்று கருதுவது தவறாகும்.

(நீ) அறிவை என முன்னிலை வினைமுற்றாகவும் வரும்)

அரு- (வட-சொல்) உருவமற்றது-

(பெ) சிவபெருமானுக்கு அரு, உரு, அருவுரு என மூவகைத் திருவடிவங்கள் உள்ளன.

அரு- (ம்) அரிய (பெறுவதற்கு அருமையாயுள்ள)

(வி) அரசினரின் பொருளாதாரத் தடையினால், தமிழீழ மக்கள் தமக்கு வேண்டிய அடிப்படைப் பொருள்களை அருவிலை கொடுத்து வாங்கும் நிலை நேர்ந்துள்ளது.

அறு- அறு என்னேவல்

(பெ) "அந்தத் தீயவனது தொடர்பினை அறு" என்று தந்தை மகனுக்கு அறிவுரை வழங்கினார்.

அருகு- அண்மை

(பெ) அருகு அருகாகவுள்ள வீடுகளில் வாழ்ந்தபோதிலும் அவர்கள் இருவரும் தங்கள் உள்ளங்களாலே தொலைவாகவே யுள்ளனர்.

அறுகு- ஒருவகைப் புல்லினம்

(பெ) பெரியோர் மணமக்களை "ஆல் போலத் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நீண்ட நாள் வாழ்க" என வாழ்த்தினர்.

அரும்பு- பூவின் முகை

(பெ) மலராத அரும்புகளைக் கொய்து மதனை அன்னை

கண்டித்தார்

அரும்பு - முகைகொள்

(வி) எமது மல்லிகைக் கொடியில் முகைகள் அரும்பின.

அறும்பு- கொடுமை

(பெ) படையினரின் அறும்புகளைத் தாங்கவியலாத மக்கள் தமது ஊரிலிருந்து புலம் பெயர்ந்தனர்.

அருவி- (மலையிலிருந்துவிழும்) நீர்

(பெ) உலகிலேயே மிகப்பெரிய நீரருவி அமெரிக்காவிலுள்ள நயாகராவாகும்,

அறுவி- வெட்டி விடு (ஏவல்)

(வி) ''தீய நண்பரோடு உன்மகன் கொண்டுள்ள தொடர்பினை அறுவி'' என்று அவன் தந்தைக்கு ஆசிரியர் அறிவுறுத்தினார்.

(அறுவித்தான், அறுவித்த, அறிவித்து- வி)

அரை- பாதி

(பெ) சிவபெருமானின் உடலின் அரைப்பங்கு உமாதேவியாருக்குரியது.

இடுப்பு- எனது அரையிலே சொறி சிரங்கு உண்டாயிற்று

அறை- வீட்டின் ஒரு பகுதி

(பெ) கொழும்பு மாநகரிலே, குடிக்கூலிக்கு (வாடகைக்கு)ச் சிறிய அறைகள் கிடைப்பதும் அரிதாகவுள்ளது.

'' (உறுப்பு, அறிவுக்) குறைபாடு.

(பெ) 1. செவியறையுடையவனைச் செவிடன் என்பர்.

2. கோவலனைக் கொல்வித்த நெடுஞ்செழியனை ''அறிவறை போகிய பொறியறை நெஞ்சத்து இறை முறை பிழைத்தோன்'' என்று கண்ணகி தூற்றினாள்.

(வி) அடி, தாக்கு

சினங்கொண்ட தந்தை மகனின் கன்னத்தில் அறைந்தார்

'' இடித்துரை

(வி) நான் அறைந்த அறிவுரைகள் என் நண்பனுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாயின.

ஆர- மிகுதியாக

(வி) நீண்டநாள் உணவுண்ணாதிருந்தவன் உணவு கிடைத்த

பொழுது வயிறார உண்டு மகிழ்ந்தான்.
(ஆர்தல்- தொழிற்பெயர்- துய்த்தல் (அநுபவித்தல்) என்னும் பொருள் தரும். ஆர்ந்தான், ஆர்ந்த, ஆர்ந்து - வி).

ஆற - தணிய

(வி) அவனது சினம் ஆற நெடுநேரம் சென்றது.

ஆரி அழகு

(பெ) கல்வி அறிவு பெறாது ஆரியுடையோன் என்று செருக்குதல் அறியாமை.

(அருமை, மேன்மை, சோழன், கதவு, தோல்வி முதலாகப் பலபொருள்கள் உள)

ஆறி- (சூடு, சினம் முதலியன) தணிந்து, ஓய்வாகி

(வி)

(I) இராமனின் அறிவுரைகளைச் செவிமடுத்த இலக்குமணன், தனது சினம் ஆறி நின்றான்.
(ஆறியது, ஆறிய ஆறி, வி.செ.)
(II) நீண்ட தொலைவு நடந்து களைத்த வழிப்போக்கன் மரநிழலில் இளைப்பாறினான்.

ஆரும்- அழகுறும் (அழகுடைய)

(பெ) "சிறையாரும் மடக்கிளியே, இங்கே வா" என்று திருஞானசம்பந்தர் கிளியை அழைத்துப் பாடினார்.

ஆறும்- தணியும்

(வி) தமிழீழ விடுதலைப் புலிகள் மண்மீட்பில் வெற்றியடைந்த பின்னரே அவர்களின் உரிமை விடாய் ஆறும்.

ஆரை- மதில்

(பெ) யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த கோட்டையின் ஆரைகள் விடுதலைப்புலிகளால் இடித்தழிக்கப்பட்டன.

" அச்சுமரம்

(பெ) வண்டியின் ஆரை முறிந்ததால் வண்டியிற் சென்றோர் நிலத்தில் விழுந்தனர்.

(ஒருவகைக் கீரை, புற்பாய், ஆத்தி ஆகிய பொருள்களும் உள)

ஆறை- சிறு குன்று

(பெ) பழமை வாய்ந்த குன்றமைந்த ஊர் பழையாறை எனப்பட்டது.

இர- என்னேவல்

அவனிடம் மன்னிப்பு வேண்டி(நீ) இர
(இரத்தல்- தொ.பெ., இரந்தான், இரந்த, இரந்து-(வி·சொ)

இற இறந்துபோ

(வி) எறிகணை தாக்கி இறந்த மகனின் உடலைக் கண்டதாய் அடியற்ற மரம்போலச் சாய்ந்தார்
(இறத்தல்- தொ. பெ- இறந்தான், இறந்த, இறந்து வி. சொ)

இருப்பு- (தன்னிடம் உள்ள) பொருள்

(பெ) முதிய காலத்திலே தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற மணிவண்ணன் தமது கையிருப்பிலிருந்து செலவு செய்தார்.
"- இருத்தல், இருப்பிடம்.
(பெ) படையினர் தம்முடைய இருப்புக்களிலிருந்த வண்ணம் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைகளை வீசினர்.

இறுப்பு- அளிப்பு

பெ) வரியிறுப்புக் குறித்த காலத்திற் செய்யாதவர் ஒறுப்புக்குள்ளாவர்.

இரும்பு. உலோகத்தில் ஒரு வகை

(பெ) இரும்பிலும் உருக்கு, கூடிய வலுவுடையது.

இறும்பு. சிறுகாடு

பெ) பறவை வேட்டைக்காக வேட்டுவன் இறும்பில் அலைந்து திரிந்தான்.
(சிறுமலை, வண்டு, மலை, வியப்பு முதலாம் பொருள்களும் உள)

இரை- விலங்குகள் பறவைகளின் உணவு

(பெ) நரி இரைதேடி அலைந்தது
(இரைந்தான், இரைந்த, இரைந்து-வி)
(வி) பண்புடையோர் இரைந்து பேசார்.

இறை- கடவுள்

(பெ) இறையருள் வேண்டிச் சமயகுரவர் பாடிய பாடல்கள் 'திருவருட்பா' என வழங்கும்.

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்:........................
திகதி:........................



இறை அரசன்

(பெ) அரசனின் சிறப்புக்களை விளக்கித் திருவள்ளுவர் யாத்த குறட்பாக்கள் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்துள் அடக்கப்பட்டன.

,, - சிறிய கால இடைவெளி,

(பெ) கைகேயியின் அழைப்பை ஏற்று ஓர் இறைப்பொழுதும் தாழ்த்தாது இராமன் அவள் இருந்த இடத்திற்குச் சென்றான்.

,, - விரலிடுக்கு.

(பெ) இறைகளில் ஏற்பட்ட சிரங்கினால் அவன் பெருந் துன்பத்திற்குள்ளானான்.

,, - குடிமக்கள் செலுத்தும் வரி.

(பெ) எமது மாநகரில் மேற்கொள்ளவிருக்கும் சீர்திருத்தங்களுக்கு வேண்டிய நிதியினை மக்களிடமிருந்து இறையாகப் பெற முடிவு செய்யப்பட்டது

(சிறகு, சிவன், நோய், விடை, சிறுமை, கடன் முதலாகப்பல பொருள்கள் உள)

நீர் முதலியவற்றை இறை. (ஏவல்)

(வி) -"தோட்டத்துக்கு நன்றாக இறை" என்று தந்தை மகனுக்குப் பணித்தார்.

ஈரல் - வயிற்றிலுள்ள ஓர் உறுப்பு

(பெ) தமிழினி ஈரற் புற்று நோயால் வருந்தினார்.

ஈறல் - நெருக்கம்

(தொ.பெ) இலங்கைக் காடுகளில் மரங்கள் ஈறலாகக் காணப்படுகின்றன.

(துன்பம், பின்னல் ஆகிய பொருட்களும் உள)

உரம் - வலிமை

(பெ) உடலுரம் இருப்பினும் உள்ளத்தில் உரம் இல்லாவிட்டால் எச்செயலையும் துணிவோடு செய்தல் இயலாது.

,, (பயிருக்கு இடப்படும்) பசளை

(பெ) பயிர்வளர்ப்பில் உரம் இன்று முதன்மையான இடம் வகிக்கின்றது.

உறம் - அடையோம்

(வி) நாம் எச்செயலையும் ஆய்ந்தோய்ந்து பார்த்துச் செய்தால் தோல்வி உறம் (உறோம்)

பெருங்கலைப் பயிலக மக்கள் நூலகம் இலக்கம்



உரல் - (அரிசி முதலியவற்றை இடித்து) மாவாக்க உதவும் கருவி

(பெ) ''உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?'. என்பது பழமொழி.

உறல் - அடைதல்

(தொ-பெ) "நான் இருக்கும்வரை நீங்கள் துன்பம் உறல் வேண்டியதில்லை" என்று மகன் தாய்க்கு ஆறுதல் கூறினன்.

(உறுதல், உறுகை, [தொ,பெ] உற்றான். உற்ற, உற்று வி)

உரவு - வலிமை, அறிவு

(பெ) மனவுரவுடையவன் கல்வியிலும் உரவுடையவானால் அவனை வெல்வது யார்க்கும் அரிது.

உறவு -

(பெ) அன்பிணைப்பு - மனுச்சோழன் உறவு பகை, நொதுமல் என்று பாராது முறை வழங்கினான்.

உரி- மரத்தண்டின்மேற்றோல்

(பெ) துணியாலான ஆடைகள் கண்டுபிடிக்கப்பட முன்பு மக்கள் இலை குழைகளாலும், மரவுரிகளாலும் தம்முடைய உடல்களை மறைத்து அணிந்தார்கள்

உரி - தமிழிலுள்ள நால்வகைச் சொற்களில் ஒன்று

பெ) பெயர், வினை, இடை, உரி; எனக் தமிழ்ச் சொற்கள் நான்காக வகுக்கப்படல் தமிழிலக்கண மரபு.

.." அவிழ்

(வி) துரியோதனனின் வேண்டுதலின்படி அவன் தம்பியான துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலை உரிய முற்பட்டான்

உறி - தூக்கி

(பெ) உறியிலிருந்த வெண்ணெயைக் கண்ணன் களவாடினான்

உரு - (வ. சொ) வடிவம்

(பெ) அங்குத் தோன்றும் உரு குற்றியோ மகனோ?

.. சினங்கொள்

(வி) நாடாளவேண்டிய இராமன் காடாளவேண்டும் என்று கைகேயி பணித்ததை அறிந்த இலக்குமணன் உருத்தெழுந்தான்.

உருக்கு - கலப்பு உலோகம்

பெ) உருக்கு இரும்பிலும் வலுவிற் கூடியது.

,, தீயில் இட்டு உருக்கு (மனத்தை) உருக்கு

(வி) மாலைக்ககால மஞ்சள் வெயில் "தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமாகப்" பாரதிக்குக் காட்சி தந்தது.

(உருக்கம்,உருக்கல் தொ,பெ. உருக்கினான் உருக்கிய, உருக்குவி,

உறுக்கு - அச்சுறுத்து

(வி) குறும்பு செய்த குழந்தையைத் தாய் உறுக்ினாள்.

(உறுக்கல்- தொ.பெ, உறுக்கினான் உறுக்கிய, உறுக்கி-வி

உரை - கூற்று, பாடல், விளக்கம்

(பெ) அமைச்சரின் உரையை அரசன் செவிமடுக்கவில்லை.

(பெ) திருக்குறளுக்கு அது ஆக்கப்பட்ட காலத்திலிருந்து பல

,, ரும் தத்தமக்குத் தோன்றியவாறு உரைகள் வகுத்துள்ளனர்.

,, (நீ) கூறு

(வி) உனக்கு உள்ள குறைகளை எடுத்துரை" என்று ஆசிரியர் மாணாக்கரைக் கேட்டார்.

(உரைத்தல்-, தொ.பெ, உரைத்தான் உரைத்த. உரைத்து வி.)

உறை - பொருளுக்கு இடப்படும் மேற்போர்வை

(பெ) மலர்விழி அழுக்கான தலையணையுறையைக் கழற்றிப் புதிய உறை இட்டாள்

,, கட்டிபடு

(வி) தேங்காய் நெய் பனிக்குளிரால் உறைந்து கட்டிபட்டது.

(உறைதல், தொ.பெ, உறைந்தது, உறைந்த, உறைந்து வி.)

,, (நீ), வாழ்

(வி) இராமனை நோக்கிக் கைகேயி "நீ பதினான்காண்டு காட்டில் உறை" என்று கட்டளையிட்டாள்.

ஊரல் – மெல்ல நகருதல்

(தொ.பெ) ஆமையின் ஊரலைக்கண்டு முயல் ஏளனம் செய்தது.
(ஊர்கை, ஊருகை, தொ.பெ, ஊர்ந்தது, ஊர்ந்த, ஊர்ந்து- வி)

ஊறல் - (நீர்) ஊறல்

(தொ. பெ) கிணற்றை இறைக்க இறைக்க நீர் ஊறலைப்போன்று கற்கக் கற்க அறிவு ஊறிப் பெருகும்
(ஊறுகை, தொபெ, ஊறியது, ஊறிய, ஊறி. வி)

ஊரி - கடல்வாழ்சிற்றுயிரி

[illegible] (பெ) கடற்கரையிலே ஊரிகளின் மேலோடுகள் பெருமளவிற் காணப்பட்டன.

ஊறி - [illegible]

இறைத்த கிணற்றில் நீர் ஊறி வரும் வரை தேன்மொழி காத்திருந்தாள்.

ஏரல் - இளிஞ்சல் (கடல் வாழ் உயிரிகள்)

(பெ) சிறுமியர் ஏரல்களைப் பொறுக்கி விளையாடுகின்றனர்.

ஏறல்-

இலக்குமணனுக்குச் சினம் ஏறலைக்கண்ட இராமன் அவனுக்கு அறிவுரை கூறி அமைதிப்படுத்தினான்.

எரி - [illegible]

(பெ) பேரினவாதப் படையினர் தமிழ்மக்கள் வாழ்ந்த வீடுகளுக்கு எரி மூட்டினர்.
(எரிதல் - தொ. பெ) (எரிந்தது, எரிந்த. எரிந்து-வி.சொ)

எறி - [illegible]

(வி) [illegible] எறிகணைகளால் அப்பாவி மக்கள் பலர் சாவுக்கும் உடலூறுக்கும் ஆளாயினர்.
([illegible] எறிந்த, எறிந்து-வி.சொ)

ஏரி - பெரிய நீர்த்தேக்கம்

[illegible] உலகிலே மிகப் பெரிய [illegible]

ஏரி - எருத்தின் திமில்

[illegible] ஏரியை நுகம் அழுத்த [illegible]

ஏறி - ஏறுபவர்

[illegible] அழைத்துவரு [illegible]
[illegible]

" - மேற்செல்ல

(வி) வாழ்க்கையில் உயர வேண்டுமானால் பல தடைகளை யும் மேற்கொண்டு முன்னேற்றப் படிகளில் ஏறிச் செல்லல் வேண்டும்.

ஒரு - ஒன்று என்னும் எண்

(பெ) ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு மணித்துளிகள் கொண்டது.

ஒறு - தண்டனை கொடு

(வி) தீமை செய்தாரை ஒறுத்து அவருக்குத் திங்கு செய்யாது நன்மையே செய்து அந்த நன்மையினையும் உடன் மறந்து விடுமாறு திருவள்ளுவர் அறிவுரை கூறுகிறார். (ஒறுத்தல், தொ.பெ. ஒறுத்தான்.ஒறுத்த ஒறுத்து வி)

ஒருவு - நீங்கு

(வி) தீயசெயல்களை ஒருவி நல்ல செயல்களைக் கடைப்பிடிக்க இளமையிலேயே முயலுதல் வேண்டும்.

ஒறுவு - நினைவு

(பெ) இறந்துபோன தன் மகனின் ஒறுவினால் அவனுடைய தாய் எப்பொழுதும் வருந்திய வண்ணம் இருக்கிறாள்.

கர - ஒளித்திரு

(வி) பாண்டவர் ஓராண்டுவரை தம்மை வெளிப்படுத்தாது விராட நாட்டிற் கரந்துறைந்தனர்.

(கரத்தல், ஒளித்தல், கரப்பு-ஒளிப்பு தொ.பெ கரந்தது. கரந்த வி.சொ)

கற - கற என்னேவல்

(வி) i. இந்தப்பசு ஒரு படி பால் கறக்கும்

ii. கடன் கொடுத்தவன் கடன் பெற்றவனிடமிருந்து அனைத்தையும் வட்டி என்ற பெயராற் கறந்து விட்டான்.

கரி (வ. சொ) யானை (கரத்தை உடையது)

(பெ) கரிகள் மதங்கொண்டு காட்டை அழித்தன.

கரிப்பு - அறுசுவைகளுள் ஒன்று (காரமானது)

(பெ) மிளகாய்த்தூளை அதிகமாக இட்டதாற் குழம்பு கரித்தது.

(கரிப்பு என்பதற்குக் கசப்புச்சுவை என்ற பொருளும் உண்டு.
எ.டு- உப்பு கரித்தது)

,, சான்று (சாட்சி)

(பெ) பொய்க்கரி கூறிக் குற்றம் செய்யாதவரைக் குற்றவாளியாக்குதல் மன்னிக்க முடியாத பெருங்குற்றம்

,,- எரிந்து எஞ்சியிருப்பது

(பெ) தொடர்வண்டிகளை (புகைவண்டிகளை) முற்காலத்தில் நிலக்கரியைக் கொண்டு இயக்கும் முறைமை நிலவியது

(மரவைரம், கழுதை, கந்தல், விருந்தினன், நஞ்சு முதலிய பொருள்களும் உள்ளன)

கறி - மிளகு

,,- முதன்மையான உணவோடுசேர்த்துக் கொள்ளும் துணை உணவுவகை

(பெ) ஏலம், கறி முதலியன உணவுக்கு மணமும் சுவையுக அளிப்பனவாகும்.

(பெ) கறிவகை-வீட்டுத்தலைவர் தாம் அளிக்கப் போகும் விருந்திற்குப் பல கறிகள் சமைக்கும்படி பணியாளருக்குக் கட்டளையிட்டார்.

(கறி என்பதற்கு இறைச்சி எனவும் பொருள் கொள்ளப்படும்.)

('காய் கறி' என்ற சொற்றொடர் சமைத்தற்கு முன்னுள்ள காய், கிழங்கு, கீரை முதலியவற்றையும் குறிக்கும்)

,, (முறுக்குப் போன்ற சிற்றுண்டிகளை வாயிலிட்டு மெல்லு)

(வி) அவன் கடலையைக் கறித்த ஓசை பெரிதாய் எழுந்தது.

கரு - சூல்

(பெ) கருக்கொண்ட முகில்கள் வானிலே திரண்டு மழை பொழிந்தன.

,,- தெய்வம், உணவு, விலங்கு, பறவை, இசைக்கருவி முதலியவற்றைக் குறிப்பது.

(பெ) பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்களிலே முதல், கரு, உரி என்ற மூன்றும் தவறாது இடம் பெறும்.

,, பாடுபொருள்

(பெ) இந்த நாடகத்தின் கரு நன்றாக அமையவில்லை.

PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI



கறு - சினங்கொள்

(வி) அரசியலில் எப்பொழுதும் பொய்களையே அவிழ்த்து விடும் அமைச்சரின் மேடைப்பேச்சினைக் கேட்ட மக்கள் அவர்மீது கறுத்தெழுந்தனர்.

" கருமையாகு

(வி) வெயிலிலும் மழையிலும் அலைந்த ஏதிலாரின் (அகதிகளின்) உடல்கள் கறுத்துவிட்டன.

கரை - கடல், ஆறு, குளம் முதலியவற்றின் எல்லையிலுள்ள மணற்பரப்பு

(பெ) பெருமழை பெய்ததால் ஆறு கரைபுரண்டு ஓடியது.

,, எல்லை

(பெ நாட்டுரிமை, மொழியுரிமை என்பவற்றை இழந்த ஈழத்தமிழரின் தொல்லைகள் கரைகடந்ததாலேயே இன்று அவர்கள் அரசினை எதிர்த்துப் போராடுகின்றனர்.

" கரையென்னேவல்

(வி) நீரில் உப்பு கரைந்தது.

கறை - மறு, கறள்

(பெ) இரும்புப் பெட்டியில் வைத்திருந்த ஆடைகளிலே இரும்புக்கறை படிந்தது.

" - வசை, இழிவு

(பெ) ஒழுக்கக்கேடு ஒருவனின் வாழ்வில் நிலையான கறையினை உண்டாக்கிவிடும்.

" - கப்பம்

(பெ) முற்காலத்திலே சிற்றரசர் பேரரசருக்குக் கறை செலுத்தி அவர்களின் அடிபணிந்து வாழ்ந்தனர்.

காரி - கரிய நிறமுடைய பசு

(பெ) பாற்பண்ணையில் உள்ள பசுக்களில் ஒன்று காரி.

(பசு - வடசொல், ஆ - தமிழ்ச்சொல்)

" - கடையெழுவள்ளல்களில் ஒருவன்

(பெ) பாரி, காரி, குமணன், பேகன், ஆய் என்போர் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்கள்.

(காரி - காரனுக்குப் பெண்பால், இவை வடசொற்கள் 'ஆள்' என்பது பொருள். எ-டு வேலைக்காரி, சமையற்காரி)

காறி – காறி(த்துப்புதல்)

(வி) மிடற்றில் அடைத்துக்கொண்டிருந்த சளியை வெளிப் படுத்த அவன் காறித் துப்பினான்.

கிரி - (வ.சொ) மலை

(பெ) உலகிலுள்ள கிரிகளிலே இமயகிரியே மிகவும் உயர்ந்தது.

கிறி - விரகு (தந்திரம்)

(பெ) சிவபெருமானின் திருவிளையாடலைப் பாட முற்பட்ட மணிவாசகர், 'சேட்டாயோ தோழி கிறி செய்தவாறொ ருவன்' எனக்குறித்தார்.

கீரி ஒருவகை விலங்கு

(பெ) கீரியும் பாம்பும் போல இடைவிடாது சண்டையில் ஈடு பட்ட கணவனும் மனைவியும் மணவிலக்கு வேண்டி முறைமன்று சென்றனர்.

கீறி – (கீறுதலை குறித்து வந்த வினையெச்சம்)·வரைந்து

(வி) 1. இருவரிடையே ஏற்பட்ட அடிபிடியின்போது ஒருவன் மற்றவனின் முகத்திலே நகத்தாற் கீறிவிட்டான்.

2. படம் வரைதலைப்படம் கீறுதல் எனவும் வழங் வர்.

குரங்கு - ஒருவகை விலங்கு

பெ) டார்வினின் கூர்ப்புத் கொள்கை மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் எனக் கூறுகின்றது.

குறங்கு - தொடை

(பெ) தாய், தன் குழந்தையின் குறங்கிலே மெல்லத் தட்டி அதனைத் துயிலச் செய்தாள்.

குரு -(வடசொல்) ஞானம் அளிக்கும் ஆசான்

(பெ) தாய், தந்தை, குரு, அரசன், தமையன் ஆகியோர் வணங் குவதற்குரிய ஐம்பெருங் குரவராவர்

குறு(ம்) - சிறிய

(வி) குறுநடை நடந்த குழந்தையைத் தாய் அன்போடு வாரி அணைத்தார்.

குருகு - பறவை

(பெ) புலரிப் பொழுதிலே குருகுகள் மரங்களிலிருந்து கலகல வென எழுப்பும் ஒலி மிக இனிமையாகவிருக்கும்.

(இளமை, குருக்கத்தி' நாரை, கைவளை, கோழி, நீர்ப் பறவை, வெண்மை, விலங்கு முதலாகப் பல பொருள் கொண்டது. (க. த. அ.)

குறுகி- அணுகி

(வி முற்காலத்திலே புலவர்கள் அரசர் முதலான புரவலர்களைக் குறுகி அவர்புகழ் பாடிப் பரிசில் பெறும் வழக்கம் இருந்தது.

குரை (நாயின்) ஒலியெழுப்பு

(வி) 'குரைக்கும் நாய் கடிக்காது' என்பது பழமொழி

குறை - குற்றம்

(பெ) எவரையும் குறைகூற முன்பு ஒருவன் தனது குறையை அறிந்து அதனைப் போக்க முயல்வது நன்று.

,, -எஞ்சியிருப்பது

(பெ) இன்னும் படிக்க வேண்டிய பாடங்கள் குறையாயுள்ளன.

,, -நிறைவற்றது.

(பெ) வறியவர் வாழ்க்கையில் எப்பொழுதும் பற்றாக்குறை இருந்து கொண்டேயிருக்கும்

(குறைத்தல், குறைப்பு- தொ. பெ. குறைத்தான் குறைத்த, குறைத்து- (வி)

வி. சொ. (தன்வினை)

குறைந்தது, குறைந்த, குறைந்து

கூர - மிகுதியாக

(வி) ஈழத்தமிழர் தன்னாட்சி பெறுவதொன்றே அவர்கள் மகிழ்ச்சி கூர வழிவகுக்கும்.

கூற- சொல்ல

வி) கிளாலிக் கடலைக் கடந்து வரத் தான்பட்ட இன்னல் களை அவன் எடுத்துக் கூற முடியாது அவனது நாத்தழு தழுத்தது.

கூரிய- கூர்மையான

(வி) தைச்சுக் தொழிலாளி கூரிய வாள்கொண்டு மரத்தை அரிந்தான்.

கூறிப- சொல்லிய

(வி) அமைச்சர் கூறிய அறிவுரையைச் செவிமடுக்காது தன்னிச்சையாய்ச் செயல்புரிந்த ஆட்சியாளன் படுகொலைக்குள்ளானான்.

கூரை- வீட்டின் மீது கவிந்திருக்கும் மேற்பகுதி

(பெ) ஔவையார் ஒட்டக்கூத்தர்மீது சினங்கொண்டு அவரைக் ''கூரையில்லா வீடே'' (குட்டிச்சுவரே) என்று இடித்துரைத்தார்

கூறை- புத்தாடை (முழுத்துணியிலிருந்து கூறுபடுத்த பட்டது என்ற பொருளில் வந்தது. இன்று மணமகன் மணமகளுக்கு வழங்கும் பட்டாடையையே சிறப்பாகக் குறிக்கும்.)

(பெ) இன்று மணமக்கள் சிலர் கூறை, தாலிக்குக்கூடப் பெண் வீட்டாரிடம் பணம் எதிர்பார்க்கின்றனர்

கோரல்- வேண்டுதல்.

(தொ.பெ) எமது உரிமையை, நாம் கோரல் (கோருதல்) எவ்வகையிலும் தவறன்று.
(கோரிக்கை- தொழிற்பெயர். கோரினான், கோரிய கோரி- வி.)

கோறல்- சொல்லுதல்

(.பெ) பகைவரைக் கோறல் வசையன்று, உலக இயற்கை.

சருகு- காய்ந்ததழை

பெ காய்ந்த சருகுகளை வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் உரமாகப் பயன்படுத்துவது, இன்று அருகிவருகிறது.

சறுக்கு- வழுக்கிவிழு

வி) பூங்காவில் சிறுவர் சிறுமியர் சறுக்கு பலகையில் ஏறிச் சறுக்கி விழுந்தனர்

சாரல்- மலைப்பகுதி

(பெ) இலங்கையின் உயர்ந்த மலைச்சாரல்களிலே தேயிலை பயிராக்கப்படுகின்றது.

''- சார்ந்திருத்தல், (தங்கியிருத்தல்)

(பெ) நாம் பிறரைச் சாரல் (சாருதல்) என்பது அவர்களுக்கு எம்மை அடிமையாக்குவதிலேயே சென்று முடியும். (சார்ந்தான், சார்ந்த, சார்ந்து, வி.சொ.)

சாறல்- வயல் தோட்டம் முதலியவற்றைக் கொத்தி மண்ணைப் பரவுதல்

(பெ) வளவனின் வயலை இன்று சாறல் வேண்டும்.

சாரி- வரிசை

(பெ) படைவீரர் போர்க்களத்தை நோக்கிச் சாரி சாரியாய்ச் சென்றனர்.

சாறி- கொத்திப்பரவி (சாறல்-காண்க)

(பெ) இலங்கைக் காடுகளிலே சிரைகள் பெருமளவில் உள்ளன.

''- நரம்பு

(பெ) வீணையின் சிரைகள் அறுந்து போயின.

''- மொட்டையடி

(வி) நயினாதீவு சென்ற பெற்றோர் நாகபூசணிக்குத் தமது குழந்தையின் நேர்த்திக்கடனை நிறைவேற்ற அதன் தலைமயிரைச் சிரைப்பித்தனர்.

(சிரைத்தான், சிரைத்த, சிரைத்து- வி.சொ.)

சிறை- மறியல்வீடு

(பெ) விசாரணை எதுவுமின்றி ஓர் ஆண்டாய்ப் பல இளைஞர்கள் தெனனிலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

'' சிறகு-பறவைகளின் சிறைகளை மாதிரிகளாகக் கொண்டே

(பெ) வானவூர்திகள் தொடக்ககாலத்திலே வடிவமைக்கப்பட்டன.

(பெ)

சீரிய- சிறப்பான

(வி) சீரிய வாழ்க்கைக்குக் கல்வி வழிகாட்ட வல்லது.

சீறிய- சினமுற்ற

(வி) மகனின் ஒழுக்கக்கேடான செயல்களைக் கேள்வியுற்றுச் சீறிய தந்தையைத் தாய் அமைதிப்படுத்தினார்.

"- இரைந்த

(வி) புற்றினுள்ளேயிருந்த பாம்பு சீறியதைக் கேட்டேன்.

சுரா- (வடசொல்) கள்

பெ) சுரா அருந்திய மகிழ்நன் வெறிமயக்கினால், தந்தையை வாயில் வந்தவாறு வைதான்.

சுறா- கடலில் வாழும் கொடிய மீன்

(பெ) ஆழமான கடல்களிலே சுறாக்கள் பெருமளவிற் காணப் படும்.

சுருக்கு (சாரம் விடுபடாது)) அளவைச் சிறுப்பி

(வி) மாணவர் உரைப்பதிகுயை அதன் முதன்மைப் பொருள் விடுபடாது மூன்றில் ஒன்றாகச் சுருக்கி எழுதினர்.

தொ. பெ சுருக்கம்- சுருக்கினான், சுருக்கிய, சுருக்கி-வி(தன்வினை)

சுருங்கு, சுருங்கியது, சுருங்கிய, சுருங்கி- வி.சொ. (பி. வி) எ. டு:) - நிலவன எழுதிய சுருக்கம் குறித்த சொல் லெண்ணிக்கையிலும் குறைவாக அமைந்ததால் ஆசிரியர் ''மிகவும் சுருங்கி விட்டது'' என்றார்.

சுறுக்கு - விரைவு

(பெ) ''நேரமாகிறது, சுறுக்காக எழுதி முடியுங்கள்'' என்று தேர்வு மேற்பார்வையாளர் தேர்வு நாடிகளுக்குக் கூறினார்.

சூரை- தூதுளை (தூதுவளை)

பெ) சூரைத் துவையல் தடிமன், இருமல், நோய்களை மாற்ற உதவும்.

,, ஒருவகை மீன்

(பெ) சூரைமீன் சுவையுடையதா என்பது எனக்குத் தெரியாது.

சூறை - சுழல் காற்று

(பெ) நேற்று வீசிய சூறையினால், மரங்கள் பல வேர்பாறி விழ்ந்தன.

,, கொள்ளை

(பெ) 1977 இல் இடம் பெற்ற இனக் கலகத்தின் போது தமிழர் பலரின் உடைமைகள் சூறையாடப்பட்டன.

செரி - செரி(த்தல்), சிரணி(த்தல்)

(வி) நான் உண்ட உணவு செரித்தபின் மீண்டும் பசி ஏற்பட்டது. (செரிப்பு, செரித்தல்- தொழிற்பெயர். செரித்தது, செரித்த, செரித்து, வி. சொ)

**செறி - நெருங்கு**

(வி) கொழும்பு முதலான பெரிய நகரங்களிலே மக்கள் செறிந்திருப்பதால் குடிமனைத் தட்டுப்பாடு பெருமளவிற் காணப்படும்.
(செறிவு- தொ. பெ. (தன்வினை)
செறிப்பு- தொ. பெ. (பிறவினை)
செறிந்தது, செறிந்த, செறிந்து (வி. சொ.)

**செரு - போர்**

(பெ) பேரினவாத அரசு செரு ஒன்றே சிறுபான்மை மக்களை அடக்க ஒரே வழி என்று உறுதியாக நம்புகிறது.

**செறு - அழி**

(வி) பகைவரைச் செறுத்து நாட்டுரிமை காப்பதே போராளிகளின் முதன்மையான குறிக்கோளாய் உள்ளது.

**செருப்பு - காலணி ('தொடுதோல்' என்பது பழந்தமிழ்ச் சொல்)**

பெ) யப்பானியர் தங்கள் வீட்டினுள்ளே செருப்பணியும் வழக்கம் அற்றவர்.

**செறுப்பு - அழிப்பு**

(பெ) அமைதி முயற்சிகள் எவையும் பயன்தராத நிலையிலேயே பகைவரைச் செறுப்பதென்றே விடுதலை பெற ஒரே வழி என்று நாம் உணர்ந்து கொண்டோம்.

**சேரி - மக்கள் சேர்ந்து வாழும் இடம்**

(பெ) "பார்ப்பனச் சேரியிலே கோழிகளையோ, நாய்களையோ காணவியலாது" என்று பெரும் பாணாற்றுப்படை என்னும் பழந்தமிழ் இலக்கியம் கூறும்.
(இக்காலத்தில் ஏழைமக்கள் செறிந்து வாழும் அழுக்கும் வறுமையும் நிறைந்த இடம் 'சேரி' என வழங்கும்)

(பெ) சேரி வாழ் மக்களின் வாழ்வில் முன்னேற்றங்காண முயல்வதாகத் தேர்தற்காலங்களில் வேட்பாளர்கள் பொய்யுரைப்பது வழக்கம்.

**சேறி - சென்றடை**

(வி) "வீட்டைச் சேறி" என்று போராளி முதியவருக்கு அறிவுறுத்தினார்.

**சேரு - (நீ) சேர் (உ - சாரியை)**

(வி) எமது குழுவிற் சேரு (சேர்)

(சேருதல், சேர்க்கை- தொ. பெ. சேர்ந்தான், சேர்ந்து' சேர்ந்து -வி)

சேறு - (ஊளை, சுரி)

பெ) கௌரவரிடையே விகன்னன் சேற்றில் மலர்ந்த செந்தாமரை போன்றவன்.

சொரி – வழி, ஊற்று

(பெ) துன்பமிகுதியால் மணிமொழியின் கண்கள் நீர் சொரிந்தன. (சொரிதல்- தொ. பெ, சொரிந்தான், சொரிந்த, சொரிந்து- வி. சொ.)
(சொரியல்- அளந்து எல்லைவகுக்காத நிலையில் உள்ள காணிகளைச் சொரியற் காணிகள் என்பது யாழ்ப்பாண வழக்கு)

சொறி - சிரங்கு

(பெ) ஒட்டு நோய்களிற் சிரங்கும் ஒன்று

தரி - சூடு, அணி

(வி) முடிதரித்து நாடாளும் உரிமை படைத்திருந்தமையாற் சேர, சோழ பாண்டிய மன்னர் 'முடியுடை மூவேந்தர்' எனப்பட்டனர்.
(தரித்தல், தொ. பெ. தரித்தான், தரித்த. தரித்து - வி. சொ.)

(வி) (பொறுத்து) நில், தாமதி

(பெ) குண்டு வீச்சினால், தமது வீடு இடிந்து வீழ்ந்ததைக் கேள்வியுற்ற இளங்குமரன் சிறிதும் தரிக்காது வீடு நோக்கி ஓடிவந்தான்

தறி - நூல் நூற்கும் பொறி

(பெ) கைத்தறிக்கு மாற்றீடாக இன்று மின்தறி பயன்படுத்தப் படுகின்றது.

,,- யானை கட்டும் மரம்

(பெ) 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'' என்பது பழமொழி.

,,- கொத்து

(வி) விறகுத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இன்று பயன் தரும் மரங்கள் பலவும் தறிக்கப்படுவது கவலைதருவதாகும்.

தரு- (வடசொல்) மரம்

(பெ) உருவத்தால் நீண்ட உயர் தருக்களும் குறித்த காலத் திலேதான் பயன் தரும்.

,, (மம்) கொடுக்கும்

(வி) பயன்தரு மரங்களைப் பேணிக்காப்பது எமது முதன்மை யான கடமையாகும்.

தறு (தல்) -இறுக உடுத்தல்

(பெ) ஆடைகளைத் தறுதலாய் உடுத்துவது உடல் நலத்துக்குக் கேடு விளைக்கும்

தாரு- மரம் (வடசொல்)

(பெ) காட்டிலே அடர்ந்து வளரும் தாருகள் மழைமறைப்பாய் விளங்கி நாட்டுக்கு வளம் சேர்க்கின்றன.
(தேவதாரு, மரக்கிளை என்பவற்றையும் குறிக்கும்— க. த. அ.)

,,- பித்தளை

(பெ) தாரு கொண்டு செய்யும் கலங்கள் (பாத்திரங்கள்) இன்று அதிகம் பயன்படுவதில்லை.

தாறு- அங்குசம்

(பெ) யானைப்பாகன் தாறு கொண்டு யானையை அடக்கிச் செலுத்தினான்.

,,- கமுகு, வாழை முதலியவற்றின் குலை (தொடக்கநிலை)

(பெ) வாழைத்தாறு கறி சமைக்க உதவும்.

,, ஐது

(பெ) கதிகால்கள் தாறாக நடப்பட்டதால் வேலி அடைப்பது கடினமாயிற்று.

திரம்- (ஸ்திரம் என்ற வடசொல்லின் திரிபு) உறுதி

(பெ எதைச் செய்யும்போதும் மனத்திரம் இன்றியமையாத தாகும் (நிலை தகரைச்செடி, மலைமுதலிய பல பொருள் கள் 'திரம்' (ஸ்திரம் அன்று) என்ற சொல்லிற்கு உண்டு க. த அ.)

திறம்- திறமை

(பெ) 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்

கம் செய்தல் வேண்டும்'' என்பது பாரதி கூற்று.
(அதிகம், அரை எனினும் ஓர் எண், உறுதி, பண்பு, கூறுபாடு, மேன்மை, வகை, வலி, வழி, சுற்றம், கோட்பாடு, ஒழுக்கம் முதலாகப் பல பொருள் தருவது க. த. அ )

துரவு- மணற்கேணி

(பெ) தோட்டத்துக்கு நீர் பாய்ச்ச அருகிலே துரவு அமைக்கும் வழக்கம் இருந்தமையால், தோட்டம் துரவு என்று இரண்டினையும் இணைத்து வழங்கும் மரபு ஏற்பட்டது. (அவனுக்குத் தோட்டம், துரவு உண்டு)
(கிணறு. பெருங்கிணறு, நீர்நிலை, தூது முதலிய பொருள்களும் உள (க. த. அ.)

துறவு- நீத்தல்

(பெ) பட்டம், பதவி (வடசொல்) என்பவற்றைத் துறப்பதாகிய துறவு எல்லார்க்கும் எளிதான செயலன்று
(துறத்தல், துறப்பு- தொ. பெ. துறந்தான், துறந்த, துறந்து- வி. சொ.)

துரு- கறள்

(பெ) நீண்டநாள் திறக்காமற் பூட்டியே வைத்திருதாற் கதவின் பூட்டு துருப்பிடித்துவிட்டது.

துறு- நெருக்கமான

(உ. சொ.) நீர்ப் பெருக்கினைத் தடுத்து நிறுத்த அதனை நெருக்கமாக அடைக்கும் கல் 'துறுகல்' எனப்படும்.
(உண்ணுகை, கூடம் முதலிய கருத்துகளும் உண்டு க. த. அ.'')

துருப்பு- (Troop என்ற ஆங்கிலச் சொல்) படையைக் குறிக்கும் திசைச்சொல்

(பெ)

ஆனையிறவுப் படைத்தளத்தில் ஆயிரக்கணக்கான துருப்புக்கள் நிலைகொண்டுள்ளன.

துறுப்பு- திணிக்கை

(தொ. பெ) ஒரு காலத்தில் தமிழ்மக்களிடையே சிங்களத்தை வலிந்து துறுப்புச் செய்ய அரசு முனைந்தது உண்மையே.

**தெரி- தெரிந்து கொள்**

(வி) எல்லாம் தெரிந்தவர் என்று எவரும் இல்லை.
(தெரிவு, தெரிதல்-தொ. பெ, தெரிந்தது, தெரிந்த, தெரிந்து வினைச்சொல்)

**தெறி- சட்டைத்தெறி**

(பெ) அவனது சட்டையிலே தெறிகள் உடைந்து போயின
(வி) சிதறு
வேணி துணி துவைக்கையில் நீர்த்துளிகள் அருகில் நின்ற அவரின் தங்கையிலே தெறித்தன.
(தெறித்தல், தெறிப்பு-தொ.பெ, தெறித்தான், தெறித்த, தெறிப்பு-வி சொ)

**தெரு- வீதி (வடசொல்) (மறுகு என்பது பழந்தமிழ்-சொல்**

(பெ) தொழிலின்றிச் சோம்பித்திரியும் இளைஞர் சிலர் தெருக்களிலே செல்லும் இளம் பெண்களைக் கேலி செய்வதில் ஈடுபட்டனர்.

**தெறு- சினங்கொள்**

(வி) பாஞ்சாலியின் துகில் உரியப்பட்ட வேளையில் வீமன் தெறுத்தெழுந்த போதிலும், தமையனின் சொல்லுக்கு அடங்கி அமைதி காத்தான்.
(அச்சம், துன்பம் முதலிய பொருட்களும் உள க. த. அ)

**நரை- மயிர் வெளுத்த நிலை**

(பெ) நரை, திரை, மூப்பு என்பன முதுமையில் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

**நறை- தேன்**

(பெ) வண்டுகள் மலர்களிலே அமர்ந்து நறையருந்திக் களித்தன.
(கள், குற்றம், நறும்புகை, நறுமணம், பச்சிலைக்கொடி, சாதிக்காய். ஆகிய பொருள்களும் உள க.த.அ)

**நாரி- (வடசொல்) பெண்**

(பெ) நரன் என்ற ஆண்பாற் பெயருக்குப் பெண்பால் 'நாரி யாகும்
,, இடை (இடுப்பு)

(பெ) கிணற்றடியில் வழுக்கி விழுந்த கனிமொழியின் நாரி யில் நோ உண்டாயிற்று.

நாறி- தீய மணம் உண்டாகி

(வி) நீண்டநாளாக இறைக்காத கிணற்றிலே பாசியும் அழு கும் சேர்ந்து நீர் நாறிப் போயிற்று
(நாற்றம்- நாறுதல், தொ. பெ முற்காலத்தில் 'நாற்றம் என்ற சொல் நறுமணத்தைக் குறித்தது.)
(நாறியது, நாறிய, நாறுகின்ற, நாறும் வி.சொ)

நிரை- வரிசை

(பெ) எமது காய்கறித்தோட்டத்தில் செடிகள் நிரையாக நிற் பது அழகான காட்சி.

நிறை- நிறுத்தல் அளவு

(பெ) நிறை குறைவான படிகளைப் பயன்படுத்திய வணிகர் பிடிபட்டுத் தண்டனைக்குள்ளானார்.
,, ஆண்களுக்குரிய நாற்குணங்களுள் ஒன்று.
(பெ) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்ற நாற்குணங் களும் ஆண்கள் கடைப்பிடிக்க வேண்டியவை எனப் பழந்தமிழ் நூல்கள் கூறும். (பெண்களுக்கான குணங் கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு)
(அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு, மறைமை, மாட்சிமை வரையறை எனப்பல பொருள் தரும். க. த அ)

நெரி- நெரியுண், நசியுண்டு

(வி) நல்லூர்த் தேர்த்திருவிழாவின்போது கோயில் வீதிகளில் மக்கள் தொகை பெருகி ஒருவரோடொருவர் நெரியுண் டனர்.
(நெரிவு, நெரிதல்-தொ.பெ. நெரிந்தது, நெரிந்த நெரிந்து வி.சொ)

நெறி- வழி

(பெ) மாணாக்கருக்குக் கற்பிப்பதோடு அவர்களை நல்ல நெறி யில் நடக்கச் செய்வதும் ஆசிரியர் கடனாகும்.
(கற்பு, கோயில், சுளுக்கு, நீதி (முறைமை) செவ்வை-க.த.அ)

PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI

பரப்பு- நீளம் அகலம் பொருக்கப்பட்டுப் பொறும் நில அளவு

(பெ (இலங்கையின் பரப்பளவிலும் இந்தியாவின் பரப்பளவு அறுபது மடங்காகும்.

(அகலம், படுக்கை, பரவைக்கடல், உலகம், தொகுதி தெரு, மூகடு, க.ந.அ)

பறப்பு- பறத்தல் (பறவை)

(பெ) பறவைகள் ஓரிடத்திலே தரியாமல் பல இடங்களுக்கும் பறக்கும் பறப்புப் போன்று இன்று எம் மக்கள் பலரின் நிலை ஆகிவிட்டது.

(ஓரிடத்தில் தரிக்காமல் விரைவாக அவ்விடத்தை விட்டு நீங்கிச் செல்பவரை நோக்கி ''ஏன் இந்தப் பறப்பு? என்று வினாவுவது வழக்கம்.)

(பறத்தல், தொ.பெ, பறந்தது, பறந்த, பறந்து, வி சொ)

பரம்பு- மண்பரவிய நிலம்

(பெ) நிலத்தை உழுது பரம்பாக்கி எருவிட்டபின் நெல்விதைப் பர்.

பரவை- ஆழங் குறைந்த கடல்

(பெ) யாழ்ப்பாண நகரைச் சுற்றி ஆழமற்ற பரவை (க்கடல்) உள்ளது.

பறவை- புள்

(பெ) சில பறவைகள் குறித்த காலத்தில் தமதிடத்திலிருந்து நெடுந்தொலைவு பறந்து செல்வதுண்டு.

பறம்பு- தமிழ் நாட்டிலுள்ள ஓர் மலை

(பெ) கடையெழுவள்ளலில் ஒருவனான பாரி பறம்பு மலைக்குத் தலைவன்.

பாரி- கடையெழுவள்ளல்களில் ஒருவன்

(பெ) முல்லைக்கொடிக்குத் தேர் வழங்கிய பாரியின் கெழுதகை நண்பர் கபிலர் என்ற பெரும்புலவர்.

(பாரி என்பது நாககர இசைக்கருவியில் ஒருவகை)

புரம்- காவல் பொருந்திய நகரம்

(பெ) சிவபெருமான் மூன்று புரங்களையும் தமது திருவிழிப் பார்வையால் எரித்துத் தேவர்களுக்கு நன்மை புரிந் தருளினார்.

புறம்- வெளியானது

(பெ) சங்க இலக்கியம் அகம், புறம் என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டு அகம் காதலையும் புறம் வீரத்தையும் தலையாய பாடுபொருள்களாகக் கொண்டன.

(இடம், சுற்று, பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம் காலம், உடம்பு. (க. த. அ.)

புரவு- வயல்

(பெ) சிங்களப்படையினர் தமிழீழத்திலுள்ள பல புரவுகளில் விளைந்த நெல்லைத் தீயிட்டழித்தனர்.

(கொடை, பாதுகாப்பு,செழுமை, அரசிறை, ஆற்று நீர் பாயும் வயல் க. த. அ) (புரத்தல்- காப்பாற்றுதல் புரந்தான், புரந்த, புரந்து) (தொ . பெ) வி . சொ.)

புறவு- புறா

(பெ) கோயிற் கோபுர மாடங்களைப் புறவுகள் தம்முடைய வாழிடங்களாகக் கொள்வதுண்டு.

(குறிஞ்சிநிலம், முல்லைநிலம், விலங்குக்கூட்டம், காடு க. த. அ)

பெரு- [அளவாற்] பெருத்திடு

(வி) பெருமரங்கள் போல பெருத்தாலும் அறிவில்லாதவிடத்து அவ்வாறு பெருத்தவரால் எவ்வித பயனும் இல்லை. (பெருத்தல் - தொ. பெ. பெருத்தான், பெருத்த, பெருத்து- வி. சொ)

பெறு- பெற்றுக்கொள்

(வி) "அவன் தருவதைப் பெறு" என்று ஆசிரியர் மாணவனைப பணித்தார்.

(பெறுகை, பெறுதல் - தொ.பெ, பெற்றான், பெற்ற, பெற்று - வி. சொ)

பொரி- எண்ணெயிலிட்டோ, தாச்சியிலிட்டோ பொரித்த உணவு வகை

(பெ) நோயாளருக்கு நெற்பொரியை அவித்த நீரைப் பருகக் கொடுக்கும் வழக்கம் உண்டு

(பொரியல், பொரித்தல் - தொ. பெ (பொரித்தான், பொரித்த, பொரித்து)

பொர்றி- யந்திரம்

அறிவியல் வளர்ச்சி, பல புதிய பொறிகளைத்தோற்று வித்துள்ளது.

(பெ) புலன்கள் வெளிப்படும் முதற்கருவி

மெய்,வாய்,கண்,மூக்கு,செவி என்பன ஐம்பொறிகளாகும்.

பொறி: பதி

வி) முடியுடை மூவேந்தர் இமயத்தில் தமது முத்திரை (வ.சொ) பொறித்தனர்

பொறு- அடங்கியிரு

(வி) ''அவன் பதில் கூறும் வரை பொறு'' என்றார் என் தாய்.

பொரு- போர்

(பெ) இராமனுக்கும் இராவணனுக்குமிடையே நிகழ்ந்த பொருவில் அரக்கர் பலர் மாண்டொழிந்தனர்.

பொருக்கு- உடற்றோல் மீதுள்ள வெடிப்பு

(பெ) கொழுப்புத் தன்மை உடலிற் குறையும் பொழுது, தோலிற் பொருக்குண்டாகும்

நன்றாக வாட்டப்பட்ட பாண்மேற்பகுதியும் (பாண்-(வெதுப்பி) பொருக்கு என வழங்கும்)

பொறுக்கு- தெரிந்தெடு

(பொறுக்கல்- தொ. பெ, பொருக்கினான், பொருக்கிய பொருக்க வி.சொ)

(வி) கண்ணன் புளியங்கிளைகளை உலுக்கத் தரையில் விழுந்த பழங்களை அவன் தம்பி வண்ணன் பொறுக்கினான்.

பொறுத்தல்- சகித்தல்

(பெ) தம்மிலும் சிறியார் பிழை செய்யினும் பெரியோர்

அதனைப் பொறுத்தல் கடனாகும். (பொறுத்தான், பொறுத்த, பொறுத்து வி. சொ)

**பொருத்தல்- இணைத்தல்**

(தொ பெ.) கம்மியன் இரும்பை உருக்கி அதன் இரு அந்தங்களையும் பொருத்தலில் ஈடுபட்டான்.

(பொருத்தம் = தொ. பெ, பொருத்தினான், பொருத்திய, பொருத்தி- வி. சொ.)

**பொருப்பு- மலை**

(தொ. பெ.) தமிழ்மொழி பொதியப் பொருப்பிலே பிறந்தது என்று புலவர் ஒருவர் புகழ்கின்றார்.

**பொறுப்பு- நீங்காக்கடன்**

(பெ) நாட்டின் எல்லாமக்களுக்கும் ஒரேவகை நீதியை வழங்கும் பொறுப்பு ஆட்சியாளருக்குண்டு.

**மரம்- தரு. விருட்சம் (வ.சொ)**

(பெ) "அறிவாளிகள் நிறைந்த அவையிலே, நீட்டப்படும் ஓலையைப்படிக்க முடியாது நிற்பவனே நல்ல மரம்" என்றார் ஔவையார்.

**மறம்- தீயவொழுக்கம்**

(பெ) மறத்தைக் களைந்து அறத்தை வளர்ப்பதே ஆன்றோர் கடன்-
பெ- வீரம் தமிழ் மன்னனான சங்கிலியனின் மறம் இன்றும் போற்றப் படுகிறது.

**மரி- இயேசு கிறிஸ்து நாதரின் அன்னை**

(பெ) கன்னிமரியும் சூசையப்பரும் இயேசு கிறிஸ்து நாதரின் பெற்றோராவர்

**மரி- இறந்துபோ**

(வி) - சென்ற கிழமை இடம்பெற்ற குண்டு வீச்சில் இருவர், மரித்தனர்.

**மறி- பெண் ஆடு**

(பெ) இந்த மறி அரைப்படி பால் சுறக்கும்
(ஆடு, குதிரை, மான், அழுங்கு ஆகியவற்றின் குட்டியையும் குறிக்கும் க. த. அ)

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்:............
திகதி:............

மறி- தடுத்து நிறுத்து

(வி) கரிகாற் சோழன் காவிரி நீரைக் கடலிற் புகவிடாது மறித்து அணைகட்டினான்

மரு- மருக்கொழுந்து (நறுமணந்தரும் ஒரு கொடிவகை)

பெ) மரு மிகவும் நறுமணம் உடையது
'மணமக்கள் மலரும் மருவும் போல் வாழ்க' எனப் பெரியார் வாழ்த்தினர்.

மறு- களங்கம்

(பெ) நிலவனுடைய இழிசெயல்களால் அவன் பெற்றோருக்கு நீங்காத மறு ஏற்பட்டது

மறு - அடையாளம் (மச்சம்)

(பெ) எழிலியின் முதுகிலே அவள் பிறந்த நாளிலிருந்து ஒரு மறு காணப்படுகிறது

மறு - மறுத்துரை

(வி) சிறுபான்மையினர் என்பதால் எமது உரிமைகளை வழங்க ஆட்சியாளர் மறுக்கின்றனர்.

மருப்பு- கொம்பு

(பெ) - விநாயகர் தமது மருப்பு ஒன்றினை முறித்துப் பாரதக் கதையினை மாமேருப் பொருப்பில் எழுதினார் என்பது தொன்மச் செய்தி (தொன்மம் - புராணம்)

மறுப்பு- பொருளாதாரத் தடைக்கு மறுப்புத் தெரிவித்துத் தமிழ்மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்

(தொ.பெ) (மறுத்தல் - தொ. பெ) மறுத்தான், மறுத்த, மறுத்து வி. சொ.

மரை- காட்டு விலங்கு

(பெ) மான், மரை முதலிய விலங்குகள் ஊன் உண்ணாதவை

மறை- வேதம்

(பெ) ''நான்மறை அறங்கள் ஓங்க'' எனத் திருஞானசம்பந்தர் பாடியருளினார்.

,, - ஒளித்துவை

(வி) - படையினர் மறைந்திருந்து தாக்கியதால் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

**மாரன்- (வ.சொ.) மன்மதன்**

(பெ) - "மாரன் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து எழுந்த தீப்பொறியினால் எரிந்து சாம்பரானான்" என்பர்.

**மாறன்- பாண்டியன்**

(பெ) திருஞானசம்பந்த நாயனார் திருநீற்றுப் பதிகம் பாடிக் கூன்பாண்டியனின் வெப்பு நோயைப் போக்கியதோடு அவனது கூனையும் நிமிரவைத்ததனால் அவன் நின்றசீர் நெடுமாறன் எனப் பெயர்பெற்றான்.

**மாரி- மாரிக்கால மழை**

(பெ) - மாரிக்காலமாதலால் மாரி பொழியும் என்று எதிர் பார்த்து நெல் விதைத்த உழவர் ஏமாந்தனர்.

**மாறி- மாற்றமாகி, மாற்றி**

(வி) கோவலன் கண்ணகியை நோக்கி, "நான் உனது சிலம்பைக் கொண்டு போய் மாறி வருவன். வருத்தத்தை ஒழி" என்றான்

**முரி- பாலைநிலம்**

(பெ) தலைவனும் தலைவியும் முரி வழியாக உடன்போக்கிற் சென்றனர்

" - முரியென்னேவல்

(வி) தந்தையின் கட்டளைப்படி அவரின் மக்கள், ஒன்றாகக் கட்டப்பட்ட ஐந்து தடிகளையும் முரிக்க முனைந்து தோற்றனர்.

(முரித்தல் - தொழிற்பெயர், முரித்தான், முரித்த முரித்து - வி. சொ)

**முறி- ஏட்டில் எழுதப்பட்ட முறி (ஒப்பந்தம்)**

(பெ) அரசு வெளிநாடுகளுடன் எழுதும் முறிகளை அடிக்கடி மீறுகின்றது.

.. - ஒடி

(வி) (முரி என்ற சொல்லின் பொருளையே தரும் முறித்தான். முறித்த, முறித்து, வி. சொ)

**முருக்கு- முள் உள்ள ஒருவகை மரம்**

(பெ) முருக்கமிலையை ஆடு விரும்பி உண்ணும்.

முருக்கு – அழி
(வி) நெடுஞ்செழியன் பகைவரை முருக்ினான்.

முறுக்கு– ஒருவகைச் சிற்றுண்டி
(பெ) பல்லில்லாத முதியோர் முறுக்கைக் கறித்துண்ணல் இயலாது

முறுக்கு- ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்த்துத் திரி
(வி) தென்னந்தும்பை முறுக்கிக் கயிறாக்கும் கைத்தொழில் கொழும்புத் துறையில் நடைபெறுகின்றது.
(முறுக்கல் - தொழிற்பெயர் (பிறவினை) முறுகல் - தொ பெ (தன்வினை) முறுக்கினான், முறுக்கிய, முறுக்கி வி. சொ, முறுகியது, முறுகிய, முறுகி - வி. சொ)

வரப்பு- வரம்பு ('ம்', ப்' ஆனது வலித்தல் விகாரம் எல்லை
(பெ) வயல் வரப்பில் புல் அடர்த்தியாய் வளர்ந்திருந்தது

வறப்பு- வற்று (தல்)
தொ பெ) நீர் வறப்பினாற் பயிர்கள் வாடிக் கருகின.
(வறட்சி தொ. பெ, வறண்டது, வறண்ட) வறண்டு வி. சொ)

வரு(ம்) வருதலைச் செய்யும்
(வி) வருபகை (வினைத்தொகை) நீக்கிக் குடிபுறந்தருதல் (காப்பாற்றுதல்) அரசுக்கு நீங்காக் கடனாகும்.

வறு- வறுஎன்னேவல்
(வி) சட்டியிலே பதமாக வறுத்த கடலை கவையாயிருந்தது. (வறுத்தல் - (தொ. பெ) வறுத்தான், வறுத்த, வறுத்து (வி. சொ)

வரை- மலை
(வி) இலங்கையின் நடுப்பகுதியிலே பல வரைகள் உள்ளன.
,, - மட்டும் (எல்லை)
(இடைச்சொல்) இதுவரை அரசுக்கும் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் எந்த நற்பயனையும் விளைக்கவில்லை

வறை- வறுக்கப்பட்ட கறிவகை
(பெ) முருங்கையிலை, குறிஞ்சாவிலை முதலியன வறை சமைக்கப் பயன்படுகின்றன.
(வறுக்தல் தொ. பெ) வறுத்தாள் வறுத்த, வறுத்து வி சொ

விரகு- தந்திரம்

(பெ) கண்ணபிரானின் விரகுகளாலே கௌரவருக்குத் தோல்விகள் அடுத்து அடுத்து நேர்ந்தன.

விறகு- எரிபொருள்

பெ) விறகுகளை மிதிவண்டியில் ஏற்றிச் சென்று விற்கும் தொழில் இன்று யாழ்ப்பாணத்திலே பரவலாக நடந்து வருகிறது.

'றகரம்' இடம்பெறும் இணைச்சொல் இல்லாது தனித்து 'ர'கரமே இடம்பெறும் சொற்களும், இவற்றின் பொருள் விளக்கும் தொடரியங்களும்)

அரக்கர்- (வ. சொ.) புராணங்களிலும் இதிகாசங்களிலும் வரும் ஓர் இனத்தினர்

(பெ.) தென்னிலங்கை வேந்தனான இராவணன் அரக்கர் இனத்தைச் சேர்ந்தவன் என்பர்.

அரக்கு- செம்மெழுகு

(பெ) பாண்டவரைச் சூழ்ச்சியாற் கொல்ல எண்ணிய துரியோதனன் அரக்கினாலே மாளிகை கட்டுவித்து அவர்களை அதிற் குடியிருத்தினான்.

,, நகர்த்து

வி)" மேசையைச் சற்றே அரக்கு" என்று ஆசிரியர் மாணாக்கனுக்குச் கூறினார்.

அரங்கு- (வ. சொ) கலைநிகழ்ச்சிகள் நடக்கும் மேடை மண்டபம்

(பெ) திறந்தவெளி நாடக அரங்கிலே 'கர்ணன்' கூத்துச் சிறப்பாய் நடந்தது.

அரங்கியல்- நாடகக்கலை தொடர்பான பயிற்சிநெறி

(பெ) யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையில் அரங்கியல் ஒரு பாடமாய் இடம்பெற்றுள்ளது.

அரசியல்- நாட்டாட்சி தொடர்பான கலை

(பெ) இன்று அரசியலில் ஈடுபடுவோர் தந்நலமே மிகுதியும் உடையவராய் மக்களுக்கு இன்னல் பல விளைக்கின்றனர்.

**அரசு- ஆட்சியமைப்பு ஆள்வோனையும் குறிக்கும்**

(பெ) அரசு என்பது மக்கள் நலத்துக்கேயன்றி ஆள்வோரின் நலத்துக்கன்று.

(அரசன், அரசவை, அரசாட்சி, அரசுகட்டில், அரசிருக்கை, அரசுப்பணி என்பனவெல்லாம் அரசு என்ற சொல்லடியாகப் பிறந்தனவே.)

**,, ஒருவகை மரம்**

பெ) புத்தர் வெள்ளரசின் கீழ் அமர்ந்து தவம்புரிந்து ஞானம் பெற்றார்.

(தவம், ஞானம் என்பன வடசொற்கள்)

**அரணம்- (வ.சொ) கோட்டை**

(பெ) யாழ்ப்பாணப் பட்டினத்திலே பறங்கியர் அரணம் அமைத்தனர்.

**அரண்- காப்பிடம்**

(பெ) தம்முடைய அரண்களில் இருந்த வண்ணம் எறிகணைகளை வீசி மக்களையும் உடைமைகளையும் அழித்தல் அறமாகாது.

**அரணி- (வ.சொ) தீக்கடைக்கோல்**

(பெ) முற்காலத்தில் அரணி கொண்டு தீ மூட்டுவது வழக்கமாயிருந்தது.

**அரமனை- அரசமாளிகை (அரண்மனை எனவும்படும்(**

(பெ) அரமனை வாழ்க்கை நிலையானதன்று.

**அரணை- ஊரும் பிராணிகளுள் ஒருவகை பல்லியினத்தைச் சேர்ந்தது**

(பெ) 'அரணை கடித்தால் மரணம்' என்ற நம்பிக்கை சிலரிடம் நிலவுகிறது.

**அரந்தை- துன்பம்**

பெ) திருஞானசம்பந்தப்பிள்ளையின் அரந்தைகெட உமாதேவியார் திருமுலைப்பால் சுரந்தருளினார்.

**அரதனம்- (வ. சொ.) இரத்தினக்கல்.**

அவனுடைய கணையாழியிலே அரதனம் பதிக்கப்பட்டுள்ளது.

அரமங்கை- தெய்வப்பெண்

(பெ) அரமங்கையர் பற்றிய செய்திகள் பழந்தமிழ் நூல்களிலே காணப்படுகின்றன.

அரமியம்- (வ.சொ) நிலாமுற்றம்

(பெ) அரமியத்திலே தோழியரோடு நின்ற சீதையை மிதிலையின் தெருவழியே வந்த இராமன் நோக்கி அவள் மீது காதல் கொண்டான்.

அரவணை - பாம்பணை

(பெ) திருமால் பாற்கடலிலே அரவணை மீது பள்ளிகொள் வதாகக் கூறுவர்.

,, ஆதரி

(வி) சிறந்த ஆட்சி என்பது குடிமக்கள் யாவரையும் .உயர்வு தாழ்வு கருதாது அரவணைத்தலே.

(அரவணைத்தல் (தொ பெ. அரவணைத்தான், அரவணைத்த வி.சொ.)

அரவிந்தம்- (வ:சொ.)

பகலவனைக் கண்ட அரவிந்தம் போல மகனைக்கண்ட

(பெ) தாயின் முகம் மலர்ந்தது.

அரளி- ஒருவகைச் செடி

(பெ) அரளிப்பூக்கள் கொண்டு மாலைதொடுத்துத் தெய்வப் படிமங்களுக்குச் சாத்துவதுண்டு.

அரற்று- அழுதுகதறு

(வி) அழுதரற்றினால் மாண்டார் மீள்வரோ?

(அரற்று- (தொ. பெ.) அரற்றினான், அரற்றிய, அரற்றி - வி. சொ.

அராமம்- (வ.சொ.) பூஞ்சோலை

(பெ) யாழ்ப்பாணத்தை அழகு செய்யும் வகையிலே கிட்டு நினைவராமம் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ளது

அரிசி- (வ.சொ) உமி நீக்கிய தானியம் (கூலம்)

(பெ) நெல்லரிசி மட்டுமன்றி வரகரிசி சாமையரிசி முதலி யனவும். சோறாக்கி உண்ணத்தக்கனவே.

அரிச்சுவடி - தமிழ் நெடுங்கணக்குச் சுவடி

(பெ) அடிச்சுவடி கற்ற பின்னரே சொல், சொற்றொடர், தொடரியங்கள் கற்பது முன்னைய கல்விமுறை,

அரிமா- ஆண்சிங்கம்

(பெ) காட்டிலே அரிமா தனது இணையுடன் இரைதேடி அலைந்தது.

அருகன்- சமணக்கடவுள்

(வி.சொ) சமண ஆசிரியர் நூல் இயற்றத் தொடங்குகையில் அருகனை வணங்கிக் காப்புச் செய்யுள் இயற்றினர்.

,, - (வ. சொ.) தகுதியானவன்

(பெ.) மக்கள் இடருறுங்காலத்தில் அவர்களுக்கு உதவாது தேர்தற் காலத்திற் போலிப்பரிவு காட்டுவோர் ஆட்சிக்கு அருகராகார்.

அருச்சனை- (வ.சொ.) கடவுளை மந்திரம் கூறிப்பூசித்தல்

(பெ) வெள்ளிக்கிழமை தோறும் செங்கீரன், நல்லூர்க் கோயிலிலே தன் பெயருக்கு அருச்சனை செய்விப்பான்.

(அருச்சகர்-பூசகர்)

அருட்டு- தூண்டிவிடு

(வி) பொதுமக்களை அருட்டித் தமது நோக்கத்தை நிறைவேற்றும் அரசியலாளர் கொலையிற் கொடியவர்.

(அருட்டுதல் - தொ.பெ ]துயிலிலிருந்து மெல்ல எழுப்தல் என்ற பொருள், இலக்கணையாக மேற்குறித்த தொடரியத்திற் கையாளப்பட்டது ]

(அருட்டினான், அருட்டிய அருட்டி, வி.சொ)

அருணம்- (வ. சொ.) சிவப்பு

(வி) கதிரவன் மேற்கில் மறைகையில் வானத்தில் அருணம் படர்ந்திருந்தது.

அருணன்- (வ.சொ.) கதிரவன் (அருணனின் தேரை நடத்தும் வலவனையும் (வலவன் -சாரதி) குறிக்கும்)

,, (''அருணன் உதித்தனன். அம்புயம் விண்டல'' என்பது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடலில் ஓர் அடி

அருந்தல்- குறைவாயிருத்தல்
தொ.பெ) இன்றியமையாப் பொருட்களுக்கு இன்று அருந்தல் ஏற்பட்டுள்ளது.

,, -குடித்தல்

(தொ.பெ.) உண்ணும் பொழுது நீர் அருந்ததலைத் தவிர்த்தல் நல்லது.
(அருந்தினான், அருந்திய, அருந்தி, வி.சொ)

அருமை- எளிதிற்கிடைக்காமை
(பெ) 'நிழலருமை வெயிலிலே தெரியும்' என்பது பழமொழி.

அருள்- பரிவு, இரக்கம்
(பெ) 'அவன் அருளாலே அவன்தான் வணங்கி' என்பது சிவபுராணத்தில் ஓர் அடி.

ஆரணம்- வேதம்
(வ.சொ) ஆரணங்கள் நான்கையும் கற்றுத் தேர்ந்தோரைச் 'சதுர்வேதிகள்' என்பர்.

ஆரம்- கடம்பமரம்
பெ) ஆரப்பூவால் அமைந்த மாலை முருகப் பெருமானுக்கு மிகவும் விருப்பமானது.

,, -(வ. சொ.) முத்துமாலை, மாலை
(பெ.) பெறுமதிமிக்க ஆரம் அணிவதிற் பெண்களிற் பலருக்கு ஆர்வம் உண்டு

ஆராதனை- (வ. சொ.) வழிபாடு
(பெ.) நாள்தோறும் கடவுளை ஆராதனை செய்வது அடியார்களின் வழக்கம்.

ஆராத்தி- (வ. சொ.) ஆராதனைக்குரிய தீபம்
(பெ.) ஐந்து தீபக்கால் கொண்ட தீபம் பஞ்சாராத்தி என வழங்கும்.
(ஆராதித்தல் - (தொ.பெ.) ஆராதித்தான் ஆராதித்த, ஆராதித்து வி.சொ)

ஆராய்ச்சி- ஆய்வு
(பெ) இன்று தமிழ் பற்றிய ஆராய்ச்சி பரவலாக நடைபெறுகின்றது.
ஆராய்தல், ஆராய்வு, (தொ.பெ) ஆராய்ந்தான், ஆராய்ந்த, ஆராய்ந்து (வி.சொ)

**ஆரியர்- (வ.சொ.) ஓர் இனத்தினர்**

(பெ)) கி. மு 1500 ஆம் ஆண்டளவில் ஆரியர் நடு ஆசியாவிலிருந்து இந்தியா வந்து குடியேறினர் என்பது வரலாறு.

**ஆருடம்- (ஒருவர் நினைப்பதைக் கூறும்) சோதிடம்**

பெ.வசொ) ஒருவரின் வாழ்வில் இதுதான் நிகழும் என்று ஆருடம் கூறுவது எல்லாக காலத்திலும் பொருந்தும் என்று கூறல் இயலாது.

**இரசம்- (வ.சொ) சுவை**

நடனம், நாடகம் ஆகிய கலைகளில் ஒன்பான் சுவைகளை வடசொல்லில் நவரசம் என்பர்.

,, (மிளகு, உள்ளி முதலிய சரக்குகள் சேர்த்து ஆக்கி உணவோடு சேர்க்கும் குடிவகை)

பெ) இரசம் காரச்சுவையுடையதாயினும் உணவைச் செரிக்கச் செய்ய வல்லது.

**இரசனை- (வ.சொ.) நயப்பு**

(பெ.) கலைகளில் இரசனையுடையோர் மென்மையான உணர்வுகளைக் கொண்டிருப்பர் என்பது எதிர்பார்ப்பு.

**இரவி- (வ. சொ.) சூரியன்**

(பெ.) முற்காலத்தில் அரசர்கள் சிலர் தாம் இரவிகுலத்தினர் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டனர்.

**இராகு- கிரகங்களுள் ஒன்று (கிரகம் வ.சொ) (கோள்)**

பெ.வ.சொ இராகு, கேது என்பன பெரும்பாலும் தீங்குபயக்கும் கோள்கள் என்பர்.

**இராசா- (வ. சொ.) அரசன்**

(பெ) நாட்டை ஆளும் இராசாவானாலும் அவன் தாய்க்குப் பிள்ளைதான்.

**இராச்சியம்- (வ. சொ) அரசு**

பெ தொடக்கம் பதினாறாம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இராச்சியம் சீருடனும் சிறப்புடனும் நிலவியது

இருள்- அந்தகாரம் (வ.சொ)

பெ தமிழீழம் அமையுமானால் தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த வாழ்விலே ஒளி பிறக்கும்.

இருட்டு (தொ பெ) (இருண்டது, இருண்ட, இருண்டு- வி. சொ.)

இரேகை- (வ. சொ.) வரி

(பெ. சோதிடர் (கணி என்பது தமிழ்ச்சொல்) செந்தாமரையின் கையிலுள்ள -இரேகைகளை ஆராய்ந்து அவளின் எதிர்காலம் பற்றிய செய்திகளை விரிவாகக் கூறினார்.

ஈரம்- நீர் வற்றாது ஏற்படும் குளிர்ச்சி.

(பெ) மண் தரையை மெழுகிய ஈரம் இன்னும் காயவில்லை.

,, - இரக்கம்

(பெ) 'ஈரமில்லாத நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் நீர்மேல் எழுத்துக்கு நேர்' என்பது ஔவையாரின் அமுதமொழி.

உரம்- வலிமை

உடலுரமிருப்பினும் மனவுரமில்லையேல் அவர்கள் கோழைகளே

உரசுதல்- தேய்த்தல் (உரஞ்சுதல்- என்பது பேச்சு வழக்கு)

(பெ) முதுகில் ஏற்படும் சொறிவை மாடுகள் கற்களிலும், மரங்களிலும், உரஞ்சுதலாலே தீர்த்துக் கொள்ளும். (உரசினான், உரசிய, உரசி- வி. சொ).

உருளரிசி- கொத்துமல்லி

(பெ) தேயிலைக்குப் பதிலாக உருளரிசியை அவித்துப் பருகுதல் உடல் நலத்துக்கு உகந்தது.

உருளி- சில்(லு)

(பெ)- மிதிவண்டிக்கு இரண்டுஉருளிகள் உள்ளமையால் அதனை உருளி எனவும் அழைப்பதுண்டு. (துவிசக்கரவண்டி வடசொல்லும் தமிழ்ச்சொல்லும் இணைந்த கலப்புச் சொல்)

உருபு- (வேற்றுமை, உவமை,) சொற்களின் பின்னொ
டாய் அமையும் இடைச்சொல்

(பெ) வேற்றுமைக்கு உருபிடைச்சொல், சொல்லுருபு என இரு
வகை உருபுகள் கையாளப்படும்.

உருபு- வடிவம்

(பெ) 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்பது வள்ளுவர்
பழமொழி
(எள்ளாமை- எளனஞ் செய்யாமை)

,, - வெளியில் எடு

(வி) நெடுஞ்செழியன் தனது வாளை உறையினின்றும் உருவி
னான்.

உரோசம்- (வ.சொ) தன்மான உணர்வு

[பெ. வ சொ] உரோசம் இல்லாதவரின் வாழ்க்கை நடைப்
பிணத்தின இயக்கத்தை ஒத்ததாகும்

உரோமம்- (வ.சொ) மயிர்

[பெ] செம்மறியாட்டின் உரோமத்திற் கம்பளி செய்ய
லாம்

ஊரன்- மருதநிலத் தலைவன்

[பெ] சங்ககால அகத்திணை மரபின் ஊரன் பரத்தையரை
நாடிச் சென்ற செய்திகள் பல காணப்படுகின்றன.

ஊருணி- ஊராருக்குப் பொதுவான குடிநீர் பெறும்
குளம்

[பெ] 'பேரறிவாளனின் செல்வம் ஊருணி நீர்போல எல்லார்க்
கும் பயனாகும்' என்பார் வள்ளுவர்.

எரிச்சல்- பொறாமை

[பெ] பாண்டவரின் மேன்மைகண்டு துரியோதனன் அவர்க
ளில் எரிச்சல் கொண்டான்.

[சினம், அழற்சி, உறைப்பு, பெருங்காயம்- க. த. அ.]
[எரிவு- தொழிற்பெயர்]

எருக்கு- ஒருவகைச் செடி எருக்கலை எனவும் வழங்கும்

[பெ] வெள்ளெருக்கும் பூவினைச் சிவபெருமான் தமது முடியில்
[வட சொல்] அணிந்தருளுவார்.

எழுது- (வ.சொ.) மாடு, (ஆண்) இடபம்

[பெ] எருதுகளையும் எருமைகளையுங் கொண்டு வயல்களை உழுவது இன்று அருகிவருகிறது.

எருத்தம்- கழுத்து (எருது எனவும் வழங்குவர்)

(பெ) எருத்தின் எருத்தத்தில் ஈகள் மொய்த்தன.

எருமை- வளர்ப்பு விலங்குகளுள் ஒன்று

(பெ) எருமைகளுக்குச் சேற்றிலே கிடப்பதில் விருப்பம் உண்டு.

எருவை- கழுகு

(பெ) தலையாலங்கானத்துச் செருக்களத்தில் இறந்து கிடந்த பிணங்களை எருவைகள் குத்திக் குதறின.

ஐராவதம்- (வ. சொ) இந்திரனின் ஊர்தி (யானை- வெள்ளை நிறமுடையது.)

(பெ) இலங்கை வேந்தனான இராவணன் இந்திரனின் ஐராவதத்தைத் தாக்கியபொழுது அதன் கொம்புகள் அவனது மார்பைத் துளைத்தன

ஒருங்கு- ஒருமிப்பு

(வி) ஈழத்தமிழ்மக்கள் ஒருங்கு கூடித் தங்கள் உரிமைகளைக் காக்கப் போராடி வருகின்றனர்.

ஒருதலை- துணிபு

(பெ) தொழில்தேடி வெளிநாடு செல்பவர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பது ஒருதலை.

ஒருவுதல்- நீங்குதல்

(பெ) தீமைகளை ஒருவுதலால் வாழ்க்கையிலே பல நன்மைகளை அடையலாம் என்பது உறுதி.

ஓரம்- விளிம்பு

(பெ) முள்ளிலே சிக்கிய வெண்மதியின் புடைவையோ ஓரம் கிழிந்தது

,, கரையின் எல்லை

(பெ) ஆற்றங்கரையோரமாக மாலை வேளையிற் காதலர் இருவர் உலாவினர்.

ஓரி- நரி

(பெ) இறந்த உடல்களைச் சுற்றி நின்று ஓரிகள் ஊளை யிட்டன.

ஓரை- (தி.சொ) நேரம்

(பெ) அவர்களின் திருமணம் நல்லோரையில் நிகழ்ந்தது. (ஒரை - ஹோரா என்ற கிரேக்கச் சொல்லின் திரிபு)

கரகம்- (வ.சொ) குடம்

(பெ) பெண்ணொருத்தி நான்கு கரகங்களைத் தலையிலே ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிபவண்ணம் அவை கீழே விழாவண்ணம் திறமையுடன் நடந்துவந்தாள்.

கரடி- உடலெங்கும் மயிரடர்ந்த காட்டு விலங்கு

(பெ) நீண்ட காலத்தின் பின்பு தன் நண்பனைக் கண்ட திருமுருகன் "உன்னைக் காண்பது கரடி கார்த்திகைப் பிறை கண்டது போல இருக்கிறது" என்றான்,

காடு- (முருடு) -தடிப்பு

(பெ) கரடு முருடான கற்களைச் செதுக்கிக் கற்காலமக்கள். தாக்கும் கருவிகளைச் செய்து வேட்டைக்குப் பயன் படுத்தினர்

கரணம்- (வ.சொ) கூற்றுவகை

(பெ) ஆடல் வல்லானாகிய இறைவன் நூற்றெட்டு வகைக் கரணங்களை ஆடியருளினான்.

,, - (வ.சொ) தலை கீழாகவும் கால் மேலாகவும் சுழலுதல்.

(பெ) சிறுவர் சிலர் தம்முடைய தலைகள் தரையிற் படாத வண்ணம் கரணமடித்துத் தம் திறமையை வெளிப் படுத்தினர்.

,, -(வ.சொ) அகத்துறுப்பு

(பெ) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அக்கர ணங்களாகக் கொள்ளப்படும்

,, -(வ.சொ) புறத்துறுப்பு, அகத்துறுப்பு

(பெ) மனம், வாக்கு, காயம் என்பன திரிகரணங்கள் எனப்படும்.

கரம்- (வ.சொ) கை

(பெ) ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் பொருந்திய முருகனை ஆறுமுகன் என்று அழைப்பர்

,, - எழுத்தின் சாரியை

(பெ) 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு' என்பது திருக்குறட் கடவுள் வாழ்த்தின் முதற்செய்யுள்.

கராம்பு- ஒருவகைச் சரக்கு

(பெ) ஐரோப்பியர் கறிகளுக்கு மணமூட்டும் ஏலம், கராம்பு முதலிய சரக்குகளை நாடிக் கிழக்கு நாடுகளுக்கு வந்தனர்.

கருதலர்- பகைவர்

(பெ) பேரின ஆட்சியாளர் ஈழத்தமிழரை நீண்டகாலமாகத் தம்முடைய கருதலராகவே கருதி வருகின்றனர்.

கருது- நினை

(வி) (கஷ தொடரியத்தைப் பார்க்க)

(கருதது - தொ. பெ, கருதினான், கருதிய, கருதி வி. சொ)

கருத்தா- (வ சொ) செய்பவன் -(வினைமுதல்)

(பெ) 'திருவள்ளுவர் படித்தான்' என்பதில் திருவள்ளுவர் கருத்தாவாகு பெயர்.

கருப்பூரம் - (வ.சொ) கர்ப்பூரம்

(பெ திருமாலின் அழகிய செவ்விதழை நோக்கி ஆண்டாள் 'கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ' என்று ஆராமையோடு பாடினார்

கரும்பு - ஒருவகைச்செடி

(பெ) கரும்பின் சாற்றிலிருந்து வெல்லம், சருக்கரை, சீனி ஆகியன ஆக்கலாம்.

கருவம்- (வ.சொ) அகந்தை

பெ செல்வர்களை அழகுசெய்யும் அணிகலம் கருவமற்ற அடக்கமே என்று திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

காரணம்- (வ. சொ) (பொருட்டு) ஏது
(பெ மனைவி கணவனை நோக்கி, 'காரணமின்றி என்மீது சினங்கொள்ள வேண்டாம்' என்றாள்.

காரம் - உறைப்பு
(பெ) அவர் ஆட்சியாளரின் ஊழல்களைக் காரசாரமாகக் கண்டித்து உரையாற்றினார்

;, - எழுத்தின் சாரியை
(பெ) - தமிழ நெட்டெழுத்துகளுக்குக் காரம்என்ற சாரியை சேர்த்து வழங்குவர் ('ஐ'காரம் ஔகாரம்)

காராக்கிருகம் - (வ.சொ) சிறைச்சாலை
(பெ) -எந்தவொரு குற்றச்சாட்டுமின்றி இளைஞர்கள் இலங்கைக் காராக்கிருகங்களிலே பல்லாண்டுகளாய் அடைபட்டுக்கிடக்கிறார்கள்.

கிரகம்- (வ.சொ) கோள்
(பெ.) - கிரகங்கள் தமக்கென ஒளியில்லாதவை

கிரகணம்- (வ.சொ) சூரிய சந்திரர்களின் மறைப்பு
(பெ) சூரிய கிரணகத்தின் போது பூமி எங்கும் இருள் பரந்தது.

கிரணம்- (வ. சொ) கதிர்
(பெ) சூரிய கிரணங்கள் கூரைத் துளைகளினூடாகத் தரையிலே விழுந்து ஒளிப்பொருட்டுக்களாய்க் காட்சிதந்தன

கிரமம்- (வ.சொ) ஒழுங்கு
[பெ.) நாள்தோறும் கிரமமாகப் படித்துவந்தால் எந்தத் தேர்விலும் சிறப்பாகத் தேறலாம்.

கிராமம்- (வ.சொ) ஊர்
(பெ) கிராம வாழ்க்கை நகரவாழ்க்கையிலும் அமைதியானது

கிரி- (வ.சொ) மலை
[பெ] - யாழ்ப்பாணத்திலே கிரிகளோ ஆறுகளோ இல்லாதவிடத்தும் மக்கள் தங்கள் கடும் உழைப்பினால் மண்ணைச் செழிப்புடையதாய் ஆக்கினார்கள்.

கிருகம் (வ.சொ) வீடு

(பெ) புதுமனை புகுதலைக் 'கிருகப் பிரவேசம்' என்ற வட சொற்றொடரால் முன்பு வழங்கிவந்தனர்.

கிருமி- (வ.சொ) புழு

[பெ] நோய்க்கிருமிகளை அழிப்பதனால் நோய் வருமுன்பே எம்மைக் காப்பதற்கு வழி உண்டாகின்றது.

கீரி- பாம்புக்குப் பகையான விலங்கு

(பெ) இனக்காழ்ப்பினால் இந்நாட்டில் பேரினமும், சிற்றினங்களும் கீரியும் பாம்பும் போலக் கடந்த பல்லாண்டுகளாய்ப் பகையினை வளர்த்து வந்துள்ளன.

கீரை- கறிக்குப் பயனாகும் இலைவகை

பெ] உணவோடு கீரைவகைகளைச் சேர்த்துண்பது உடல் நலத்துக்கு இன்றியமையாததாகும்.

குரம்பை- கூடு

(பெ) குரம்பையிலே அடைத்து வைத்த கிளி விடுதலையை வேண்டி எந்நேரமும் குரலெடுத்து வருகின்றது.

.. - சிறுகுடில்

[பெ] இன்று ஏதுமிலார் (அகதிகள்) குரம்பைகள் அமைத்து மிகக் கடினமான வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

குரல்- ஓசை

[பெ] இசையில் திறமையடையக் குரலினிமை மட்டும் போதியதன்று

,, - ஏழுசைகளில் (சுரங்களில்) ஒன்று

[பெ] குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன தமிழர் ஏழு சுரங்களுக்கும் இட்டு வழங்கிய தமிழ்ப்பெயர்கள்,

குரவம்- ஒருவகை மரம் (பாவை வடியிற் பூ அமைந்தது)

[பெ] மலையகத்து மங்கையொருத்தி குரவம் பூவினைப் பாவை என்று மயங்கினாள்

குரவை- பெண்கள் மகிழ்ந்து பாடும் ஒருவகைப் பாடல்

(பெ) தங்கள் தோழியின் திருமணத்தன்று இளம் பெண்கள் குரவையிட்டனர்.

குரிசில்- பெருமை மிக்க ஆண்மகன்

[பெ] தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சிறுவனாய் இருந்த காலத்திலேயே தனது வீரத்தாற் குரிசில் என்று போற்றப்படும் நிலையை அடைந்தான்

குருடன்- கண்பார்வையற்றவன்

[பெ] துரியோதனனின் தந்தையான திரிதராட்டிரன் பிறவிக் குருடன்.

குருதி- இரத்தம்(வ. சொ.) ,செந்நீர் (த. சொ.)

(பெ . வ . சொ.) எமது உரிமையைக் காத்திடக்குருதியை ஆறாக ஓடவிடவும் நாம் பின்னிற்கோம்

குருத்து - இலை குழைகளின் தொடக்கநிலை

(பெ) தமிழீழத்தில் இன்று இளங்குருத்துகளும் வீர உணர்வு மிக்கவராயுள்ளனர்

குருவி - பறவை

(பெ) "காக்கை குருவி எங்கள் சாதி நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்று பாரதியார் பாடினார்.

குரோதம் (வ. சொ) உட்பகை

(பெ) சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் கொண்ட குரோதம் இனக்குழப்பமாகிப் பலரின் உயிர்களைக் கொள்ளை கொண்டது.

கோரம் (வ. சொ.) அச்சமிகுதியை ஏற்படுத்துவது. பயங் கரம் (வ.சொ)

(பெ) அண்மையில் எமது நாட்டிலே பல கோரக் கொலைகள் இடம்பெற்றன.

கோரிக்கை - வேண்டுகை

(பெ) கடந்த காலத்தில் தமிழரின் நேர்மையான கோரிக்கைகள் பலவும் ஆட்சியாளராலே புறக்கணிக்கப்பட்டன. (கோருதல், கோரல்- தொ.பெ கோரினான், கோரிய, கோரி- வி.சொ)

கோரை-ஒருவகைப்புல்

(பெ) கோரைப்புல்லை ஆடு மாடுகள் விரும்பி உண்ணமாட்டா.

கௌரவம்- (வ.சொ) மதிப்பு
(பெ) கௌரவம் என்பது கொடுத்துப் பெறுவதன்றித் தானாகவே வந்துசேர்வதில்லை.

சரக்கு - ஒருவகைப்பண்டம்
(பெ) இன்று பலசரக்கு வாணிகம் பொருளாதாரத் தடையினாலே பெரிதும் முடங்கியுள்ளது

சரசுவதி - (வ. சொ.) கலைமகள்
(பெ ஆண்டுதோறும் நவராத்திரிவிழாவின் இறுதி மூன்று நாள்களும் சரசுவதி பூசைக்கென ஒதுக்கப்படுகின்றன.

சரண்-(வ. சொ.) அடைக்கலம்
(பெ.வ.சொ) இறைவனைச் சரணடைந்தால் எந்தக் கவலையும் இல்லையாகும்.
(சரணாகதி என்பதும் இதேபொருளில் வரும் வடசொல்)

சரம் - (வ.சொ) அம்பு
(பெ இராமன் சரங்களால் இராவணனின் உடல் எள்ளிருக்கவும் இடமின்றித் துளையுண்டது.

,, பூக்கள், இலைகள்கொண்டு தொடுக்கும் தொங்கல்
(பெ.) திருமண வீட்டிலே பூச்சரங்கள் அழகாகத் தொங்கவிடப்பட்டன.

சரளம் (வ.சொ.) தடையின்மை
[பெ] எங்கள் ஆசிரியர் ஆங்கிலத்திற் சரளமாக எழுதவும் பேசவும் வல்லவர்

சுராசரம்- (வ. சொ.) இயங்குவனவும் நிற்பனவுமான பொருள்கள்.
[பெ] சராசரங்கள் யாவும் சூழல் மாசுறுவதால் அழிவுறும் நிலையில் உள்ளன.

சரி- (தி, சொ.) ஏற்புடையது
[பெ] சரி, பிழை என்பவற்றின் வேறுபாட்டினை அறிந்து கொள்ளாது மனம் போனபடி நடந்தால் அழிவு உறுதி.
[வி]- சாய்
கொந்தளிக் கடலிற் சென்ற படகு ஒரு பக்கமாகச் சரியப் பயணிகள் அஞ்சி மறுபக்கத்திற்கு விரைந்தனர்.
(சரிதல் தொ.பெ, சரிந்தது, சரிந்த, சரிந்து-வி.சொ)

சரிதம் (வ. சொ.)வரலாறு

[பெ] தமிழ்ப்பேரறிஞர் உ. வே சாமிநாதையர் எழுதிய 'என் சரிதம்' சுவை நிறைந்த ஒரு நூல்.

சரிவு- சாய்வு

[பெ] மலைச்சரிவிலே ஏறுவது கடினமாயிலும் இறங்குவது அத்துணைக் கடினமன்று

சருக்கரை - இனிப்புச்சுவையுடைய பொருள்

பெ: பயற்றம் பருப்பும் சருக்கரையும் அரிசியும் சேர்த்துச் செய்யும் இனிய பண்ணியம்
(பண்ணியம்-பணிகாரம்)

சருக்கம்- சிறுபிரிவு

காவியதின் உட்பிரிவிலே பெரும்பிரிவு காண்டாம் எனவும் சிறு பிரிவு சருக்கம் எனவும் வழங்குவதுண்டு.

சருமம் - வ. சொ. தோல்

[பெ] என் நண்பனுக்குச் சருமநோய் உண்டாகி அவன்பெரிதும் துன்பம் உற்றான்.

சருவம்- (வ. சொ.) (சர்வம்)- எல்லாம்

[பெ] சருவஉலகத்திற்கும் தலைவராயுள்ளவர் இறைவனேயாவர்.

செப்பு வெள்ளியாலான கலம் [பாத்திரம்]

(பெ)- குடத்தின் அமைப்பிலும் சருவத்தின் அமைப்பு சிறிது வேறுபட்டது.

சாரணர்- (வ. சொ.) ஒற்றர், தொண்டர்

[பெ[ போர்க்காலத்திலே ஒற்றராய் விளங்கிய சாரணரின் பணியினை நாட்டுப் பணியாக விரிவாக்கம் செய்த பெரியார் பேடன் பவல் ஆவர்.

[சாரணீயம்- சாரணர் குழு]

சாரம் - (வ. சொ.) சத்து

(பெ) சாரமற்ற பேச்சைக் கேட்பது நேரக்கழிவை ஏற்படுத்துவதேயன்றி எவ்வித பயனும் அளிக்காது.

7

சாரம்- பக்க மரம் (நாட்டப்படுவது)

(பெ) வீடு முதலியவற்றைக் கட்டுகையிற் சுவர் அமைப்பதற்கு உதவியாக நாட்டி வீடு கட்டியதும் பிடுங்கப்படும் மரங்கள் சாரம் எனப்படும்.

,, இனிமை

(பெ) "தனிமை கண்டதுண்டு அதிலே சாரம் இருக்குதம்மா" என்று பாரதியயர் பாடினார்.

சுரபி - சுரக்கும் கலம்

(பெ) மணிமேகலை தனது அமுதசுரபியிலிருந்து உணவு பெற்று ஏழைகளின் பசிபோக்கினாள்.

சுரன்- (வ. சொ,) தேவன்

(பெ) தேவர்களைச் சுரரென்றும் அரக்கர்களை அசுரர் என்றும் வடமொழியில் அழைப்பது வழக்கம்.

சிரங்கு - உடற்றோலில் உண்டாகும் புண்

[பெ] சிரங்கு ஓர் ஒட்டுநோயாதலால் அந்நோய்க்குள்ளானவரின் உடைகளை நோயற்றோர் தரித்தல் கூடாது.

சிரசு - (வ. சொ) தலை

(பெ) இலங்கையின் சிரசுபோல யாழ்ப்பாணம் விளங்குகின்றது. (சிரம் என்பதும் இதேபொருள் தரும்.)

சிரத்தை - (வ. சொ.) ஆர்வம்

(பெ) இறந்தோருக்கு ஆண்டுதோறும் சிரத்தையுடன் செய்யும் நினைவுக்கிரியை சிராத்தம் எனப்படும். (திவசம்)

சிரிப்பு - நகைப்பு

[பெ] சிரிப்பதனாலே கவலைகளை மறக்கலாம்.

சிருட்டி- (வ.சொ) படைப்பு

பெ) நாட்டுக்கும், இனத்திற்கும், மொழிக்கும் நன்மை தராத சிருட்டிகளை எழுத்தாளர் ஆக்குவது மன்னிக்க முடியாத குற்றம்.

PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI

சிரோமணி - (வ.சொ) முடிமணி

(பெ.) நாவலரின் மருமகரான ந.ச பொன்னம்பலபிள்ளை தமிழ் கற்ற வித்துவான்களுள்ளே [அறிஞர்களுள்ளே] தலையாயவர் எனபதால் அவர் வித்துவ சிரோமணி என அழைக்கப்பட்டார்.

சிரகம் - (வ. சொ) ஒருவகைக் கறிச்சரக்கு

(பெ) மிளகு, சீரகம், உள்ளி, சேர்த்து இரசம் ஆக்கியது மிகவும் சுவையாயிருந்தது.

சிராட்டல். கொண்டாட்டம்

[பெ] தாய் தன் குழந்தையைச் சிராட்டல் கண்டு தந்தை மகிழ்ந்தார்,

[சீராட்டினான், சீராட்ட, சீராட்டி- வி.சொ.]

சுரங்கம் (வ.சொ) நிலக்கீழறை

(பெ] சுரங்கத் தொழிலாளரின் வாழ்க்கை ஒரு காலத்திற் பல இன்னல்களும் நிறைந்ததாய் இருந்தது.

சுரத்தல் - (வ.சொ) ஊறுதல்

(பெ.) கிணற்றை இறைக்க, இறைக்க நீர் சுரத்தல் கண்டு களிப்படைந்தேன்.

[சுரந்தது, சுரந்த, சுரந்து- வி.சொ.]

சுரம்- (வ. சொ) பாலைநில

[பெ] தலைவன் உடன் போக்கில் தலைவியோடு சுரத்தில் நடந்து சென்றான்.

(பெ)

" நோய் நீண்டநாட் சுரத்தினால் என் தம்பியின் உடல் மெலிவடைந்தது.

இசையின் ஒரு தானம்

[பெ] கருநாடக சங்கீதத்தில் ஏழு சுரங்கள் கையாளப்படுகின்றன.

சுரி- சேறு

[பெ] தாமரைப்பூக்களைப் பிடுங்கவென்று குளத்தில் இறங்கிய சீர்மாறன் சுரியில் அகப்பட்டுத் தடுமாறினான்.

சுருக்கம்- சுருங்கிய அளவில்

[பெ] மூதறிஞர் இராஜாஜி இராமாயண பாரதக்கதைகளின் சுருக்கத்தினைச் சுவையாக எழுதியுள்ளார்.

(சுருக்கு- தொ பெ சுருக்கினான், சுருக்க, சுருக்கி- வி. சொ)

சுருங்கை- நிலக்கீழ்வழி

(பெ) சுருங்கையினூடாகப் பாண்டியனின் அரண்மனையை வந்தடைந்த புருடோத்தமனின் கழுத்தில் மனோன்மணி மாலையிட்டாள்.

சுருட்டு- புகையிலை முதலியவற்றைப் புகைப்பதற்கெனச் சுருட்டிய பொருள்

பெ) சுருட்டுப் புகைத்துப் புகைத்து வேல்மாறனின் உதடுகள் கறுத்துவிட்டன.

,- சுருளச் செய்

வி- காலையிலே துயில் நீங்கி எழுந்த பொன்மலர் பாயைச் சுருட்டி வைத்தாள்.

சுருட்டல்- [தொ.பெ.] சுருட்டினான், சுருட்டிய, சுருட்டி- வி.செ]

சுருள்- நெரிவு (வளைவு)

[பெ] செந்தாமரையின் கூந்தல் சுருள் சுருளாய் அமைந்து அவளுக்கு அழகை அளித்தன.

சுரும்பர்- வண்டு

(பெ) சுரும்பர் மலர்களின் தேனுண்டு களித்தது.

சுரை- கறிக்குப் பயன்படும் காயினை அளிக்கும் ஒரு கொடிவகை.

[பெ] 'சுரை விதைக்க விரை முளைக்காது' என்பது ஒரு பழமொழி.

சூரல்- பிரம்பு

பெ] ஆற்றங்கரையிலே சூரல்கள் அடர்த்தியாய் வளர்ந்திருந்தன.

சூரல்- (வ. சொ). ஓர் அரக்கன்

[பெ] முருகப் பெருமான் சூரனின் அகந்தையை ஒடுக்கி அவன் சேவலும் மயிலுமான நிலையில் தமது கொடியாகவும் ஊர்தியாகவும் ஏற்றருளினார்;

,, வீரன்

படிப்பிலே சேரலாதன் திறமை காட்டாவிடினும் தனது உடல், உள வலிமைகளால் எவரையும் வெல்லும் சூரனாய் விளங்கினான்.

செருக்கு- (வ. சொ ) அகந்தை

[பெ] போராளிகளின் அஞ்சாமையும் பின்வாங்காமையும், போர்த்திறனும் பகைவரின் செருக்கினை ஒடுக்கின

செருமுதல்- சளி முதலியன (கோழை) அடைக்கையில் தொண்டையிலிருந்து எழுப்பப்படும் ஒலி

சளி மிகுதியினாலே வெண்ணிலா, பேசும்பொழுது அடிக்கடி செருமித் தொண்டையிலெழும் ஒலித் தடையினைப் போக்குவாள்.

சேரன்- முடியுடை மூவேந்தரில் ஒருவன்

(பெ) சேரனின் அடையாள மாலை ஆத்திப் பூவாலானது.
வி ''சேரமாட்டேன் (சேரேன்)
" - சேரிடமறிந்தே நான் சேருவதல்லாது கணவருடன் சேரன்.

சொரூபம் வடிவம்

[பெ- சிவனுக்குச் சொரூபம், தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன.

சோரம் [வ. சொ.] களவு, ஒழுக்கந்தவறல்

பெ சோரம் போனவள் என்று அந்தப் பெண்ணைப் பலரும் பழித்தனர்.

சோரன்- (வ.சொ) கள்வன்

சோரன் உறங்கி விழும் நள்ளிரவிலே, என்று பாடினார் பாரதியார்,

சோரி- (வ.சொ) குருதி (செந்நீர்)

பெ எறிகணையாலே தாக்குண்டவர்கள் சோரி வெள்ளத்திற் கிடந்தனர்.

சௌகரியம்- (வ. சொ.) வசதிவாய்ப்பு

பெ தொடர் வண்டியிற் (புகைவண்டியிற்) செல்வோர் மூலையிருக்கையே சௌகரியமானது என்று அதனைப் பெறப் போட்டியிடுவர்.

சௌரியம்- (வ. சொ.) வீரம்

[பெ) சௌரியம் மிக்க இளைஞரே ஒரு நாட்டின் இறைமையைக் கட்டிக் காக்க வல்லவர்

தாகன்- பொருத்திவைப்பவன் (திருமணம், வணிகம்)
[பெ] தரகனாலே பொருத்திவைக்கப்படும் திருமணங்கள் வெற்றி பெறுவதும் உண்டு.

தரங்கம்- (வ. சொ) நீர்த்திரை
[பெ.) கடலிலே எழுந்த தரங்கம் கதிரவனின் ஒளியிலே வெள்ளி பாளம் போலக் காட்சி தந்தது.

தரணி- (வ.சொ) பூமி (தாரணி எனவும்படும்)
[பெ] தரணியில் இன்று அமைதியின்மை எங்கும் நிலவக் காண்கின்றோம்.

தரம்- (வ. சொ.) தகுதி
(பெ) க. பொ த [உ. த] தேர்வில் மிகக்கூடிய புள்ளி பெறும் தேர்வு நாடிகளே பல்கலைக்கழகக் கல்விக்கான தரத்தை எய்தியவர் என்று கொள்ளப்படுவர். (தராதரம் (தர+ அதர) தகுதியும் தகுதியின்மையும்]

தரவு- (தருகை) அளிப்பு
[பெ] அறிவியலின் தரவுகள் மிகுந்த ஆய்வின் பின்னரே ஏற்கப்படுகின்றன.

தராசு- (வ. சொ.) நிறுக்கும் கருவி (துலாக்கோல்)
[பெ.] முறைவழங்குவோர் தராசுபோல நடுவுநிலை தவறாது வழக்குகளை ஆராய்ந்தே முறை வழங்கல் வேண்டும்.

தரிசனம்- (வ.சொ) தெய்வக்காட்சி
[பெ] தேரிலே ஆறுமுகசுவாமி திருவுலாவுக்கு எழுந்த ருளுவதைத் தரிசனம் செய்ய அடியார்கள் திரண்டார்கள்.

தரித்திரம்- (வ. சொ.) வறுமை
[பெ] பொருளாதாரத் தடையினாலே தமிழீழத்திலே தரித்திரம் மிகுதியாயுள்ளது.

தருக்கம்- (வ. சொ) அளவையியல்(விவாதிக்கும் முறைமை பற்றிய இயல்)
(பெ) தருக்கநெறி கடவாது சொற்போர் நிகழ்த்துவது இன்றைய பட்டி மண்டபங்கள், வழக்காடு மன்றங்களிலே அருகிவருகிறது.

தருணம்- (வ. சொ) அமயம்

[பெ] நல்ல தருணம் வரும் என்ற நம்பிக்கையிற் செயலின்றிச் சோம்பியிருப்பதிலும் அத்தருணத்தை ஆக்கிக் கொண்டு முயல்வதால் வெற்றி கிடைக்கும் என்பதுதிண்ணம்.

தருதல்- தருகை

(தொ.பெ.) ஓர் இனம் தனது உரிமைகளைப் பிறர் தருதல் மூலம் பெறலாம் என்று காத்திராது அதனைப் பெற அறவழியிலே போராடுதல் வேண்டும்.

தருமம்- (வ. சொ.) அறம்

[பெ] சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெரும்பான்மையினர் அடக்கி ஒடுக்கமுயலாது அவற்றை வழங்க முற்படலே சனநாயக தருமம்.

தாரகை- (வ. சொ.) விண்மீன், உடு

[பெ] தாரகை நடுபவண் தண்மதிபோலத் திருவள்ளுவர் தமிழ் புலவரிடையே இன்றும் ஒளிர்கின்றார்.

தாரம்- (வ. சொ) மனைவி

[பெ] )தாரமும் குருவும் தலைவிதிப்படி) என்றிருந்த காலம்மலையேறிவிட்டது.

தாரா- (வ. சொ) நீர்வாழ் பறவையினம்

பெ. வ. சொ.) குள்ளமானவரைத் தாரா (கட்டைத்தாரா) என்று பழிப்பது தகாது.

தாரை- (வ.சொ) நீரொழுக்கு

[பெ] தந்தையை இழந்த மக்களின் கண்களிலே நீர் தாரை தாரையாய் ஓடியது.

[ஒப்பு, ஒழுங்கு, அபிடேகம் [முழுக்கு], கண்மணி, சீலை] மலை முதலாகப் பலபொருள்கள் உள. க த. அ]

திரட்சி- திணிவு

[பெ] திரட்சி கூடக்கூட பொருளின் வலு மிகுதியாகும்.

திரட்டு- தொகுதி

[பெ] 'சங்க இலக்கியத் திரட்டு' என்ற நூல் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியாயிற்று.

திரள்- கூட்டம்

*[பெ] மாவீரர் நாளின் இறுதி நாளன்று மக்கள் திரள் திரளாகப் போராளிகளின் அணிவகுப்பைக் காணச் சென்றனர்*

திரவம்- (வ. சொ) நீரம் (நீர்த்தன்மையானது)

*[பெ] பொருள்களைத் திரவப்பொருள், திடப்பொருள் என்று இருவகையாகப் பிரித்து ஆராய்வது வழக்கம்.*

திரவியம்- (வ.சொ) பொருள்

*[பெ.வ. சொ] முத்து, பவளம் முதலியன கடல்படு திராவியங்கள் எனப்படும்*

திராவகம்- (வ.சொ) நீரமப்பொருள்

*(பெ.வ சொ ) திராவக வடிவிலுள்ள மருந்துகளிலும் குளிகைவடிவில் அமைந்த மருந்துகளே இன்று மிகுதியாகக் கையாளப் படுகின்றன.*

திராவிடர்- (வ.சொ) தமிழர் உள்ளிட்ட ஓர் இனத்தினர்

*(பெ.வ.சொ.) திராவிடரின் நாகரிகமே சிந்துவெளி நாகரிகம் என்பது வரலாற்றாய்வளார் பலரின் முடிபாகும்.*
*திராவிடம்-திராவிடரின் மொழிக்கூட்டத்திற்கும் அவர்கள் வாழிடத்திற்கும் பொதுப்பெயர்)*

திரி - விளக்கிற்கு இடப்படும் கொளுத்தும் பொருள்

*(பெ) 'விளக்கிலே திரி நன்கு சமைந்தது பேவுவீர் இங்குத் தீ கொண்டு தோழரே' என்பது பெரும்புலவர் தாகூரின் பாடலிலிருந்து பாரதியார் மொழிபெயர்த்ததோர் அடி.*

,, - (வ.சொ) மூன்று

*(பெ) மனம், சொல், உடல் (மனம், வாக்கு, காயம்) என்பன திரிகரணங்கள்.*

,, - (நீ) முறுக்கு

*(வி) தென்னந்தும்பு கொண்டு கயிறு திரித்து விற்பனை செய்வது ஒரு குடிசைக் கைத்தொழில் யாழ்ப்பாணத்திற் சில இடங்களிற் நடைபெறுகின்றது.*

,, - அலைந்து திரி

*(வி) இளைஞர் சிலர் தொழில் எதுவுமின்றித் தெருக்களிலே திரிகின்றனர்*

**திரிகை-** சூலங்களை (தானியங்களை) த் திரிக்கும் பொறி

(பெ) மாவரைக்கும் ஆலைகள் தோன்றிய பின்னர் திரிகைகளைப் பயன் செய்யும் வழக்கம் அருகிவிட்டது.
(திரித்தான், திரித்த, திரித்து வி.) [திரித்தல்-தொ.பெ]

**திரிபு-** வேறுபாடு

குரங்கினம் என்ற சொற்றொடர் திரிபு பெற்றுக் குரக்கினம் எனவும் வழங்கும்.

**திரு-** திருமகள் (இலக்குமி)

[பெ] ''மலரின் மேவு திருவே, உன்மேல் மையல்கொண்டு நின்றேன்'' என்று பாரதியார் பாடியுள்ளார்.

,, - செல்வம்

பெ) திருவுடையவர் கல்வியற்றவராயினும் உலகம் அவரைத் தலைமேற்கொண்டு போற்றுவது அறியாமையாகும்.

,, - திருவாளர் என்ற சொல்லின் குறுக்கம்

[இ.சொ] திரு. க. வளவன் எமது முத்தமிழ் விழாவிற்கு முதன்மை விருந்தினராய் வருகை புரிந்தார்.

**திருகு-** (நீ) முறுக்கு

(வி) சீற்றங்கொண்ட அறிவழகன் தன் பகைவனின் கழுத்தைத் திருக முற்பட்டான்

**திருட்டு-** களவு

(தொபெ] உலகெங்கும் திருட்டு இன்று மலிந்து கிடக்கிறது.

**திருத்தம்-** ஒழுங்காக்கல்

(தொ. பெ.) இன்று ஆசிரியர்கள் பலரும் மாணவரின் பயிற்சிகளைத் திருத்தஞ் செய்வதில்லை.

திருத்தல்- (தொ. பெ.) திருத்தினான், திருத்திய
திருத்தி- (வி சொ.)

**திருந்தல்-** பிழை நீங்கல்.

(தொ.பெ.) தன் தீய செயல்களை விட்டுத் திருந்தல் நல்லவருக்கு அழகாகும்.

**திருப்தி** (வ.சொ) மனநிறைவு

(பெ.) ''கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடை'' என்று சேக்கிழான் நண்பனுக்கு அறுவுறுத்தினான்

**திருப்பம்- திரும்பும் இடம், திரும்பும் கட்டம்.**

பெ) 1. சாலைத் திருப்பத்திலே பேருந்தும் சரக்குந்தும் ஒன்று டன் ஒன்று மோதிக்கொண்டன.

2. புதிய அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபொழுது பொருளாதாரத்துறையிலே திருப்பம் ஏற்படும் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

**திருவாட்டி- ஸ்ரீமதி (வ. சொ.)**

(பெ) திருவாட்டி பொன்னம்மை வெண்ணிலவன் எமது கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராய் வருகை புரிந்தார்.

**திருவாளர்- ஸ்ரீமான் (வ. சொ.)**

(பெ) திருவாளர் பொன்வண்ணன் ''அரசியல் ஒரு சாய்கடை'' என்று கூறியது பலரின் முகங்களைச் சுழிக்க வைத்தது.

**தீரம்- (வ. சொ) மனத்துணிவு**

(பெ.) போராளிகளின் தீரத்தைக் கண்டு பகைவர்திகைத்தனர்.

(தீரன்- வீரன்)

**தீரம்- (வ. சொ) ஆற்றங்கரை**

பெ.) மாணிக்க கங்கை நதி தீரத்திலே அடியார்கள் தீர்த்த மாடக் குழுமி நின்றனர்.

**துரகம்- (தொ. பெ) குதிரை**

(பெ.) நால்வகைப் படைகளுள்ளே துரகப்படையும் அடங்கும்.

**துரிதம்- (வ. சொ) விரைவு**

விடுதலைப் போராளிகள் துரிதமாக முன்னேறினர்.

**துரும்பு- சிறுதுகள்**

(பெ) காதல் வேண்டித் தன்னை இரந்த இராவணனைச் சீதை ''துரும்பே'' என்று ஏசினாள்.

(கடதாசி விளையாட்டில் (Cards Play) வெற்றிக்குரிய சீட்டைத் (Card Trump) துரும்பு என்பர்.)

துருவம்- முடிவிடம்

(பெ. வ. சொ.) வட, தென் துருவங்களிலே குளிர் தாங்க முடி யாத அளவு காணப்படுவதால் அங்கு மக்கட்செறிவு மிகக் குறைவாகவே உள்ளது.

''பெ- எதிர்நிலை

ஒரு காலத்திலே உயிரொன்றி வாழ்ந்த கணவனும் மனைவி யும் இன்று இருதுருவங்களாய் வேறுபட்டு விட்டனர்.

துரோகம் - (வ.சொ) இரண்டகம்

(பெ) இனப்பற்றோ, மொழிப்பற்றோ, நாட்டுப் பற்றோ இன் றித் துரோகச் செயலில் ஈடுபடுவோர் மன்னிப்பிற்கு உரியவரல்லர்.

தூரம்- (வ.சொ) தொலைவு

(பெ.) தமிழ் இளைஞர் பலர் தமது தாயகத்தை நீங் கிச் சென்று தூரநாடுகளிலே பல அல்லல்களுக்கும் உள் ளாகின்றனர்.

தூரிகை- (வ.சொ) ஓவியம் வரையுங் கோல் (கருவி)

(பெ.) ஓவியர் 'ரமணி' யின் தூரிகை ஓவியத்தில் விளைக் கும் புதுமைகள் சொல்லில் அடங்கா.

தெரிவை- (வ.சொ) 25 முதல் 31 அகவைக்குட்பட்ட பெண்

(பெ) ஆண்களுக்கு நிகராக எந்தத் தொழிலையும் செய்யும் திறமைபடைத்த தெரிவையர் பலர் உள்ளனர்.

தெருட்டல்- தெளிவுறுத்தல்

(தொ. பெ.) தீய வழியிற் செல்வோரை அறிவுரை கூறித் தெரு ட்டல் நல்ல நட்புக்கு அறிகுறி.

(தெருட்டுதல்- தொ. பெ., தெருட்டினான், தெருட்டிய தெருட்டி- (வி. சொ.)

தேரை- தவளையில் ஒருவகை

(பெ) தேரையின் நிறம் வெள்ளை.

தைரியம்- (வ.சொ) உடல், மனவலி

(பெ) மனத்தைரியமில்லாத கோழைகளால் எச்செயலையும் திறம்படச் செய்தல் இயலாது.

நரகம்- (வ.சொ) பாவிகள் (இறந்தபின்) செல்லும் இடம் (தொண்மச்செய்தி)

(பெ) இப்பிறவியிலே தீமைகள் செய்வோர் இறந்த பின் நரகத்தைச் சென்றடைந்து தாங்கொணாத் துன்பத்துக்கு ஆளாவர் என்பது சமய நம்பிக்கை.

நரன்- (வ.சொ) ஆண்மகன்

(பெ) நரன் என்ற சொல்லுக்குப் பெண்பால் நாரி.

நரி- ஒருவகை விலங்கு

(பெ) போர்க்களத்திலே இறந்துபட்டோரைச் சுற்றி நின்று நரிகள் ஊளையிட்டன.

நரை- வெளுப்பு (தலைமயிர்)

(பெ) முதுமைக் காலத்தில் நரை, திரை (உடற்சுருக்கம்) ஏற்படுவதைத் தடுத்தல் இயலாது.

நாரி இடை (இடுப்பு)

(பெ)

நிரப்பல்- நிறையச் செய்தல்

தொ. (பெ) தொட்டியில் நீர் நிரப்பல் நாள்தோறும் அவன் கடமையாயிருந்தது.

நிரம்பல்- நிறைவுறுதல்

(பெ) நிரம்பல் கூடக் கூடக் கேள்வி (Demand) குறைந்து குறைந்து செல்லும் என்பது பொருளியதாரக் கோட்பாடு.

,,-நிறைதல்

பெ) கல்வியில் நிரம்புதல் என்பது எளிதான ஒன்றன்று.
(நிரம்பு- ஏ. வி., நிரம்பியது, நிரம்பிய, நிரம்பி- வி.)

நிருணயம்- (வ.சொ) உறுதிப்படுத்தல்

(பெ) நாட்டு மக்கள் போலித்தலைவர்களின் எதிர்காலத்தினை நிருணயிக்கும் வல்லமை படைத்தவர்கள்.

நிருத்தம் - (வ. சொ) பாட்டில்லாக் கூத்து நிருத்தியம் எனவும் வழங்கும்

(பெ) நடன வெளிப்பாட்டில் நிருத்தமும் இடம்பெறும்.

நிரூபணம் (வ.சொ) நிறுவுகை

(பெ "உனது கூற்றை உன்னால் நிரூபணஞ்செய்ய முடியுமா?" என்று முறையாளர் (நீதிபதி) சான்றாளரை (சாட்சியை) வினாவினார்.

(நிரூபித்தல்- தொ. பெ., நிரூபித்தான், நிரூபித்த, நிரூபித்து)

நுரை- குமிழி

[பெ] சவர்க்காரத்தை நீரிற் கரைத்தபோது நுரை எழுந்தது.

நெருக்கம்- செறிவு

[பெ] பேருந்திலே நெருக்கம் மிகுதியானதாற் குழந்தைகள் அழத் தொடங்கினார்கள்.

நெருப்பு- தீ

[பெ] தமக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்குப் பழிவாங்க எண்ணிய படைவீரர் குடிமக்களின் வீடுகளுக்கு நெருப்பிட்டனர்.

நேரடி- நேருக்குநேர்

[பெ] படையினருக்கும் போராளிகளுக்குமிடையே நேரடி மோதல் நிகழ்ந்தது.

நேரம்- (குறித்த) காலம்

[பெ] தலைவரிடமிருந்து கட்டளை வரும் நேரத்துக்குப் போராளிகள் காத்திருந்தனர்.

நொருக்கு- துகள்களாக்கு

( தொ பெ ) நொருக்கினான், நொருக்கிய நொருக்கி (வி. செ. வி )

[எ.வி.] வேட்பாளரின் மீது சீற்றங்கொண்ட பொதுமக்கள் அவரின் ஊர்தியை அடித்து நொருக்கினர் (நொருக்குதல் தொ. பெ., நொருக்கினான், நொருக்கிய, நொருக்கு-வி]

பரதம்- தென்னிந்திய நடன வகை

(பெ) பரதபாவை, பாவம், ராகம், தாளம் என்ற மூன்றுறுப்புக்கள் கொண்டது.

பரத்தை- பொதுமகள்

(பெ) தலைவன் பரத்தையை நாடும் ஒழுக்கம் அகத்திணையில் மருதம் என்பதனுள் அடக்கப்பட்டது.

பரப்பு- நீளம், அகலம் கொண்ட ஒன்றைப் பெருக்க வரும் முழுமை
(பெ) பத்துப் பரப்புக் காணி அவனுக்கு உடைமையாகும்.

,, (ஏ. வி.) நீ பரவச்செய்
தமிழர் இலங்கையில் வந்தேறு குடிகள் என்ற பொய் யினைப் பலகாலமாகப் பேரினவெறியர் பரப்பிவருகின்ற னர்.
(பரம்பல்- தொ. பெ. பரப்பினான், பரப்பிய, பரப்பி-வி.)

பரம்பல்- பரவுதல்
(பெ) நீர்வளம் மிகுதியான நிலப்பகுதிகளிலேயே குடிப்பரம் பல் பெருமளவு இடம் பெறும்.

பரம்- (வ. சொ.) மேலானது
(பெ) மேலான பொருள் என்பதால் இறைவனைப் பரம் பொ ருள் என்பர்.

,, - (வ.சொ) இம்மை
(பெ) இக பர நன்மைகளைக் குறித்து இறைவனை அடி யார் வழிபடுவர்.
(இகம்- இவ்வுலகம் பரம்-மறுவுலகம்)

பரம்பரை- (வ.சொ) தலைமுறை
(பெ) தமிழர் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்து வருவது தமிழீழத்திலாகும்.

பரவசம்- (வ. சொ.) மிகுதியான மகிழ்ச்சி
(பெ) நாடு தன்னாட்சி பெற்றதால் மக்கள் பரவசமடைந்தனர்.

பரவுதல்- வழிபடல்
(பெ) இறைவனைப் பரவுதலுக்காக மக்கள் கோயிலிற் கூடினர்.
(பராவுதல் என்பதும் இதே பொருள் தரும் தொழிற்பெயர் பர வினான், பரவிய பரவி, பராவினான், பராவிய, பாராவி-வி)

பரஸ்பரம்- (வ. சொ.) ஒன்றுக்கு ஒன்று, ஒருவருக்கு ஒருவர்.
(பெ) துணைவனும் துணைவியும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து நடந்தால் அவர்களின் வாழ்விலே அமைதி நிலவும் என்பது உறுதி.

PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI



பராக்கு - (வ. சொ.) கவனமின்மை

(பெ) படிப்பிக்கும் பொழுது பாடத்தை விடுத்துப் பராக்குப் பார்த்த மாணாக்கரை ஆசிரியர் கண்டித்தார்.

,, - (வ. சொ) கட்டியம்

(பெ) "மாமன்னர் வருகிறார், பராக்கு" என்று கட்டியகாரன் கூறினான்.

பரார்த்தம்- (வ.சொ) பிறர்பொருட்டாகச் செய்யப்படுவது.

(பெ) பரார்த்தமாகச் செய்யப்படும் பணிகள் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை தருவனவாகும.

பரிகலம்- (வ.சொ) படைக்கலம்

(பெ) படைவீரர் பரிகலங்களோடு களஞ்சென்று போர் புரிந்தார்கள

(பரிகலங்கள்' என்ற சொல் பேச்சுவழக்கில் எண்ணிக்கையிற் கூடிய மக்களையும், உறவினர்களையும் குறிக்க வழங்குவதுண்டு )

எ+டு :- அவனுடைய பரிகலங்களால் ஏற்படும் தொல்லையைத் தாங்க முடியவில்லை.

பரிகாரம்- (வ.சொ) (நோய், தீமை) நீக்குகை

பெ) எமது நாட்டில் நிலவும் தீமைகளுக்குப் பரிகாரங்காண இளைஞர்கள் முனைந்து செயற்பட்டு வருகின்றனர்.

பரிசம்- (வ.சொ) தொடுகை

பெ) ஐம்புலன்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன முறையே இரசம், ரூபம், பரிசம், சப்தம், கந்தம் என்ற பெயர்களால் வடமொழியில் வழங்கும்.

பரிசில்- கொடை

(பெ) கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினரின் மனைவியார் பரிசில் வழங்கினார்.

(பரிசில, பரிசு எனவும் வழங்கும்)

பரிசு- தன்மை

ஒருவரோடு நட்புக் கொள்ளமுன்பு அவரின் பரிசு இன்னது என்று ஆராய்ந்தறிவது இன்றியமையாதது.

பரிச்சயம்- (வ.சொ) அறிமுகம்.

(பெ) எனக்கு அப்பெரியார் நன்கு பரிச்சயமானவர்.

**பரிச்சயம்- பழக்கம்**

*(பெ) என் நண்பனுக்கு இசையில் நல்ல பரிச்சயம் உண்டு.*

**பரிசை- (வ.சொ) கேடகம்**

*(பெ) முற்காலத்தில் வாட்போர் செய்கையில் வீரர்கள் தமக்கு ஊறு ஏற்படாது மறுகையிலே கேடகத்தைத் தரித்திருப்பார்கள்.*

**பரிதானம்- கைலூட்டு (இலஞ்சம்)**

*(பெ) கடந்த காலத்திலே பரிதானம் பெற்ற ஆட்சியாளர் பலர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு அக்குற்றங்களை ஆராய்வதற்கென்று ஆணைக்குழுக்கள் இன்றுள்ள ஆட்சியாளர்களால் அமைக்கப்பட்டுள்ளன.*

**பரிமாணம்- (வ.சொ) அளவு**

*(பெ) ஒவ்வொரு பொழுதும் உண்ணவேண்டிய மருந்தின் பரிமாணம் பற்றி மருத்துவர் நோயாளிக்கு எடுத்துரைத்தார்.*

**பரிணாமம்- (வ.சொ) கூர்தல், உள்ளது சிறத்தல்**

*(பெ) டார்வின் என்ற அறிவியலாளர் குரங்கிலிருந்து பரிணாமம் பெற்றவனே மனிதன் என்ற கோட்பாட்டினை முன்வைத்தார்.*

**பரிபாலனம்- (வ.சொ) ஆட்சி**

*(பெ) சைவபரிபாலன சபை 1889 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது.*

**பரிவாரம்- (வ.சொ) சூழ்ந்திருப்போர்**

*(பெ) அரசன் சபைக்கு வருகையில் அவனுடைய பரிவாரங்கள் அவனைத் தொடர்ந்தன.*

**பரிவு- இரக்கம்**

*ஏழைகள் மீது பரிவுகாட்டி அவர்களின் நல்வாழ்விற்கு உதவுவது சாலச்சிறந்தது.*

*(பரிதல் தொ. பெ, பரிந்தான், பரிந்த, பரிந்து -வி.சொ)*

**பரீட்சை- (வ.சொ) தேர்வு**

*(பெ) கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் இறைவாழி நான்குபாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சிபெற்றான்.*

பரு கண்ணுக்குப் புலனாவது
(பெ) கண்ணுக்குப் புலனாவனவற்றைப் பருப்பொருள் என்றும் புலனாகாதவற்றை நுண்பொருளென்றும் வகைப்படுத் தலாம்.

,, -வறுமை
(பெ) "இல்லறத்தான் தன்னிடம் வரும் விருந்தினரைப் பேணி னால் அவன் வாழ்க்கை பருவந்து பாழ்படமாட்டாது" என்பது திருவள்ளுவரின் உறுதியான முடிபு.

பருக்கை - சோற்றவிழ்
(பெ) ஏதுமிலார் (அகதிகள்) சோற்றுப் பருக்கைகூடக் கிடைக் காது வருந்தினர்.

பருப்பும் - அளவாற் பெருமை பெற்றது
(பெ) பருப்பமான மரங்கள் பயன்தராது போகவும் கூடும். (பருமை - பண்புப்பெயர், பருத்தது, பருத்த, பருத்து வி. சொ)

பருவரல் - துன்பம் (வறுமையையும் குறிக்கும்)
(பெ) பருவரல் ஏற்படுங்காலத்தில் மனஞ்சோராது அதனைப் போக்க முயன்றால் வெற்றி கிட்டுவது உறுதி.

பருவம் - இருது (பெரும்பொழுது என்பது தமிழ்)
(பெ) கூதிர், முன்பனி, பின்பனி, வாடை (கார், முது வேனில், இளவேனில் என்று தமிழர் பருவத்தினை ஆறாய்ப் பிரித்தனர்

,, - (வ.சொ) குறித்தகாலம், பக்குவம்.
(பெ) இளமைப் பருவம் கல்வியிலே வளர்வதற்கு உகந்தது

பருவதம்- மலை
உலகிலுள்ள பருவதங்களிலே இமாசலம் மிகவும் உயர்ந்தது

பாரகம்- உலகர், பூமி (வ சொ) பார்
(பெ) பாரகத்திலுள்ள பல நாடுகளும் குழப்பங்களுக்குள்ளாகி மக்கள் பெரும அவலத்துக்காளாகி வாடுகின்றனர்

பாரணை- நோன்பை முடித்து- அடியாருக்கு உணவு அளித்துத் தாமும் உண்ணல்.
(பெ) நல்லூர்க் கந்தசுவாமி கோயிற்றிருவிழாவின் இருபத் தைந்து நாள்களும் நோன்நோற்றோர் இருபத்தாறா வது நாளன்று பாரணை செய்வர்.

**பாரம் - பொறை (சுமை)**

(பெ) "பூபாரம் (பூமியின்பாரம்) தீர்க்கப் புரிந்தாய் புயல் வண்ணா" என்று சகாதேவன் கண்ணபிரானைப் போற்றினான்

**பாரம்பரியம்- தலைமுறை**

(பெ) எமது கலைப்பாரம்பரியத்தில் நாட்டார் கலைக ளுக்கு முதன்மையான ஓர் இடம் உண்டு.

**பாராயணம்- (வ.சொ) நியமமாகப்படித்தல்**

(பெ) சைவப் பெரியார் ஆட்லழகர், திருமுறைகளை நாள் தோறும் பாராயணம் செய்வதை வழக்கமாகக் கொண் டவர்

**பாரிசம்- (வ.சொ) திசை, பக்கம்**

(பெ) வடபாரிசத்திலே காந்தத்தின் இழுப்பாற்றல் உண் டென்பர்.

**பாரித்தல்- (வ.சொ) காத்தல்**

(பெ) நாட்டைப் பாரித்தல் என்ற பெயரால் மக்க ளின் வரிக்காசை யெல்லாம் கொள்ளை கொள்வோர் இன்று பெருமளவுள்ளனர்.

பாரிப்பு(தொ-பெ,பாரித்தான்,பாரித்த,பாரித்து-வி சொ) (சுமையாதல், சுமத்துதல், பரவுதல், தோன்றுதல், வளர்த் தல், அணிதல், வளைத்தல், பருத்தல், மிகுதியாதல், ஆயத்தப்படுத்தல் தோன்றச் செய்தல் என்ற பொருள் களும் **'பாரித்தல்'** என்ற சொல்லுக்கு உள்ளன- க. த.அ)

**பாரியை- (வ.சொ) மனைவி**

(பெ) திரௌபதியைப் பாண்டவர் தம்முடையதாயின் கட்டளையை ஏற்றுப் பாரியையாக்கிக் கொண்டனர்.

**பிரகடனம்- (வ.சொ) வெளிப்படுத்துகை**

(பெ) சனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகளோடு போரைத் தொடரப்போவதாய்ப் பிரகடனஞ் செய்தார்.

**பிரகாசம்- (வ.சொ) ஒளி**

(பெ) மின்விளக்குகளின் பிரகாசம் கண்களைக் கூசவைத்தது.

**பிரக்ஞை- (வ.சொ) தன்னுணர்வு**

(பெ) எழுத்தாளர் சமூகப் பிரக்ஞையுடன் எழுதுவனவே மக்களுக்குப் பயன்பட்டு நிலைத்து நிற்கும்.

**பிரகாரம்- (வ.சொ) தன்மை**

(பெ) இந்த ஆசிரியர் கற்பித்த பிரகாரம் மாணாக்கர் கணக்குகளைச் செய்தனர்

**பிரசங்கம்- (வ.சொ) சொற்பொழிவு**

(பெ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரசங்க மரபினை யாழ்ப்பாணத்திலே தொடக்கினார்.

**பிரசித்தி- (வ.சொ) பலராலும் அறியப்படுகை**

(பெ.) குற்றாலீஸ்வரன் என்ற தமிழகச் சிறுவன் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து உலகப் பிரசித்தி பெற்றான்.

(பெ) (பிரசித்தம், பிரபலம் என்ற வடசொற்களும் இப் பொருளையே தருவன)

**பிரச்சினை- (வ.சொ) சிக்கல்**

(பெ) பொருளாதாரத் தடையை நீக்கியதன் பின்னரே அரசியற் பிரச்சினையைத் தீர்க்க முற்படுவது, அரசின் முதன்மையான கடமையாகும்.

**பிரதமர்- (வ.சொ) நாட்டின் முதலமைச்சர்**

(பெ) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவரின் மகளான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் இலங்கைப் பிரதமராக ஆக்கப்பட்டுள்ளார்.

**பிரதட்சணம்- (வ.சொ) (கோயிலைச்) சுற்றிவரல்**

(பெ) அடியார்கள் கூப்பிய கைகளுடன் கோயில் வீதியைப் பிரதட்சணம் செய்தனர்

**பிரதானம்- (வ.சொ) முதன்மை**

(பெ) பொருளாதாரத்திலும் பிரதானமானது நாட்டு விடுதலையே.

**பிரசவம்- (வ.சொ) கருவுறல்**

(பெ) மலர்விழிக்குப் பிரசவ நோ ஏற்பட்டது.

**பிரசாதம்- (வ.சொ) அருச்சனை, பூசை முடிவில் அருச்சகர் வழங்கும் திருநீறு முதலியன**

(பெ) பூசைமுடிவில் அருச்சகர் வழங்கிய திருநீறு பிரசாதத்தை நான் பத்தியோடு பெற்றுக்கொண்டேன்.

பிரசாரம்- (வ.சொ) கொள்கைப் பரப்புகை
(பெ) தேர்தல் நெருங்கப் நெருங்க பிரசாதம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

பிரதிக்கினை- பிரதிக்ஞை (வ.சொ) -(சூள்)
(பெ) நாட்டு விடுதலைக்காகத் தமது உயிரையும் இக்ழ கத் தயங்கப் போவதில்லை என்று தமிழிளைஞர் பலர் பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

பிரதி- (வ.சொ.) படி (நகல்)
(பெ.) "இந்தக் கடிதத்திற்கு நான்கு பிரதிகள் எடுக்க வேண்டும்" என்று உயரலுவலர் எழுதுவினைஞருக்கு (எழுத்தருக்கு) க் கட்டளையிட்டார்.

பிரதேசம்- (வ.சொ.) பெருநிலப்பரப்பு.
(பெ.) உலகின் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும்தமிழர் தமது அடிப்படைப் பண்பாடுகளைக் கைவிடல்கூடாது.

பிரத்தியட்சம்- (வ.சொ.) காண்டல் (கண்ணுக்குமுன் தோற்றல்).
(பெ.) போரினால் இழப்புக்களும் அழிவுகளும் இடம்பெறு வதைப் பிரத்தியட்சமாகக் கண்டும் அதை நிறுத்த விரும்பாமைக்கான அடிப்படை நோக்கம் படைத்தலைவர் சிலரின் தந்நலமே.

பிரத்தியேகம்- (வ.சொ.) தனிப்பட்டது.
(பெ.) அண்மைக் காலம் வரை பேருந்துகளிலே பெண்களுக்குப் பிரத்தியேக இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

பிரபஞ்சம்- (வ. சொ.) பூமி முதலிய பல கோள்களை உள் ளடக்கியது.
(பெ) உலகம் முதலாம் கிரகங்களையும், சூரியன் முதலாம் நட்சத்திரங்களையும் உள்ளடக்கியதைப் பிரபஞ்சம் என்பர்.

பிரபாவம்- (வ.சொ) மிகுபுகழ்
(பெ.) எமது போராட்டத்தின் பிரபாவம் இன்று உலகம் எங்கும் வியப்புடன் பேசும் ஒன்றாகிவிட்டது.

பிரபு- (வ.சொ.) தலைவன், செல்வன்.
(பெ.) சேர்.பொன்னம்பலம் இராமநாதன், அவருக்கு அணுக்கரா யிருந்தவர்களால், பிரபு என அழைக்கப்பட்டார்.

**பிரபை- (வ. சொ.) ஒளி (கதிரொளி)**

(பெ.) கதிரோனின் பிரபை கண்ணைப் பறித்தது.

**பிரமசரியம்- (வ.சொ.) திருமணமாகாநிலை**

பெ.) பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன நால்வகை ஆசிரமங்கள்- என்று இந்துக்கள் கொண்டார்கள்

(கிருகஸ்தம் - இல்லறம், வானப்பிரஸ்தம்-மனைவியுடன் காடு சென்று வழிபாடுகளில் ஈடுபடல், சந்நியாசம்- துறவறம்)

**பிரமம்- (வ.சொ) பரம்பொருள்**

(பெ.) பிரமம் குணங் குறிகளுக்கு அப்பாலானது.

**பிரம்பு- மூங்கில் வகையைச் சேர்ந்தது.**

(பெ) பிரம்பைப் பயன்படுத்தி மாணவரை அச்சுறுத்தும் வழக்கம் இன்றும் ஆசிரியர் சிலரிடையே காணப்படுகிறது

**பிரமாணம்- (வ.சொ)அளவை (Logic) நிறுவும்முறை**

(பெ.) பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், என்பன முறையே காட்சி, கருதல், நூல் என்று மூவகைப் பிரமாணங்களாய்க் கொள்ளப்படுகின்றன.

**பிரமாதம் (வ.சொ) பெருமை, மேன்மை**

(பெ) என்னைப்பற்றிப் பிரமாதமாகக் கூற ஒன்றுமில்லை.

**பிரமிப்பு- (வ.சொ) திகைப்பு**

(பெ.) முத்தமிழ் விழாவிற்கு வருகை தந்த மக்கள் திரளைக் கண்டு எனக்குப் பிரமிப்பு உண்டாயிற்று

**பிரயாசை (வ.சொ) பெருமுயற்சி**

(பெ) வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு இளைஞர் மேற்கொள்ளும் பிரயாசை கொஞ்சமன்று

**பிரமை- (வ.சொ) மயக்கம் (மாறுபடக் கருதல்)**

(பெ.) வல்லரசுகள் தமது படைப்பலத்தால் மக்களின் எழுச்சியை அடக்கலாம் என்ற பிரமையிலேயே செயற்பட்டு வருகின்றன.

**பிரயோகம்- (வ.சொ) செயற்படுத்தல்**

(பெ.) வன்செயலைப் பிரயோகிப்பதால் வெற்றிகொண்ட காலம் மலையேறிவிட்டது.

பிரயோசனம்- பயன்பாடு

(பெ.) பிரயோசனமற்ற முறையிற் சிலரின் செயல்கள் அமைந்து விடுகின்றன.

பிரமேயம்- (வ. சொ) நோக்கம்

(பெ) எவ்வித பிரமேயமின்றிப் பொதுமக்களை அழிப்பது அறமாகாது

பிரவாகம் (வ.சொ) [நீர்ப்/] பெருக்கு

(பெ) இந்திய அமைதிப்படை எமது மண்ணிலிருந்து நீக்கிய போது மக்கள் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கினர்.

பிரவேசம் (வ.சொ) நுழைவு

(பெ) பிரவேசச் சீட்டுப் பெற மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர்.

பிரலாபம்- (வ.சொ) புலம்பல்

(பெ.) நடந்து முடிந்தவற்றிற்காய்ப் பிரலாபிப்பதாலே பயன் எதுவும் விளையப்போவதில்லை.

பிரளயம்- (வ.சொ) ஊழிமுடிவு

(பெ.) ஒவ்வொர் ஊழியின் முடிவிலும் பிரளயம் உண்டாகி உலகம் அழிந்து மீண்டும் தோற்றும் என்பது சமயிகளின் நம்பிக்கை.

பிராகாரம்- (வ. சொ) (கோயில்) வீதி

(பெ.) வண்ணை வைத்தீசுவரன் கோயிலுக்கு மூன்று பிராகாரங்கள் உள்ளன.

பிராட்டி- வ.சொ (தெய்வத் தலைவி.

பெ) எங்கள் பிராட்டியாக உமாதேவியாரை நாம் கொண்டிருக்கிறோம்.

பிராணன்- (வ.சொ) மூச்சுக்காற்று, உயிர்

(பெ.) பிராணன் போகும் வரை எமது கடமையை ஒழுங்காகச் செய்வதே வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி.

பிராந்தி- (வ.சொ) மனமயக்கம்

(பெ.) தான் மிகத் தாழ்ந்தவன் என்ற மனப்பிராந்தி, வாழ்வை அழிக்கும் என்பதைப் பலரும் உணர்வதில்லை.

**பிராயச்சித்தம்- (வ.சொ) கழுவாய்**

(பெ.) நன்றி கொன்ற குற்றத்தைப் போக்குவதற்கு எவ்வித பிராயச்சித்தமும் இல்லை.

**பிராரத்தம்- (வ.சொ) முன்வினை**

(பெ) பிராரத்தத்தால் இப்பிறப்பில் நன்மையும் தீமையும் மாறிமாறி ஏற்படுகின்றன என்று கருதி மனந் தளராது நல்லவற்றைச் செய்து வாழ முயல்வதே நன்று

**பிரான்- (வ.சொ) தலைவன்**

(பெ) சிவபிரான் ஆன்மாக்கள் யாவிற்கும் தலைவராவர்.

**பிரிதல்- நீங்கல்**

(பெ) பிரிதற்காலத்தில் தலைவரை நினைந்து தலைவியர் வருந்தும் வகையினைச் சங்கஇலக்கியப் பாலைத்திணைப் பாடல்கள் அவலச் சுவைததும்ப எடுத்துக் காட்டுகின்றன.

(பிரிவு- தொ. பெ. பிரிந்தான், பிரிந்த, பிரிந்து- (வி.சொ)

**பிரீதி- (வ.சொ) விழைவு, விருப்பம்**

(பெ) "என்னிடத்தில் பிரீதியிருக்குமானால் என்னை இவ்வாறு ஏசமாட்டாய்" என்று துணைவன் துணைவிக்குக் கூறினான்.

**பிருட்டம்- (வ.சொ) முதுகின் முடிவில் அமைந்துள்ள உறுப்பு (இடக்கரடக்கல்)**

(பெ.) சீற்றங்கொண்ட தந்தை தம்முடைய மகனின் பிருட்டத்திலே பிரப்பால் அடித்தார்.

**பிருதுவி (வ.சொ) பூமி (பார்)**

(பெ) பிருதிவியில் வாழ்வோர் அது தரும் இயற்கைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

**பிரேதம்- (வ.சொ) (உயிரற்ற) உடல், பூதவுடல்**

(பெ) பெரும்போரின் முடிவில் இறந்த வீரர்களின் பிரேதங்கள் போர்க்களத்திலே குவிந்து கிடந்தன.

**பிரேமை- (வ.சொ) இச்சை, காதல்**

(பெ) சச்சந்தன் விசயை மீது கொண்ட பிரேமை பற்றிச் 'சீவகசிந்தாமணி' விதந்து பேசும்.

பிரேரணை - (வ.சொ) முன்மொழிதல்

(பெ) அவசரகாலத்தை நீட்டிக்கும் பிரேரணை பெரும் பான்மை வாக்குக்களால் நிறைவேறியது.

புரட்சி- (தொ.பெ) நிலைமாற்றம் (புரள் என்ற சொல் லடியாகப் பிறந்தது.)

(பெ) பிரான்சிய அரசியற் புரட்சி உலகவரலாற்றிலே பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டது.

புரளல் (தன் வினை) புரட்டுதல் (பிறவினை) தொ. பெ. புரட்டினான், புரட்டிய, புரட்டி வி. சொ

புரத்தல்- காத்தல்

(பெ) நாட்டைப் புரத்தலையே கடனாகக் கொண்டவர் என்று பீத்தற் பெருமை பேசிக்கொண்டே அதன் அழிவுக்கான செயல்களில் ஈடுபடுவோரை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

[புரப்பு- தொ. பெ.புரந்தான், புரந்த, புரந்து-வி.சொ

புரம்- (வ.சொ) அரண் அமைந்த நகர்

(பெ) அநுரதன் அமைத்ததால் அநுரதபுரம் எனப்பெயர் பெற்ற நகரம் வட மத்திய மாகாணத்தின் தலை. நகரயாயுள்ளது.

(புரி என்பதும் புரத்துக்கு அமைந்த பெயரே)

புரவி- (வ.சொ) குதிரை

பொ) அராபியா சிறந்த புரவிகளுக்குப் பெயர்பெற்றது.

புராணம் (வ.சொ) தொன்மம்

(பெ) புராணம் என்பது பழமையான வரலாறு எனப் பொருள்படும்.

புராதனம்- (வ.சொ) பழமை

பெ) வரலாற்றுக்கு முற்பட்ட புராதன காலத்தில் மனிதர் வாழ்விற்காகப் பெரும் அல்லல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

புரிசை- (வ.சொ) மதில்

(பெ) இலங்கை வேந்தனான இராவணனின் நகரம் செம்பி னால் இட்ட புரிசைகளாலே சூழ்ந்திருந்தது.

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்.......
திகதி.......

**புரி- செய்**

(வி) 'தீயவை புரிந்தவரும் முருகனை வழிபட்டால் நற்கதி அடைவர்' என்பதற்குச் சூரபன்மனே எடுத்துக்காட்டு.

**புருடன்- (வ.சொ) மனிதன் (ஆன்மாவையும் குறிக்கும்)**

(பெ) பிரகிருதி, புருடன் என்ற பிரிபுச்சன் அறுவகைத் தரிசனங்களுள் ஒன்றான சாங்கியத்திற்கு அடிப்படையானவை.

**புருவம்- நெற்றிக்கீழ், கண்களின்மேல் இருபக்கங்களிலும் மயிரோடுகூடிய உறுப்பு**

(பெ) பெண்களின் புருவங்களுக்கு முற்காலப் புலவர்கள் வில்லை உவமையாகக் கொண்டனர்.

**புரை- குற்றம்**

(பெ) புரைகளை வாழ்நாள் முழுவதும் செய்து இறுதிக்காலத்திற் கழிவிரக்கங் கொள்வதால் யாது பயன்?

**புரோகிதன்- (வ.சொ) வீட்டுக்கிரியைகளைச் செய்யும் ஆசாரியன்**

(பெ) அந்தியேட்டி, திருமணம் போன்ற கிரியைகளை நடத்துவோர் புரோகிதர் எனப்படுவர்.

**பூரணம்- (வ.சொ) முழுமை, நிறைவு**

(பெ) பூரண சுயராச்சியம் என்ற வடசொற்றொடரை முழுத் தன்னாட்சி எனத் தமிழிலே கூறலாம்.

**பூரணை- (வ.சொ) முழுநிலாநாள் (பௌர்ணமி)**

(பெ) பூரணைநாளை இலங்கையரசு பொதுவிடுமுறை நாளாக்கியுள்ளது.

(உவா என்பது பழந்தமிழ்ச் சொல்)

**பூராயம்- விடுப்பு**

(பெ.) பிறரின் மறைகளை அறிய முயல்வோரைப் 'பூராயம் பார்ப்பவர்' என்று பேச்சு வழக்கில் வழங்குவதுண்டு.

**பூரிப்பு- மனமகிழ்வு, விரிவடைதல்**

(பெ.) மகன் பொதுத்தேர்வில் முதன்மையாகத் தேறியது கண்டு தந்தையின் மனத்திலே பூரிப்பு ஏற்பட்டது.

(பூரித்தல் - தொ. பெ, பூரித்தான், பூரித்த, பூரித்து வி . சொ)

பெரியார்- சான்றோர்

(பெ-) எமது ஈழத்தமிழகத்திலே பெரியார் பலர் வாழ்ந்து எம்முடைய நல்வாழ்விற்கு வழிகாட்டியுள்ளனர்.

பெருக்கு- பெருகுதல்

(பெ) கடந்த சில நாட்களாய்ப் பெய்த பெருமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஏழைமக்கள் பலர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

பெருமை- மேன்மை

(பெ) பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவரின் பெருமை பலருக்குத் தெரியாமலே இருந்தது.

பெருமாட்டி- தலைவி, பெருமையுடையவள்

(பெ) புளோரன்ஸ் நைற்றிங்கேல் பெருமாட்டி தாதியத்திற்கு வித்திட்ட முன்னோடியாவர்.

பெருமான்- தலைவன் (இறைவனைக் குறிக்கவே வழங்கும்)

(பெ) சிவபெருமான் பேரருளுடைமை முதலாக எண் குணங்கள் உள்ளவர்.

பேரம்- (தி.சொ) பொருள் விலைபேசல்

(பெ.) பொன்னிலவன் பேரம் பேசிப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில்லே திறமை படைத்தலன்.

பேரிகை- முழவம் (பறை)

(பெ) 'காரிகை கற்றுக் கவி பாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைத்தல் நன்றே'.

பௌராணிகம்- (வ. சொ) புராணத்தொடர்பானது

(பெ.) பௌராணிகமதக் கோட்பாட்டிலே சுவாமி விவேகாநந்தருக்கு நம்பிக்கையில்லை.

பௌருஷம்- (வ. சொ) ஆண்தன்மை

(பெ.) பெண்ணியம் மேலோங்கிவரும் இக்காலத்தில் நாம் பௌருஷம் உடையோம் என்று ஆண்கள் பெருமை பேசுவது நகைப்பிற்குரியதாகும்.

மரகதம்- (வ.சொ) ஒன்பது மணிகளுள் ஒன்று (நவரத்தினம், பச்சைக்கல்)

(பெ.) மயில்மிசை அமர்ந்து மரகதமணி மாலை அணிந்து முருகன் திருவுலாவந்தது கண்கொள்ளாக் காட்சியாகும்.

மரக்கால்- (வ.சொ) தானியஅளவு, அந்த அளவுடைய கொள்கலம்

(பெ.) "விதை நெல்லாக ஒன்பது மரக்கால் நெல் வேண்டும்" என்று உழவர் தம்முடைய மனைவிக்கு உரைத்தார்.

மரபு- வழக்கு

(பெ.) 'தமிழ் மரபை மீறக்கூடாது' என்பது மரபுமுறையாகக் கற்ற தமிழறிஞரின் கருத்து.

மருங்கு- பக்கம்

(பெ) புகழ்வேட்கையுடையோர் இச்சகம் பேசுவோரை விரும்பி அவர்களைத் தம்மருங்கில் எப்பொழுதும் வைத்திருப்பர்.

,, - இடை, இடுப்பு

(பெ) 'பெண்களின் மருங்கு உடுக்கைபோல ஒடுங்கியிருப்பதே அழகு' என்று கூறுவது வழக்கம். (உடுக்கை- உடுக்கு எனவும்படும்.)

மருட்கை- வியப்பு

(பெ) நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் எட்டாக வகுத்துள்ளார்.

மருமம்- (வ.சொ) இரகசியம்

(பெ.) கடந்த காலங்களிலே தமிழிளைஞர்களிற் பலர் காணாமற் போனவை இன்றுவரை மருமமாகவே உள்ளது.

,, -மார்பு, உயிர்நிலை

(பெ) "இராமனைத் தா" என்று விசுவாமித்திரர் வேண்டியது தசரதனின் மருமத்தில் எறிவேல் பாய்ந்தது போன்றிருந்தது.

மருது- ஒருவகை மரம்

(பெ) சங்க காலத்தில் மருதமரங்களின் கீழ்ச் சிறுவர், சிறுமியர் விளையாட்டில் ஈடுபட்ட பல செய்திகள் வருகின்றன.

மருத்துவம்- வைத்தியம்

(பெ) மருத்துவத்துறையில் எமது நாடு மிகவும் பின் தங்கியுள்ளது. (மருத்துவர்- வைத்தியர்.)

மருந்து- (நோய் நீக்க உண்பது, அருந்துவது)

(பெ) போக்குவரவுத் தடையும் பொருளாதாரத் தடையும் தமிழீழ மக்கள் மருந்து பெறவும் முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன.

மருள் - மயக்கம், அறியாமை

(பெ) மருள் நீக்கும் அருமருந்து கல்வியே.

மருவு- அநுகணை

(பெ) நல்லோரை மருவியும் அல்லோரை ஒருவியும் நீங்கியும் வாழ்வதே அறிவுடைய செயல்.

(மருவுதல்- தொ. பெ. ,மருவினான், மருவிய, மருவி வி. சொ.)

மரூஉ- மருவிவரும் சொற்றொடர்

புத்தூர் என்பதன் மரூஉ புதுவையாகும்.

மாராயம்- வேந்தராற்பெறும் சிறப்பு

(பெ) போரிற் பெருவீரங்காட்டிய படைவீரனுக்குச் செங்குட்டுவன் மாராயம் வழங்கிச் சிறப்பித்தான்.

மாரீசம்- (வ.சொ) வஞ்சகம்

[பெ.]) நண்பன் போல நடித்து மாரீசம் புரிந்தவனின் குட்டு வெளியாயிற்று

மிருகம்- (வ.சொ) விலங்கு, மான்

[பெ) மிருகங்கள் தம்மினத்தோடு சண்டையிடுவதில்லை

மிருது- (வ.சொ) மென்மை

(பெ.) மலரினும் மிருதுவான கைகள் கடினமான தொழில் செய்து காய்ந்துப் போயின.

மிருத்து- (வ.சொ) (மிருத்தியு) கூற்றுவன் சாவு

*(பெ.) என் நண்பன் அவமிருத்துக்கு ஆளாகிச் சாவைத் தழுவினான்.*

முரசு- பேரிகை

*[பெ] நெடுஞ்செழியன் தனது சூளுரையை நிறைவேற்றப் பகை மன்னரோடு போர் நிகழ்த்தி அவர்களின் வெற்றி முரசைக் கைப்பற்றினான்,*

முரடன்- கடும்போக்குடையவன்

*(பெ) முரடரோடு நட்புக்கொள்வது இடருக்கே இடமளிக்கும்.*

முரண்- மாறுபாடு

*(பெ) திருக்குறளுக்குத் தலைசிறந்த உரையெழுதிய பரிமேலழகரின் முடிபுகள் சில பிற உரையாசிரியர்களின் கருத்துக்களுக்கு முரணாயுள்ளன.*

முரம்பு- பாறை

*(பெ) தலைவனோடு தலைவி உடன் செல்கையில் முரம்பின் குறுங் கற்கள் அவளின் கால்களை உறுத்தின.*

முருகு- இளமை, அழகு: மணமுடைமை

*(பெ) முருகு என்ற சொல்லின் முழுப்பொருளுக்கும் பொருத்தமானவன் முருகன்.*

முரடு- (கருடு) ஒழுங்கற்ற, காழ்ப்புடைய (மரம்)

*(பெ) சில மரங்களின் தண்டுகள் கரடு முருடாகவுள்ளன. ('கரடு முரடு' எனவும்படும்)*

முரல்- ஒருவகை மீன்

*[பெ] இந்தக்குளத்தில் பெருமளவு முரல்கள் உள்ளன.*

,, - இரீங்கரித்தல்

*வண்டுகள் பூக்களில் தேன் மொண்டு முரல்கின்றன.*

முரி- பாலைநிலம்

*[பெ] முல்லைநிலமும் குறிஞ்சி நிலமும் மழையின்றி வறண்ட நிலையில் முரி எனப் பெயர் கொள்கின்றன.*

மெருகு- ஒளியேற்றல்

(பெ) பித்தளைக்கு மெருகூட்டியதால் அது பொன்போல் ஒளிர்ந்தது

மேரு- ஒரு மலை

[பெ] சிவபெருமான் மேருவை வில்லாய் வளைத்து வாசுகியை நாணாக்கினார் என்பது தொன்மச் செய்தி

வரகு- ஒருவகைக் கூலம் (தானியம்)

[பெ] நீரிழிவு நோயாளிகள் வரகுச் சோற்றில் மாச்சத்துக் குறைவு என்று அதனை உண்பதுண்டு.

வரம்- (வ.சொ) ஆசிர்வாதம், பேறு

(பெ.) நீண்ட காலம் இறைவனை நோக்கித் தவஞ்செய்து விசுவாமித்திரர் பல வரங்கள் பெற்றார்.

வரலாறு- நாடு மக்கள் பற்றிய சரித்திரம்.

[பெ] இலங்கையிலே தமிழரின் வரலாற்றினைப் பலரும் திரிபுபடுத்தியே எழுதி வந்துள்ளனர்.

வராகம்- (வ.சொ) பன்றி

(பெ.) திருமாலின் திருவவதாரங்களில் (அவதாரம் - கீழிறங்கள்) வராகாவதாரமும் ஒன்று

வரி- இறை

[பெ] வரிசெலுத்துவோர் ஒழுங்காகச் செலுத்தாததாலே பல மாநகரசபைகளின் பல நல்ல செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

,, - தொடரியங்கள் சொற்றொடர்கள் என்பன ஒன்றன் கீழ் ஒன்றாக அமையும் ஒழுங்கு

இந்தத் தொடரியின் [பந்தி] பல வரிகள் எனக்கு மனப்பாடமாயுள்ளன.

,, - கோடு

[பெ] ஒருவகைப் புலியின் உடலிலே வரிகள் காணப்படுவதால் அது வரிப்புலி என அழைக்கப்படுகிறது.

வரிசை- ஒருங்கணி

[பெ] உடற்பயிற்சியின் போது மாணாக்கர் மூன்று வரிசைகளில் நின்றனர்.

**வரிதல்-** (தொ.பெ) இறுக்கிக்கட்டுதல்

[தொ.பெ] தனது தொழிலைத் தொடங்க முன்பு இள முருகன் வேட்டியை வரிந்து கட்டினான்.

**வரித்தல்-** (வ.சொ.) வேண்டுதல், தெரிதல்

]பெ] தான் வரித்த பெண்ணையே மணக்கப் போவதாய்ச் செந்தூரன் தன் பெற்றோருக்கு உறுதியாய்க் கூறினான்.

**வருக்கம்-** (வ. சொ.) இனம், பிரிவு

(பெ.) முதலாளிவருக்கம் தொழிலாளி வருக்கம் என்று இரண்டே வருக்கங்கள் உள்ளன என்பது பொதுவுடைமையாளரின் முடிவு.

**வருணனை-** (வ.சொ) விரிவான விளக்கம்

(பெ.) பெண்களைப்பற்றிய புலவர்களின் வருணனைகள் எல்லை கடந்தனவாய் உள்ளன.

**வருக்கை-** பனாமரம்

(பெ) எங்கள் வீட்டு வளவிலே இரண்டு வருக்கைகள் நிற்கின்றன.

**வருத்தம்-** துன்பம்

(பெ) எவ்வுயிருக்கும் வருத்தம் விளைவித்தலைத் தவிர்க்கும் வண்ணம் புத்தர் அறிவுரை பகர்ந்தார்.

**வருமம்-** (வ.சொ) வன்மம், உட்பகை

(பெ.) அவன் தன் பகைவன்மீது வருமங் கொண்டு அவனைத் தொலைக்கும் வழிவகைகளைத் தேடினான்.

**வருவாய்-** வருமானம்

(பெ.) நீண்டகாலப் போரினால் அரசின் வருவாய்க்கான பலவழிகளும் தடைப்பட்டுள்ளன.

**,,** - நீ (வருவாய்)

(வி) " எனது அஞ்சல் கிடைத்ததும் நீ உடனே புறப்பட்டு வருவாய்" என்று நான் நம்பியிருந்தேன்.

**வரைவு-** எல்லை

(பெ) வரைவின்றிச் செலவு செய்த கலையரசன் இன்று வறுமையால் வாடுகின்றான்

(அளவு, பரப்பு என்ற பொருள்களும் உண்டு. க.த.அ.)

**வாரணம்- (வ.சொ) யானை**

(பெ.) இராவணன் வாரணம் பொருத மார்பினை யுடையவன்.

**வாரம்- (வ.சொ) கிழமை (ஏழல் எனவும் வழங்குவர்)**

(பெ.) வாரந்தோறும் செய்தித்தாள்கள் சில சிறப்பு மலர் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

**,, - அன்பு**

(பெ) வாரத்திற்கு உரியவர் தீமைசெய்தாலும் நன்மையாகவும் வாரம் அற்றவர் நன்மை செய்தாலும் தீமையாகவும் கருதுவோர் நேர்மையாளரல்லர்.

(பேச்சுவழக்கில் 'இவருக்கு என்னில் வாரப்பாடு' என்று கூறும் வழக்கமும் காணப்படுகிறது. வாரம் என்ற சொல்லுக்கு உரிமை என்ற பொருளும் உண்டு. க.த.அ.)

**வாரி- வருவாய்**

(பெ) " மழை என்னும் வாரி குன்றினால் உலகிலே புரியபுல் புல்லின் நுனியையும் காணல் இயலாது" என்பர் திருவள்ளுவர்.

கடல், கதவு, வெள்ளம், கலைமகள் - க. த. அ.

**வாரிதி- கடல்**

(பெ.) இலங்கை வாரிதியாற் சூழப்பட்டுள்ளது.

**வாரியம்- (தமிழகத்தில்) அரசின் (மேலுசாவு) திணைக் களம்**

(பெ) அரசின் குடிசை மாற்று வாரியத்தில் அவர் பணிபுரிகிறார்.

**விரக்தி- (வ.சொ) மனமுறிவு**

(பெ.) படித்த கல்விக்கேற்ற தொழில்வாய்ப்புப்பெறாத இளைஞர் பலர் விரக்தியுடன் காணப்படுகின்றனர்.

**விரசம்- (வ-சொ.) நிந்தை, வெறுப்பு, ஆபாசம்.**

(பெ.) சிராளனுடைய பேச்சிலே விரசம் கலந்திருந்தது.

**விரதம்- (வ.சொ) நோன்பு**

(பெ). தேன்மொழி கந்தசட்டி விரதம் அனுட்டித்து வருகிறாள்.

**விரிசல்- விளைவு**

(பெ) உடலும் உயிரும் போல மணமொன்றி வாழ்ந்த துணைவன், துணைவியின் உறவில் விரிசல் உண்டாகிவிட்டது.

விரிவு- அகற்சி

(பெ) நேற்று நிகழ்ந்த மாநாடு பற்றியவிரிவான செய்தி நாளைச் செய்தி இதழில் வெளியாகும்.
(விரிதல்- பூ மலர்தல்- விரிதல், விரிந்தது, விரிந்து, விரிந்த -வி)விரிப்பு- விரிக்கும்துணி.)

விருத்தம் - தமிழ்ப் பாவினத்தில் ஒன்று

(பெ) விருத்தம் பாடுவதிலே கம்பர் இணையற்றவர்.
(பெ.) (அறிவு, ஆமை, ஒவ்வாமை, ஒர் அளவைப் பிரமாணம் மரம் முதலாகப் பல பொருள்கள உள. க.த.அ.)

விருத்தர்— (வ-சொ) முதியவர்

(பெ) அவர் விருத்தராயினும் கல்வி கேள்விகளில் வல்லவர்.

விருத்தாப்பியம்- (வ.சொ) விருத்தாப்பியகாலத்திலே

(பெ) நோய்வாய்ப்படுதல் உதவியற்றவருக்குப் பெருந் துன்பம் விளைப்பதாகும்.

விருட்சர்- (வ. சொ) மரம்

(பெ.) வெள்ளரசு விருட்சத்தின் கீழ்ப் புத்தர் ஞானம்பெற்றார்.

விருது- வெற்றிக்கும் மதிப்புக்கும் திறமைக்கும் அறி குறியாய் வழங்கப்படுவது

(பெ.) நாட்டின் வளர்ச்சிக்குப் பலதுறையிலும் பணிபுரிந்தவர் களுக்கு ஆண்டுதோறும் அரசு, விருதுகளை வழங்குகிறது.

விருந்து- புதுமை

(பெ) புதியனவாய் வெளிவரும் இலக்கிய வகையினைத் தொல் காப்பியர் 'விருந்து' என்ற பெயரால் வழங்குகின்றார் (புதியராய் உபசரிக்கபட்டுபவர் விருந்திளர் என படுவர்.)

விரை- வாசனை

(பெ.) விரைமலர் தூவி விமலனை வணங்குவோம்.

,, - சீக்கிரம் செல்

(வி) தலைவரின் பணிப்பையேற்றுப் போராளிகள் போர்க்களத் துக்கு விரைந்தனர்.

**விரோதம்- (வ.சொ) பகை**

(பெ.) தமிழர் தம்மிடையேயுள்ள விரோதங்களை மறந்து ஒன்று படல் வேண்டும்.

**வீரம்- மன, உடல் வலிமை**

(பெ) வீரமுடையோர் மன ஈரமுடையவராயும் இருப்பர். (வீரன்- பெ)

**வீரி- வீரனுக்குப் பெண்பாற் பெயர்**

(பெ) தமிழீழத்தில் வீரருக்கு இணையாக வீரிகளும் பலர் களத்திற் குதித்துள்ளனர்.

(வீராங்கனை- தமிழும் வடமொழியும் சேர்ந்த கலப்புச் சொல்.)

**வெருட்சி- அச்சம்**

(பெ) பெற்றோர் பலரும் தம் பிள்ளைகளை வெருட்சி காட்டி அடக்க முற்படுவது அப்பிள்ளைகளின் மனவளர்ச்சிக் குத் தடையாகும்.

(வெருளல் - தொ. பெ. வெருண்டான், வெருண்ட, வெருண்டு - வி. வெருட்டல் தொ. பெ. வெருட்டினான், வெருட்டிய, வெருட்டி - பி. வி)

**வெருளி- தோட்டங்களிலே திருடரை அச்சுறுத்த நாட்டி வைக்கும் உருவம்**

(பெ). 'கத்தரித் தோட்டத்து வெருளி' என்ற தலைப்பில் அமைந்த சிறுவர் பாடலை நவாலியூர்ச் சோமசுந் தரப் புலவர் பாடியுள்ளார்.

**வேரி- தேன், கள்**

(பெ) வேரியை அளவு மீறி அருந்தினால் வேரி (கள்) போல வெறியை அது தரும்.

**வைரம்- (வ.சொ) காழ்ப்பு**

(பெ.) "வைரம் உடைய நெஞ்சு வேண்டும், இது வாழும் முறைமையடி பாப்பா" என்பது பாரதியார் சிறுவர், சிறுமியருக்குக் கூறும் அறிவுரை.

**,, - (வ.சொ) ஒன்பது மணிகளுள் (நவரத்தினங்களுள்) ஒன்று**

(பெ) வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், கோமேதகம், புட்பராகம், முத்து, பவளம், என்பன நவமணிகள்

வைரவர்- (வ.சொ) சைவக் கடவுளுள் ஒருவர்
(பெ) வைரவர் நாயைத் தமது ஊர்தியாகக் கொண்டவர்.

வைரவி- (வ.சொ) உமாதேவியாரின் மூர்த்தங்களுள் ஒன்று
(பெ.) வைரவியை வணங்கி வாழ்வு பெறுவோம்.

வைராக்கியம்- (வ.சொ) மனதிற் கொள்ளும் மிகுதியான உறுதி.
(பெ.) நாட்டு விடுதலைக்காக எதையும் இழப்போம் என்ற வைராக்கியத்துடன் போராளிகள் போராடி வருகின்றனர்.

'ற'

அறல்- கருமணல்
(தொ. பெ) பொன்மணியின் கூந்தல் ஆற்றங்கரையின் அறல் போன்று சுருள் சுருளாய்க் காட்சி தந்தது.

,, - அற்றுப்போதல்
தொ. பெ) மணிமேகலையின் அமுதசுரபியில் உணவு அறல் என்றும் இல்லை.
(நீர், நீர்த்திரை என்ற பொருள்களும் உள்ளன. க.த.அ)

அறவிடல்- முற்றாக நீக்குதல்
(தொ. பெ) கடனாளிகளிடமிருந்து கடனை அறவிடல் மிகவும் கடினமான ஒன்றாயுள்ளது.

அறிக்கை- விளம்பரம், பலரும் அறியுமாறு தெரியப் படுத்துகை
(பெ) இவ்வாண்டு அரசின் வரவுசெலவறிக்கை ஏழைமக்களுக் குப் பெரும் பளுவைத் தரக்கூடும்.

அறிமுகம்- பழக்கம் (செய்துவைத்தல்)
(பெ) எழுத்தாளர் தமது நூலை அறிமுகம் செய்வதற்குப் பெருவிழா ஒன்றினை ஒழுங்கு செய்தார்.

அறியாமை- பேதைமை (ஆணவமலம்)
(பெ) நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சொற்பொழிவு பலருடைய அறியாமையைப் போக்குவ தாய் அமைந்தது.

அறிவாளி- அறிஞன்

(பெ) நூற்கல்வியால் மட்டும் ஒருவர் அறிவாளியாகிவிடல் இயலாது.

அறுகால்- வண்டு, பாம்பு

(பெ) அறுகால் தேன் நாடிப் பூக்களில் சென்றமர்ந்தது.

அறுசுவை- உணவின் ஆறுவகையான சுவைகள்

(பெ) கைப்பு இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன அறுசுவைகளாகும்.

அறுதலி- தாலியிழந்தவள், அமங்கலி

(பெ) தாய் தன் மகளை நோக்கி "அறுதலி பெற்றபிள்ளை என்ற பெயரை வாங்காதே" என்று அறிவுரை வழங்கினார்.

அறுதல் - (தொ.) தீர்தல், பாழாதல்

(தொ.பெ) வெளிநாடு செல்வோர், தம் குடும்ப உறவுகள் அறுதல் கண்டு பெரிதும் வருந்துகின்றனர்.

(அறுப்பு, அறுகை தொ-பெ, அறுந்தது, அறுந்த, அறுந்து வி.செ)

அறுத்தல்- (தொ.பெ) வெட்டுதல், நீக்குதல்

தொ.பெ) வாள்கொண்டு மரத்தினை அறுத்தல் கடினமான ஒரு தொழில்

(அறுத்தான், அறுத்த, அறுத்துவி.)

அறுதி- முடிவு, வரையறை, விற்பனைச் சீட்டு

நீண்டநாள் ஈட்டிலிருந்த காணியை மீட்க முடியாத நிலையில் காணியின் உரிமையாளர் ஈடு தந்தவருக்கு அறுதியாக எழுதிக் கொடுத்தார்.

ஆறங்கம்- (வ.சொ)(வேதத்தின்) ஆறு பிரிவுகள்

(தொ.பெ) சிட்சை, வியாகரணம், கற்பம், சோதிடம் சந்தோவிசிதி என்பன வேதத்தின் ஆறங்கங்களாகும்.

ஆறலை- வழிப்பறி

(பெ) முற்காலத்திலே பாலை நிலங்களிலே ஆறலை கள்வர் மறைந்திருந்து வழிச் செல்வோரின் பொருள்களைக் கவர்ந்தனர்

**ஆறு- வழி, நதி**

(பெ) ஆற்றின் நீர் சென்றவாறுகண்டு அதன் அழகிற்புலவர் மயங்கினார்.

**ஆறுதல்- (மன, உடல்) அமைதி**

(பெ) நீண்ட நாள்களாய் மகனி பிருந்து எதிர்பார்த்த அஞ்சல் கிடைத்த பெற்றோர் பெரும் ஆறுதலடைந்தனர்.

**ஆற்றுப்படை- வழிப்படுத்தல்**

(பெ) புலவரிடம் பரிசில் பெற்றுவரும் பாணர் முதலியோர் அவ்வாறு பரிசில் பெறலாம் என்று புரவலரிடம் இரவலரை வழிகாட்டி விடுவதாய் இயற்றப்பட்ட நூல் 'ஆற்றுப்படை' என வழங்கும்.

**இறப்பு- சாவு**

(பெ) இறப்பும், பிறப்பும் தவிர்க்க முடியாதவை.

**இறகு- சிறகு**

(பெ) மயிலின் இறகுகள் அழகு வாய்ந்தவை.

**இறவுளர்- குறிஞ்சி நில மக்கள்**

(பெ) இறவுளர் பொரும்பாலும் வேட்டையாடுதலும், தினை விளைத்தலுமே தொழில்களாகக் கொண்டவர்.

**இறால்- நீர்வாழ் உயிர்களில் ஒருவகை**

(பெ) ஒரு காலத்தில் இறால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி நாட்டிற்கு ஏற்றுமதியாயிற்று

**இறுக்குதல்- நெருக்குதல்**

(பெ) சட்டங்களை இறுக்குதலால் மட்டும் குற்றச் செயல்களைக் குறைத்தல் இயலாது.

**இறுங்கு- ஒருவகைக் கூலம்**

(பெ) இறுங்கை எவரும் உணவுக்குப் பயன்படுத்துவதில்லை.

**இறுதி- முடிவு**

(பெ) நீண்ட போரின் இறுதியில் நாடு பெரும் குழப்பத்திற்கும் பொருளாதாரச் சீர்கேட்டிற்கும் உள்ளாயிற்று.

**இறுமாப்பு**- செருக்கு

(பெ) கல்வி, செல்வம் என்பவற்றை மிகுதியாய்ப் பெற்றிருந்தாலும் இறுமாப்புக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

**இறும்பூது**- வியப்பு, களிப்பு

(பெ) அவையிலே முதலிடம் பெற்ற தம்முடைய மகனின் சிறப்புக்கண்டு பெற்றோர் இறும்பூதெய்தினர்.

**இறைச்சி**- மாமிசம்

(பெ) ஆமையிறைச்சி மூலநோய்க்குக் கைகண்ட மருந்து.

**இறைமை**- தலைமை, அரசாட்சி

ஓரினத்தின் இறைமை ஏற்கப்படாத நிலையிற் போர் மூலமே அதனை மீண்டும் பெறுதல் தவிர்க்கவியலாதது.

**இறைவன்**- கடவுள்

(பெ) இறைவன் அருளாலே அவன் தாள் வணங்கும் பேறு கிட்டும.

(இறைவி-பெண்பால், இறைவன் என்பதற்கு அரசன் எனவும் பொருள் கொள்வதுண்டு)

**ஈறல்**- நெருக்கம்

(பெ) பேருந்திலே பயணிகளின் ஈறல் மிகுதியாயிருந்தது.
(துன்பம், பின்னல் க.த.அ)

**ஈறிலி**- முடிவில்லாதவன், முடிவில்லாதது

(i) இரண்டு சமாந்தரக் கோடுகள் ஈறிலியிற் சந்திக்கும் என்பது கணித உண்மை (ஈறிலி- முடிவிலி infinity)
(ii) தொடக்கமிலியான இறைவன் ஈறிலியுமாவன்.

**உறழ்ச்சி**- (தொ.பெ) செறிவு

(தொ.பெ.) பனை+திரள், புணர்கையில் பனைத்திரள், பனந்திரள் என்று இருவகையிலும் புணரும் என்பதை நன்னூல் ஆசிரியர் உறழ்ச்சி என்னும் பெயராற் குறிப்பர் (இரண்டு வகையிலும் புணர்ச்சி அமைவதே, (செறிவதே) உறழ்ச்சி)

**உறுகண்- துன்பம்**

(பெ) பெற்றோரையிழந்த வேலவன் உறுகணுற்றான்.
(உறுகண் - வறுமை நோய். க.த.அ.)

**உறுதி- வலிமை, துணிபு**

(பெ) உறுதியான குறிக்கோளோடு அயராது முயன்றால் எதிலும் என்றும் வெற்றி கிட்டும் என்பது உறுதி.

**ஊறு- துன்பம் (இடையூறு- இடையில் வரும் துன்பம்)**

(பெ) செயல்செய்கையில் இடையில்வரும் ஊறுகளை மேற்கொள்ளத் தயங்கல் கூடாது.

**ஊறுகாய்- பதனிடப்படும் (எலுமிச்சை, நெல்லி, நாரங்காய்) பழவகை.**

(பெ) ஊறுகாயை உணவோடு சிறிது சேர்த்துள்ளது உணவைச் சுவையுடையதாக்கும்.

**எறுழ்-வலிமை**

(பெ) எறுழுடைய தோளினர் எதற்கும் அஞ்சாராயின் அவரைப் பகைவர் வெல்லல் இயலாது.

**ஒறுவாய்- மூளி**

(பெ) ஊறுகாய் இட்ட சாடியின் மூடி உடைந்து அது ஒறுவாயாயிற்று.

**கறங்கல்- (தொ.பெ) சுழலுதல்**

(தொ.பெ) போர்க்களத்தில் வாட்போரின்போது வீரன் கறங்கிச் செயற்பட்டான்.
(கறங்கினான், கறங்கிய, கறங்கி-வி.சொ.)

**கறங்கு- பம்பரம், காற்றாடி**

(பெ) 'காலம் என்பது கறங்குபோற் சுழலும்' என்பது மனோன்மணீய நாடக ஆசிரியரான பெ.சுந்தரம்பிள்ளையின் கூற்று.

**கறடிகை- பெண்கள் அணியும் ஓர் அணிகலன்**

(பெ) மாதவி கோவலனுடன் கடலாடச்சென்றபொழுது அணிந்த அணிகலன்களுள் கறடிகையும் ஒன்று.

கறல்- விறகு

(பெ) மிதிவண்டிகளிலே கறல் ஏற்றிச்சென்று விற்போரின் வாழ்க்கை கடினமானது.

கறள்- இரும்புத் துரு

(பெ) நீண்டகாலம் கழுவாததால் எனது மிதிவண்டியிற் கறள் பிடித்துவிட்டது.

கறவை- பால் கறக்கும் பசு

கறவைப் பசுக்களின் பால் அளவிற்கேற்ப அவற்றின் விலையும் அமையும்.

கிறுக்கல்- கிறுதல்

(பெ) சிறுகுழந்தைகள் எழுத்துக் கற்குமுன் தாள்களிலே கிறுக்கலின் ஊடாக விரல் நரம்புகளுக்கு நல்ல பயிற்சி கிட்டும்.

(கிறுக்கினான், கிறுக்கிய, கிறுக்கி-வி.சொ.)

கிறுக்கு- பித்தம்

கிறுக்குப் பிடித்தவரை ஏசாது அவரில் இரக்கம் காட்டுதல் வேண்டும்.

குறடு- ஒரு கருவி

(பெ) இளமுருகன் சுவரிலிருந்த ஆணியைக் குறடு கொண்டு பிடுங்கினான்

(அடைகல், ஒட்டுத்திண்ணை நண்டு, பலகை, புடைப்பு, மரத்துண்டு க.த.அ)

குறட்டை-துயிலுகையில் மூக்கு, வாய் என்பவற்றினூடாக வெளிப்படும் மூச்சொலி

(பெ) அயர்ந்து தூங்கிய பாரி குறட்டை விட்டான்.

குறள்- ஈரடிச்செய்யுள், குறுகியவடிவம்

(பெ) குறட்பாக்களில் அமைந்த நூல்களிலே தலைசிறந்தது திருக்குறள்.

குறளை- குற்றம், கோள்சொல்லல்

(பெ) பிறர்பற்றிக் குறளை கூறித் தம் நோக்கத்தினை நிறைவேற்ற முயல்வோர் போற்றுதற்குரியவரல்லர்.

குறாவுதல்- மெலிதல் ஒடுங்குதல்

(பெ) நோயாற் குறாவுதலுற்ற என் தம்பியைப் பார்த்து இரங்கினேன்.

(குறாவினான், குறாவிய குறாவி-வி சொ )

குறி- அடையாளம்

(பெ) 'ஊரிலான் குணக் குறியிலான்' என்று இறைவனை அடியார் போற்றுவர்.

குறிக்கோள்- இலக்கு (இலட்சியம் - வ.சொ)

(பெ) 'குறிக்கோளிலாது கெட்டேனே' என்பது மணிவாசகர் கூற்று

குறிஞ்சி- மலையும் மலை சார்ந்த நிலமும்

(பெ) குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கம் புணர்ச்சி.

குறிப்பு- உள்ளீட்டுப்பொருள், பேச்சு நூல் என்பவற்றிலிருந்து எடுக்கப்படும் சுருக்கம்.

தமிழ்ச்சொற்களிற் பல குறிப்பாகப் பொருள் உணர்த்துவன.

குறியீடு- அடையாளம், (முற்றுப்புள்ளி முதலியவற்றின் தொகுப்பும் குறியீடு என வழங்கும்.

(பெ) இன்று எழுத்தாளர் பலரும் தம்முடைய ஆக்கங்களிலே குறியீடுகளையும் (S mbols) படிமங்களையும் (Images) கையாள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

குறைவு- (தொ.பெ) குறைதல்

தொ.பெ) நிதிப் பற்றாக்குறைவால் அரசு, குறை நிரப்பு முன் மொழிவை நாடாளுமன்றத்தில் வெளியிட்டது.

(குறைதல் தொ.பெ குறைந்தது, குறைந்து-வி சொ)

(குறைச்சல் என்பது தொழிற்பெயர். குறைத்தல் என்பதன் (பிறவினை) மொழியிடைப் போலியாகப் பேச்சு வழக்கில் வழங்குவது)

(குறைத்தான், குறைத்த, குறைத்து. வி. சொ.)

12

**கூறுபாடு- (தொ.பெ) பாகுபாடு**

(தொ. பெ) ஒரு முழுப்பொருளின் கூறுபாடுகளைப் பின்னங்கள் என வடசொல்லால் வழங்கும் வழக்கம் கணிதவியலிலே காணப்படுகிறது.

**சறுக்கல்- (தொ.பெ) வழுக்கல்**

(தொ. பெ) கிணற்றடியிலே சறுக்கி விழுந்த முதியவரின் கை யெலும்பில் முறிவு ஏற்பட்டது.

(சறுக்கு- தொழிற்பெயர். சறுக்கியது, சறுக்கிய, சறுக்கி வி.சொ

**சிறார்- சிறுவர், சிறுமிகள்**

(பெ) சிறாரை அன்பாலேயன்றி அதட்டலால் வழிப்படுத்தல் கூடாது.

**சிறுசொல்- இழிப்புரை**

(பெ) சிறுசொற் சொல்லிய சினங்கெழுவேந்தரை நெடுஞ்செழியன் தலையாலங்கானச் செருக்களத்திலே முறியடித்தான்.

**சிறுமை- கீழ்நிலை, சிற்றியல்பு**

(பெ) மகாத்மாகாந்தி மக்களிடையே சிறுமை, பெருமை பாராட்டாது எல்லோரையும் ஒரேவகையான அன்புடன் நடத்தினார்.

**சிறுவன்- பாலகன் (வ.சொ)**

(பெ) சிறுவனாயினும் அவனது நுண்ணறிவு அவனைப் பெரியோரும் மதிக்க வைத்தது (சிறுவன் - சிறுமி)

**சூறாவளி- புயற்காற்று**

(பெ) சூறாவளியாற் பெருமரங்கள் பல அடிசாய்ந்து வீழ்ந்தன. (சூறை, சூறைக்காற்று என்பனவும் சூறாவளிப் பொருள் தரும்)

**செறுவர்- பகைவர்**

(பெ) செறுவரையும் மன்னிக்கும் பண்பு இன்று செல்லாக்காசாகிவிட்டது.

(செறுவார் என்பதும் இப்பொருளையே தரும்)

**சொறியன்- தவளை**

(பெ) மழைக்காலத்தில் சொறியன்கள் நீர்நிலைகளிலே இரவு முழுவதும் கத்தி ஓய்ந்து இறந்துபோவதும் உண்டு.

தறுகண்- கொடுமை, வீரம்

(பெ) பேராண்மையென்பது தறுகண்ணாயினும் பகைவனுக்கு இடையூறு வருங்காலத்தில் அவனுக்கு ஊராண்மை செய்வதே சிறந்த அறமாகும்.

தறுகுறும்பு- தீமை

(பெ) பெரியோரை மதிக்காது தறுகுறும்பு செய்வதே தொழிலாகக் கொண்ட வெற்றிவேலன் முதுமைக் காலத்திலே தன் செயல்களுக்காய்க் கழிவிரக்கம் கொண்டான்.

தாறு- அங்குசம் (வ.சொ)(தோட்டி த.சொ

(பெ. யானைப் பாகன் தாறுகொண்டு யானையை நேர் வழியில் நடத்தினான்.

தாறுகோல்- செலவை முடுக்கும் கோல்

(பெ) வண்டியோட்டி மாடுகளைத் தாறுகோல் கொண்டு விரைவாகச் செல்ல வைத்தான்.

தாறுமாறு- குழப்பநிலை (ஏறுமாறு எனலும் ஒன்று)

(பெ) கூட்டத்திலே குழப்பம் உண்டானதும் மேடையிலிருந்த பொருள்கள் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடந்தன.

திறத்தர்- இயல்பினர்

(பெ) இவர் இன்ன திறத்தர் (திறத்தினர்) என அறியுமுன் அவரோடு நட்புக் கொள்ளல் அறியாமை.

திறவுகோல்- திறப்பு

(பெ) வீட்டுத் திறவுகோலைத் தொலைத்ததால் வீட்டினர் செய்வதறியாது தடுமாறினர்.

திறவோர்- நன்மைக் கூறுபாடறிவோர் (புறநானூறு பாடல்- 192)

(பெ) திறவோரின் அறிவுரைகளைச் செவிமடுத்து நடப்பதால் நன்மையே விளையும்

திறன்- இயல்பு, பண்பு

(பெ) சிலப்பதிகாரத்திலே 'கனாத்திற முரைத்தகாதை' மதுரைக் காண்டத்தில் உள்ளது.

திறாணி- (வ.சொ) திராணி, வலிமை

(பெ) மனத்திராணியின்றிச் செயலில் இறங்கினால் விளைவது தீமையே.

துறட்டி- (யானையைச் செலுத்தும்)தோட்டி.

மதங்கொண்ட யானை பாகனின் துறட்டிக்கும் அடங்காது வீறுகொண்டு அவனையும் தும்பிக்கையாலே தூக்கி வீசியது.

துறவி- சந்நியாசி (வ.சொ)

(பெ) யாவுந்துறந்த துறவிக்கு வேந்தன் துரும்பு.
(துறத்தல்- (தொ. பெ.) துறந்தான், துறந்த, துறந்து - வி. சொ.)

துறு- நெருக்கம்

வ. சொ.) துறுபடை கண்டும் துளங்காத (நடுங்காத) நெஞ்சினராய் எம்மவர் நின்றனர்.
(துறுத்தல்- தொ. பெ. -துற்றான், துற்றிய, துற்றி)

துறைவன்- நெய்தல் நிலத் தலைவன்

(பெ) துறைவனின் தேர்ச்சுவட்டை நோக்கி நின்று அவன் நினைவாலே தலைவி வாடினாள்.

தெறுதல்- (தொ.பெ) அழித்தல்

(தொ. பெ.) பகைவரைத் தெறுதலும் தமரைக் காத்தலும் ஆட்சியாளரின் கடனாகும்.
(தெறுநர்- பகைவர், தெறுத்தான், தெறுத்த, தெறுத்து (வி. சொ.)

தோறும்- ஒவ்வொன்றும்

இ. சொ.) பள்ளிதோறும் மாணாக்கர் ஆசிரியர் நாளைச் சிறப்பாய்க் கொண்டாடினர்.

நறவம்- தேன், கள்

(பெ) நறவம் மாந்திய நம்பி வெறி கொண்டான்.

நறுக்கு- ஓலைத்துண்டு

(பெ) ஓலை நறுக்கில ஆசிரியர் எழுத்தாணி கொண்டு எழுதினார்.

நறுக்கு- (நீ) வெட்டு

(வி) வேண்மாள் கயிற்றை இரு துண்டுகளாய் நறுக்கினார்.

நிறைவு- முழுமை

(தொ.பெ.) போதுமென்ற மனநிறைவு ஒருவருக்குச் செல்வத்து ளெல்லாம் தலையாயது.

நிறைவேற்றம்- முடிப்பு

(பெ) நிறைவேற்றம் தம்மால் எக்காலத்தும் முடியும் என்று கருதிப்போலும், அவர் நிறைவேற்று மேலாண் மைச் (மேலாண்மை- அதிகாரம்) சனாதிபதியாய் வர முயல்கின்றார்.
(சனாதிபதி- மக்கள் தலைவர்)

நீறு- சாம்பர், (வீபூதி, துகள், புழுதி)

பெ) ' சுந்தரமாவது நீறு' என்று சம்பந்தர் திருநீற்றின் பெரு மையைப் போற்றிப் பாடினார்.

நூறு- பப்பத்து (100×10)

(பெ) எமது கழக உறுப்பினர் எண்ணிக்கை நூறு

,, - அழி

(வி) பகைவரை வீரர் நூறினர்
(நூறுதல்- தொ பெ.)

நொறுங்குதல்- உடைந்துதூளாதல்

(பெ) குண்டு வீச்சினாலே தமது வீடு நொறுங்குதல் கண்டும் அவரால் ஒன்றும் செய்தல் இயலாது போயிற்று.
நொறுங்கியது, நொறுங்கிய, நொறுங்கி -வி. சொ. (தன் வினை)
நொறுக்கினான், நொறுக்கிய, நொறுக்கி- வி.சொ (பிறவினை)

பிறங்கல்– சிறுமலை

(பெ) யாழ்ப்பாணத்திலே பிறங்கல் என்று எதுவும் இல்லை (அரசன், உயர்ச்சி, ஒலித்தல், ஒழுக்கம், ஒளிசெய்தல், மலை, நிறைதல், பெருமை க.த.அ)

பிறங்குதல்- உயர்தல், ஒலித்தல்

தொ.பெ.) மாவீரன் நெப்போலியனின் புகழ் உலகெங்கும் பிறங்குதல் கண்டு ஐரோப்பிய நாடுகள் பொறாமை கொண்டன.
பிறங்கினான், பிறங்கிய, பிறங்கி என்பன பிறங்கு என்ற வினையடியாகத் தோன்றின. பிறங்கினான்- உயர்ந் தான்.)

பிறர்- தம்மவர் அல்லாதவர்

(பெ) முறைசெய்வோர் தமர், பிறர் என்ற வேறுபாடு நோக்காது நிறைகோல் போன்று முறை செய்தல் வேண்டும்.

பிறவி- பிறப்பு

(பெ) பிறவிப் பெருங்கடலை நீந்த வல்லவர் இறைவனின் திருவடிகளான புணையைப் பற்றியோரே.

பிறழ்வு- மாறுபாடு

(பெ) கொடுத்த உறுதிச் சொல்லினின்றும் பிறழ்ந்து செயல் புரிவோர் மக்கள் என்று கொள்ளத்தக்கவரல்லர்.

பிறனில்- பிறன் மனைவி

பெ) பிறனில் விழையாத பேராண்மையே மிகவும் உயர்ந்தது என்பது வள்ளுவர் முடிபு.

பீறல்- கிழிதல்

(பெ) அவனுடைய வேட்டியின் பீறல் அவனை நாணமடையச் செய்தது.
(பீறுகை,-(தொ. பெ. (பீறியது, பீறிய, பீறி-வி.செ)

புறணி- புறங்கூறல்

(பெ) எப்பொழுதும் எவரைப் பற்றியாவது புறணியளப்பது அவரின் தொழிலாய் விட்டது.

புறவம்- புறா

(பெ) புறவங்கள் வாயிலாய் அஞ்சல் அனுப்பும் வழக்கம் முன்பு நிலவியது.

,, - காடு

(பெ) புறவஞ் செல்ல நேரிட்ட நளனும் தமயந்தியும் இரவைப் பாழடைந்த மண்டபமொன்றிற் கழிக்க எண்ணினர்.

**பெறுமதி- பொருளின் (விலை) மதிப்பு**

*(பெ) ஒரு பொருளின் பெறுமதி அதன் பயன்பாட்டளவு கொண்டே உறுதி செய்யப்படும்.*

**பேறு- (பெறுர்) நன்மை**

*(பெ) "இத்தகைய தலைவர் ஒருவர் எமக்குக் கிடைத்தமை நற்பேறே" என்று செயலாளர் தலைவரைப் பாராட்டிப் பேசினார்.*

**பொறை- சுமை, பாரம்**

*(பெ) தன்நலமுடையோர் பூமிக்குப் பொறையாவர்.*

**,, - பொறுமை**

*(பெ) எந்தச் சூழ்நிலையிலும் சீற்றங் கொள்ளாது பொறையுடையவராதல் எல்லார்க்கும் எளிதன்று.*

**போறை- பொந்து**

*(பெ) மரப்போறையினுள்ளே முயல் சென்று ஒளித்தது.*

**மறதி- மறத்தல்**

*(பெ) "நான் கற்றவை யாவும் மறதி வாய்ப்பட்டொழிந்தன" என்று அந்த மூதறிஞர் கவலையோடு கூறினார். (மறத்தல், மறப்பு - தொ. பெ, மறந்தான், மறந்த, மறந்து வி. சொ)*

**மறலி- கூற்றுவன்**

*(பெ) மறலிக்குத் தப்பி நிலையாய் வாழ்ந்தவர் எவருமில்லை.*

**மறவன்- வீரன்**

*(பெ) சங்கிலியன் 'மானங்காத்த மறவன்' என்று போற்றப் படுகின்றான்.*

**மாறுபாடு- ஒவ்வாமை**

*(தொ. பெ) கருத்து மாறுபாடு கொண்ட இருவர் எப்போதும் தாம் கொண்ட முடிவே பொருத்தம் என்று வாய்ச் சண்டையிடுகின்றனர்.*

**மீறு- நீ அவன் கட்டளைக்கு எதிராக மீறிச்செல்**

*(வி) தமது கட்டளையை மீறிய பணியாளை இல்லத் தலைவர் ஒறுத்தார்.*

**முறுகல்- முரண்பட்டுப் போராடற்கான தொடக்கநிலை.**

(பெ) தேசிய இனங்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டு இன்று அது போராட்டமாய் உருவெடுத்துவிட்டது.

**முறுவல்- சிறுநகை**

(பெ) எந்நேரமும் முறுவல் பூத்த முகத்துடனேயே மலர்விழி காட்சிதருவாள். (முறுவல் மூரல் எனவும்படும்)

**வறட்சி- நீர்ப்பசையற்றதன்மை**

(தொ. பெ) மழையின்றி வயல் நிலங்கள் வறட்சியுடன் காணப்படுகின்றன. (வறளுதல், வறளல், வறண்டது, வரண்ட, வறண்டு -வி. சொ)

**வறிது- இயலாமை, பயனின்மை**

(பெ) தன் உள்ளத்தினுள்ளே கவலையை மறைத்த வண்ணம் கோவலனின் பெற்றோருக்கு முன்பு கண்ணகி வறிதே முறுவல் பூத்தாள்.

**விறலி- பாடினி, (பாணர்குடிப்பெண்)**

(பெ) விறலி பற்றிய செய்திகள் சங்கநூல்களிலே காணப்படுகின்றன.

**விறலன்- திறமை பொருந்தியவன்**

(பெ) எமது அச்சகத்திலே பணிபுரியும் பொன்வண்ணன் அச்சுத்துறைகள் யாவிலுமே விறலன்-

(விறலோன - திண்மையுடையவன், சமணக் கடவுளான அருகன் ஆகிய பொருள்களையும் தரும் க. த. அ)

**விறுதா- பயனில் முயற்சி**

(பெ தி. சொ) அவன் முயற்சிகள் யாவும் விறுதாவாயின

**வீறாப்பு- வீரம்**

(பெ) "உம்முடைய வீறாப்பை என்னிலே காட்ட வேண்டாம்' என்று அமுதனை நோக்கி எழிலன் சினத்துடன் கூறினான்.

**வீறு- பெருமை**

(பெ) வீறுடைய தமிழ் மறவர் வெற்றியில்லையேல் வீரச்சாவு என்ற குறிக்கோளை உயிராய்க் கொண்டனர்.

வெறி- சினம், கள்ளுண்ட மிதப்பு

*(பெ) கள்ளருந்தி வெறிகொண்டவன், தன்னைப் பழித்தவர் மீது சினவெறி கொண்டெழுந்தான்.*

வேறல்- வெல்லுதல்

*(தொ. பெ) கோறலும் (கொல்லுதலும்) வேறலும் (வெல்லுதலும்) போரிலே இயல்பாய் இடம்பெறுவன.*

வேறு- மற்றது

*(பெ) "இருவேறு உலகத்தியற்கை, திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்பது திருவள்ளுவரின் கூற்று.*

## அடுக்குத்தொடர் (ஒலிக்குறிப்பு)

## ற, ர

கரகரப்பு- தொண்டையரிப்பு

*தொண்டைக் கரகரப்பினால் துளசி அவதிப்பட்டாள்.*

கறகறப்பு- (விரைவாகப் பொருளை இழுக்கும்) ஒலிக்குறிப்பு

*பள்ளிக்குச் செல்ல மறுத்த மகனைத் தந்தை கறகற வென்று இழுத்துச் சென்றார்.*

கறுகறு(ப்பு)- மிகுந்த கறுப்பு

*திருமாலின் உடல் கறுகறுவென்றிருந்தது.*

கிறுகிறு(த்தல்)- தலை சுழல்தல் (தலைச்சுற்று)

*நண்பன் கூறிய செய்தியால் எனது தலை கிறுகிறுத்தது.*

,, -விரைவு

*தமையன் பின்னாலே தம்பி கிறுகிறுவென்று நடந்து சென்றான்.*

குறுகுறு(ப்பு)- சிற்றடி பெயர்த்துக் குழந்தை நடப்பதைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு

*குறு குறு நடந்து சிறுகை நீட்டி வந்த குழந்தையைத் தாய் வாரி அணைத்துக் கொண்டாள்.*

,, -மனத்தைக் கவரும் (குழந்தையின்) வடிவைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு

*பாவண்ணனின் குழந்தை குறு குறுவென்று காட்சி தந்தது.*

,, -மனச்சான்றின் வருத்துகை

குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.

சரசர(ப்பு)- சருகுகளின்மீது மிதிக்கையில் எழும் ஒலி

*மரத்தின் கீழ் விழுந்து கிடந்த சருகுகள் விலங்குகளின் கால்களிலே மிதியுண்டு சரசரத்தன.*

சுறுசுறுப்பு- விரைவாகவும் திறமையாகவும் செயல் புரிதல்,

*எப்பொழுதும் மகிழ்நன் சுறுசுறுப்பாகவே எதனையும் செய்வான்.*

தறதற(ப்பு)- (விரைவாக இழுத்துச்) செல்லல்

*சுமக்க முடியாத பொதியைத் தம்பி தரையிற் போட்டுத் தற தறவென்று இழுத்துச் சென்றான்.*

திருதிரு- குற்றம் வெளியானதும் உண்டாகும் கையறு நிலை

*கையும் களவுமாகக் காவற்றுறையினரிடம் பிடிபட்ட கள்வன் திருதிருவென விழித்தான்.*

துருதுரு- கவர்ச்சியும், உற்சாகமுமாயிருத்தல்

*மலர்மங்கையின் குழந்தை துருதுருவென்றிருந்தது*

நறநற- பல்நெருமுதல், சப்புதல் (ஒலி)

*சினமிகுதியாலே குமரன் பற்களை நறநறவென்று நெருமினான். (நெறு நெறுவெனலும் ஒன்று.)*

சொறசொறப்பு- முரடாயிருத்தல்

*சீவுளி கொண்டு சீவமுன் மரத்தின் மேற்பட்டை சொற சொறப்பாயிருந்தது.*

பரபரப்பு- அமைதியின்மை (அவசரப்படுதல்)

*அமைதியின்றித் தவித்த மகளைப் பார்த்து "ஏன் இத்தப் பரபரப்பு?" என்று தாய் கேட்டார்*

**புறுபுறுப்பு-** மனதின் ஒவ்வாமையை (இடைவிடாது) மெல்லக்கூறுதல்

*தந்தையின் கண்டிப்பை ஏற்காது அதேபொழுது எதிர்த்துப் பேசவும் முடியாது அவர் இல்லாத இடத்தில் மகன் புறுபுறுத்தான்.*

**மொறுமொறுப்பு-** பொங்கிப் பூரித்திருக்கும் உணவின் மேற்பகுதி

*மொறுமொறுப்பாயிருந்த வெதுப்பியை (பாணை) என் தம்பி விரும்பி உண்டான்.*

**விறுவிறுப்பு-** தொய்வின்மை

*நேற்று நடைபெற்ற நாடகம் முதலிலிருந்து முடிவு வரை விறுவிறுப்பாயிருந்தது.*

# பிழை திருத்தம்

| பிழை | திருத்தம் | பக்கம் |
|---|---|---|
| அரிவான் | அரிவன் | 4 |
| உரவுடையவனால் | உரவுடையவனானால் | 10 |
| உருக்குவி | உருக்கி | 11 |
| ஏறல் | ஏறல்-மேற்செல்லல், கூடுதல் | 12 |
| சொல்லுதல் | கொல்லுதல் | 18 |
| ('சாறி' என்ற சொல்லின் கீழ்ச் சிரை குரங்கு என்பதைச்சேர்க்க | | 19 |
| உரைப்பதிகுயை | உரைப்பகுதியை | 20 |
| வைத்திருதாற் | வைத்திருந்ததாற் | 25 |
| பொருக்கப்பட்டுப் பொறும் | பெரு க்கப்பட்டுப் பெறும் | 27 |
| ஓர | ஒரு | 27 |
| அளவாற் | (அளவாற்) | 28 |
| பொரித்து | பொரித்து-வி | 29 |
| பொருத்தினான் | பொறுக்கினான் | 29 |
| பொருத்திய | பொறுக்கிய | 29 |
| மாணாக்கனுக்குச் | மாணாக்கனுக்குக் | 34 |
| மேடை | மேடை, | 34 |
| தீக்கடைக்கோல் | தீக்கடைகோல் | 35 |
| அரதனம் | அரதனம் (பெ) | 35 |
| அரவிந்தம் (வ.சொ) | அரவிந்தம் (வ.சொ)-தாமரை | 36 |
| அடிச்சுவடி | அரிச்சுவடி | 37 |
| எழுப்தல் | எழுப்புதல் | 37 |
| தொடக்கம் | பதினான்காம் நூற்றாண்டு தொடக்கம் | 39 |
| ஏற்பமே் | ஏற்படும் | 40 |
| உரஞ்சுதலாலே | உரசுதலாலே | 40 |
| -வெளியில் எடு | உருவு-வெளியில் எடு | 41 |
| வெள்ளொருக்கும் | வெள்ளெருக்கம் | 41 |
| கூற்றுவகை | கூத்துவகை | 43 |
| அக்கரணங்களாகக் | அகக்கரணங்களாகக் | 43 |
| தமிழிழத்தில் | தமிழீழத்தில் | 47 |
| கராசரம் | சராசரம் | 48 |
| காவியதின் | காவியத்தின் | 49 |
| காண்டாம் | காண்டம் | 49 |

| பிழை | திருத்தம் | பக்கம் |
|---|---|---|
| இணிமை | இனிமை | 50 |
| பாலைநில | பாலைநிலம் | 51 |
| அளவில் | அளவு | 51 |
| கணவருடன் | கண்டவருடன் | 53 |
| ஏற்கப்ப்டுகின்றன | ஏற்கப்படுகின்றன | 54 |
| தலைவிதிப்படி.) | தலைவிதிப்படி" | 55 |
| முன்று | மூன்று | 56 |
| நீரமப் பொருள் | நீர்மப்பொருள் | 56 |
| தன் | தமது | 57 |
| பருப்பும் | பருப்பம் | 68 |
| பென்னம்பலம் | பொன்னம்பலம் | 69 |
| பரம்பல் | பரப்பல் | 69 |
| பிரமேயமின்றிப் | பிரமேயமுமின்றிப் | 70 |
| ஒவ்வொர் | ஒவ்வோர் | 70 |
| இடக்கரடக்ல் | இடக்கரடக்கல் | 71 |
| மொருள்படும் | பொருள்படும் | 72 |
| போணவை | போணமை | 75 |
| மார்யு | மார்பு | 75 |
| ஒருவியும் நீங்கியும் | ஒருவியும் (நீங்கியும்) | 76 |
| காய்ந்துப் | காய்த்துப் | 76 |
| கூற்றுவன் சாவு | கூற்றுவன், சாவு | 77 |
| கிழிறங்கள் | கிழிறங்கல் | 78 |
| ஒருங்கணி | ஒழுங்கனி | 78 |
| வருணனை। | வருணனை | 79 |
| புரியபுல் புல்லின் | பசியபுல்லின் | 80 |
| விளைவு | விரைவு, அகற்சி | 80 |
| விருத்தாப்பியம் | விருத்தாப்பியம்-முதுமை | 81 |
| பதியராய் | புதியராய் | 81 |
| கடவுளுள் | கடவுள்களுள் | 83 |
| சேர்ந்துள்ளது | சேர்த்துண்டால் அது | 87 |
| குணக்குறியிலான் | குணங்குறியிலான் | 89 |
| Smbols | Symbols | 89 |
| தூற்றிவி | தூற்றி | 92 |
| பிறுகை (தொ.பெ) | பிறுகை (தொ.பெ)மேலெழல் | 94 |
| தன்நலமுடையார் | தந்நலமுடையோர் | 95 |
| வரண்ட | வறண்ட | 96 |

யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: T-74
திகதி:

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: T-74
திகதி:

PRINCIPAL
UNION COLLEGE
TELLIPPALAI

யா/யூனியன் கல்லூரி
நூலகம்
இலக்கம்: T-74
திகதி: